https://www.tnpscthervuthunaivan.com/

ISSN-0971-8362

# திட்டம்

ஆகஸ்ட் – 2023 வளர்ச்சிக்கான மாத இதழ்



## இந்திய சுதந்திரத்தின் அமுதப் பெருவிழா

**இந்திய விளையாட்டுகள்**
அனுராக் சிங் தாக்கூர்

**ஒருங்கிணைந்த அணுகுமுறை**
மன்சுக் மாண்டவியா

அதிகம் அறியப்படாத சுதந்திரப் போராட்ட வீரர்கள் – ஜெ.சுமதி

சேதுபதி மன்னர்களின் கோட்டைகள் – வே.இராஜகுரு

தமிழ் சினிமா கடந்து வந்த பாதை – தியடோர் பாஸ்கரன்

# ஜி20 சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை அமைச்சர்கள் கூட்டம்






சென்னையில் நடைபெற்ற ஜி20 சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை அமைச்சர்கள் கூட்டத்தில் 2023 ஜூலை 28 அன்று பிரதமர் காணொலி வழியே உரையாற்றினார்.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தெய்வப்புலவர் திருவள்ளுவரை மேற்கோள் காட்டிய பிரதமர், ‘‘தண்ணீரை மேலே ஈர்த்த மேகம் அதை மழை வடிவில் திருப்பித் தராவிட்டால், பெருங்கடல்கள் கூட சுருங்கிவிடும்‘‘ என்று கூறினார். ‘‘நதிகள் தங்களின் தண்ணீரைக் குடிப்பதில்லை. மரங்கள் அவற்றின் பழங்களைச் சாப்பிடுவதில்லை. மேகங்கள் தாங்கள் தரும் நீரினால் உருவாகும் தானியங்களை உண்பதில்லை’’. இயற்கை நமக்கு வழங்குவது போல இயற்கைக்கு நாமும் வழங்க வேண்டும் என்ற சமஸ்கிருத ஸ்லோகத்தை மேற்கோள் காட்டி பிரதமர் விளக்கினார். பூமித் தாயைப் பாதுகாப்பதும் பராமரிப்பதும் நமது அடிப்படைப் பொறுப்பு என்றும், இந்தக் கடமை நீண்ட காலமாக பலராலும் புறக்கணிக்கப்பட்டதால் இன்று அது ‘பருவநிலை நடவடிக்கை’ என்ற வடிவத்தை எடுத்துள்ளது என்றும் அவர் கூறினார். பருவநிலை மாற்றத்தாலும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளாலும் வளரும் நாடுகள் அதிகம் பாதிக்கப்படுகின்றன என்று குறிப்பிட்ட பிரதமர், ‘ஐ.நா பருவநிலை மாநாடு’ மற்றும் ‘பாரிஸ் ஒப்பந்தம்‘ ஆகியவற்றின் கீழ் அளிக்கப்பட்டிருக்கும் உறுதிமொழிகள் மீதான நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

புதைபடிவ எரிபொருள் அல்லாத மூலங்களிலிருந்து நிறுவப்பட்ட மின் திறனை 2030 ஆம் ஆண்டின் இலக்கை விட ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பே இந்தியா அடையவிருப்பதாக அவர் குறிப்பிட்டார். புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனில் உலகின் முதல் ஐந்து நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது என்று குறிப்பிட்ட அவர், சர்வதேச சூரியசக்திக் கூட்டணி, பேரிடர் சமாளிப்பு உள்கட்டமைப்பு கூட்டணி, ‘தொழில் மாற்றத்திற்கான தலைமைத்துவக் குழு’ உள்ளிட்ட கூட்டணிகள் மூலம் இந்தியா தனது கூட்டாளிகளுடன் தொடர்ந்து ஒத்துழைக்கும் என்றும் திரு. மோடி நம்பிக்கை தெரிவித்தார்.

பல்லுயிர்ப் பாதுகாப்பு, பேணுதல், மறுசீரமைப்பு, செறிவூட்டல் ஆகியவற்றில் எடுக்கப்பட்ட தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுத்துரைத்த பிரதமர், ‘‘இந்தியா மிகுந்த பன்முகத்தன்மை கொண்ட நாடு’’ என்று குறிப்பிட்டார். காட்டுத் தீயாலும், சுரங்கத் தொழிலாலும் பாதிக்கப்பட்ட முன்னுரிமை நிலப்பரப்புகளை மீட்டெடுத்து வருவது குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார். பூமியில் உள்ள ஏழு வகையான புலிகளைப் பாதுகாப்பதற்காக சமீபத்தில் தொடங்கப்பட்ட ‘சர்வதேசப் புலிகள் கூட்டணி’ பற்றியும் அவர் குறிப்பிட்டார். உலகின் 70 சதவீதப் புலிகள் இன்று இந்தியாவில் இருப்பது புலிகள் திட்டத்தின் விளைவாகும் என்று அவர் தெரிவித்தார். சிங்கப் பாதுகாப்பு இயக்கம் மற்றும் டால்பிஃன் பாதுகாப்பு இயக்கம் சம்பந்தமாக நடைபெற்று வரும் பணிகள் குறித்தும் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் முன்முயற்சிகள் மக்களின் பங்களிப்பால் இயக்கப்படுகின்றன என்பதை அடிக்கோடிட்டுக் காட்டிய பிரதமர், ‘அம்ரித் சரோவர்’ இயக்கத்தின் தனித்துவமான நீர் பாதுகாப்பு முன்முயற்சி, ஒரு வருடத்தில் 63,000க்கும் மேற்பட்ட நீர்நிலைகளை மேம்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டார். கங்கை நதியை தூய்மைப்படுத்துவதற்கான ‘நமாமி கங்கை இயக்கத்தில்’ சமூகத்தின் பங்களிப்பை திறம்படப் பயன்படுத்துவதை திரு. மோடி சுட்டிக்காட்டினார். இதன் விளைவாக கங்கை நதியின் பல பகுதிகளில் கங்கை டால்பிஃன் மீண்டும் தோன்றியது முக்கியமான சாதனையாகும். சதுப்பு நிலப் பாதுகாப்பில் ராம்சர் தளங்களாக நியமிக்கப்பட்டுள்ள 75 சதுப்பு நிலங்களைப் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், ஆசியாவிலேயே மிகப் பெரிய ராம்சார் தளங்களின் வலையமைப்பை இந்தியா பெற்றுள்ளது என்றார்.

‘சிறு சிறு தீவு நாடுகளை’ ‘பெரிய பெருங்கடல் நாடுகள்’ என்று குறிப்பிட்ட பிரதமர், பெருங்கடல்கள் அவர்களுக்கு ஒரு முக்கியமான பொருளாதார வளம் என்றும், உலகெங்கிலும் உள்ள மூன்று பில்லியனுக்கும் அதிகமான மக்களின் வாழ்வாதாரங்களுக்கு கடல்கள் உதவுவதாகவும் கூறினார். விரிவான பல்லுயிர் பெருக்கத்தின் தாயகம் கடல் என்று கூறிய அவர், கடல் வளங்களின் பொறுப்பான பயன்பாடு பற்றியும் மேலாண்மையின் முக்கியத்துவம் பற்றியும் வலியுறுத்தினார்.

மரம் நடுதல், நீர் பாதுகாப்பு மற்றும் நிலையான விவசாயம் போன்ற நடவடிக்கைகள் மூலம் இப்போது தனிநபர்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பிறர் வருவாயை ஈட்ட முடியும் என்று அவர் விளக்கினார்.

இயற்கை அன்னைக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகளை நாம் மறந்துவிடக் கூடாது என்று பிரதமர் வலியுறுத்தினார். ‘‘இயற்கை அன்னை பிளவுபட்ட அணுகுமுறையை விரும்பவில்லை. ‘‘வசுதைவ குடும்பகம்‘‘ ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்‘‘ என்பதே இயற்கை அன்னையின் விருப்பம் என்று கூறி பிரதமர் தமது உரையை நிறைவு செய்தார்.

– பத்திரிகை தகவல் மையம்

https://www.tnpscthervuthunaivan.com/

# திட்டம்

மாத இதழ்

மலர் 54
இதழ் 07

ஆகஸ்ட் 2023
ஷ்ரவண – பத்ரா 1945
சோபகிருது ஆடி – ஆவணி

முதன்மை ஆசிரியர்
**மனோக்யா**
முதுநிலை ஆசிரியர்
**சஞ்சய் கோஷ்**

கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டங்களால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துகளை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.

**சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :**
**ஆசிரியர்** (Editor)
**திட்டம்**
**வெளியீட்டுப்பிரிவு**
**A Wing இராஜாஜி பவன்**
**பெசன்ட் நகர், சென்னை -600 090**
**தொலைபேசி : 044 24465382, 044 24917673.**
**மின்னஞ்சல்:** editorthittam@gmail.com
bmsechennai@gmail.com

தலையங்கம் 04
தேசத்தைப் பிணைக்கும் இந்திய விளையாட்டுகள்
– அனுராக் சிங் தாக்கூர் 05
ஒருங்கிணைந்த முழுமையான அணுகுமுறை
– டாக்டர் மன்சுக் மாண்டவியா 12
75ஆம் ஆண்டில் இந்தியா அடுத்து என்ன?
– வி.அனந்த நாகேஸ்வரன் 19
ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்
– ஜி.கிஷன் ரெட்டி 24
தமிழ் சினிமா கடந்து வந்த பாதை
– தியடோர் பாஸ்கரன் 27
அதிகம் அறியப்படாத சுதந்திரப் போராட்ட வீரர்கள்
–ஜெ.சுமதி 34
சேதுபதி மன்னர்களின் கோட்டைகள்
– வே.இராஜகுரு 37
தொழில்துறைக்கான தொலைநோக்குப் பார்வை @75
– அன்ஷுமன் கண்ணா 48
இந்தியத் திரைப்படத்துறையின் பயணம்
– அமிதவ நாக் 54
தமிழகப் பாரம்பரிய விளையாட்டுகள்
– வெ.பாலாம்பாள் 59
தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்
–அனில் சகஸ்ரபுத்தே 70

Log on to **http://publicationsdivision.nic.in/**
in collaboration with **bharatkosh.gov.in**



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# கொண்டாட்டமே வாழ்க்கை

இந்தியா பண்டிகைகளின் தேசம். தங்களின் நம்பிக்கைகள், பல்வேறு நாள்காட்டிகள், சந்திரனின் பிறை, தெய்வங்கள், உயரிய துறவிகள், மாநிலப் பழக்கவழக்கங்கள் என வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் அடிப்படையாகக் கொண்ட எண்ணற்ற கொண்டாட்டங்களில் இந்திய மக்கள் ஆண்டு முழுவதும் ஈடுபடுகின்றனர். இந்தத் திருவிழாக்கள் பன்முகத்தன்மையைப் பிரதிபலிக்கின்றன. நாடு முழுவதும் உள்ள மக்களை ஒன்றிணைக்கின்றன. இந்தியாவில் கொண்டாட்டங்களும் சடங்குகளும் குழந்தை பிறப்பதற்கு முன்பே தொடங்குகின்றன. உண்மையாகவே, இந்தியாவில் கொண்டாட்டமே வாழ்க்கை முறையாக இருந்து வருகிறது.

இத்தகைய கொண்டாட்டங்களுக்கும், இந்தியாவின் பண்டிகை உணர்வுகளுக்கும் தேசியவாத காரணத்தை அளித்து, பொதுவானதொரு கொண்டாட்டத்தின் மூலம் அனைத்து இந்தியர்களையும் ஒன்றிணைத்து, இந்திய சுதந்திரத்தின் அமிர்தப் பெருவிழா (AzadikaAmritMahotsav - AKAM) தொடங்கியது. 2021ஆம் ஆண்டு மார்ச் 12 அன்று 75 வார கொண்டாட்டம் தொடங்கி, 75ஆவது சுதந்திர தினமான ஆகஸ்ட் 15, 2023 அன்று நிறைவு பெற்றது.

சுதந்திரப் போராட்டத்தின் அடிப்படைத் தூண்களான தனித்துவமான சிந்தனைகள், சாதனைகள், செயல்பாடுகள், தீர்மானங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தப் பெருவிழா மக்கள் பங்கேற்பின் உணர்வைத் தீர்க்கமாகக் கொண்டாடியது. கடந்த 75 ஆண்டுகால நாட்டின் சாதனைகளை உலகிற்கு எடுத்துரைத்ததுடன், அடுத்த 25 ஆண்டுகளுக்கான தீர்மானத்திற்கான உறுதியையும் இது வழங்குகிறது. வீடுகள் தோறும் தேசியக் கொடி ஏற்றுதல், வந்தே பாரதம் அகில இந்திய நாட்டியப் போட்டிகள், கலாஞ்சலி போன்ற பல மாபெரும் நிகழ்வுகள் உட்பட அமிர்தப் பெருவிழாவின் கீழ் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. கூட்டுப் பிரச்சாரங்கள் மூலம் மக்கள் இயக்கத்தை இந்தியாவிலும், உலகம் முழுவதிலும் மேம்படுத்துவதை அமிர்தப் பெருவிழா நோக்கமாகக் கொண்டிருந்தது. பஞ்ச பூதத்துடன் தொடர்புடைய ஒன்பது கருப்பொருள்களுடன் மக்கள் இயக்கம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. பெண்களும் குழந்தைகளும், பழங்குடியினருக்கு அதிகாரமளித்தல், நீர், கலாச்சாரப் பெருமை, சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறை (LiFE), ஆரோக்கியமும் நல வாழ்வும், அனைவரையும் உள்ளடக்கிய மேம்பாடு, ஆத்மநிர்பர் பாரத், ஒற்றுமை ஆகியவை ஒன்பது கருப்பொருள்கள் ஆகும்.

பிரதமர்களின் வாழ்க்கை, அவர்களின் பங்களிப்புகள் ஆகியவற்றின் வழியாக சுதந்திரத்திற்குப் பிறகான இந்தியாவின் வரலாற்றைக் கூறும் பிரதான் மந்திரி சங்கராலயா, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சிலை, இந்தியா கேட் அருகே உள்ள கர்தவ்யா பாதை, அதிநவீன புதிய பாராளுமன்றக் கட்டிடம் உள்ளிட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல நினைவுச்சின்னங்களும் கட்டமைப்புகளும் இந்த காலகட்டத்தில் தான் தேசத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டன.

ஒவ்வொரு துறையும் இந்த கொண்டாட்டத்திற்கு முக்கிய பங்களிப்பை அளித்தது. இது உண்மையிலேயே ஒரு மக்கள் இயக்கமாக மாறியது. பெண்களுக்கு மேலும் பொருளாதார வலுவூட்டுவதற்காக புதிய சேமிப்புத்திட்டம் (Mahila Samman Bachat Patra) தொடங்கப்பட்டது. சிறுதானியங்கள், யோகா ஆகியவற்றின் மூலம் அனைவருக்கும் ஆரோக்கியமான வாழ்க்கை முறை தெரிவுகளை அளித்தல், சிறந்த சுதந்திர போராட்ட வீரர்களின் கதைகள், நாடு முழுவதும் உள்ள தாலாட்டுப் பாடல்களைப் பல்வேறு மாநில மொழிகளில் அளித்தல், மாற்றத்தின் கதைகள், தனித்துவமான பாரம்பரியங்களின் டிஜிட்டல் மாவட்டக் களஞ்சியம் போன்ற பற்பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியாவை அதன் பரிணாமப் பயணத்தில் இந்த அளவுக்குக் கொண்டு வந்து சேர்த்ததற்கு கருவியாக இருந்ததோடு மட்டுமல்லாமல், கர்தவ்ய காலத்தின் பார்வையை செயல்படுத்தும் சக்தியையும் ஆற்றலையும் தங்களுக்குள் வைத்திருக்கும் இந்திய மக்களுக்காக இவை யாவும் அர்ப்பணிக்கப்பட்டன.

நாம் இன்று இருக்கும் நிலைக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்திருக்கும்மிக உயரிய கடந்த காலப் பணிகளுக்கான பாராட்டே யோஜனாவின் இந்த இதழ். பல்வேறு துறைகளும் முயற்சிகளும் இந்தியாவின் வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பைச் செய்திருக்கின்றன. கடமை, உறுதிப்பாடு, தீர்மானம் ஆகியவற்றின் காலம்இது.

கருணை, இரக்கம், நற்குணம், அர்ப்பணிப்பு போன்ற வழிகளில் இந்த நோக்கத்திற்காகப் பங்களிப்பதற்கு நாம் முயற்சிப்போம். இந்த விழா நம் வாழ்வின் ஒரு அங்கமாகவே தொடரட்டும். வரும் தலைமுறைகளுக்கு இந்தியாவை சிறந்த இடமாக மாற்ற உறுதி ஏற்போம்.

– ஆசிரியர்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# தேசத்தைப் பிணைக்கும் இந்திய விளையாட்டுகள்

– அனுராக் சிங் தாக்கூர்

புதிய இந்தியாவைக் கட்டி எழுப்புவதில் விளையாட்டுகள் ஆற்றும் பங்கு என்பது எந்த அளவுக்குத் தனித்துவமானதோ, அதே அளவுக்குப் பன்முகத் தன்மை கொண்டதும் ஆகும். இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளாக விளையாட்டுக்கான முக்கியத்துவம் அதிகரித்து வருவதற்குக் காரணம் இந்தியப் பிரதமரின் அசாதாரணமான தொலைநோக்குத் திட்டங்கள் தான். அவர் தான் கேலோ இந்தியா திட்டம், ஒலிம்பிக் பரிசு மேடையை இலக்கு வைக்கும் திட்டம், ஃபிட் இந்தியா இயக்கம் உள்ளிட்ட இந்தியாவில் விளையாட்டின் பங்கை மாற்றியமைத்த பல்வேறு விளையாட்டுத் திட்டங்களுக்கு வடிவம் கொடுத்தவராவார். அதன் மூலம் தேசிய ஒருமைப்பாடு, மகளிருக்கு அதிகாரம் அளித்தல், இந்தியக் குடிமக்களின் ஆரோக்கியம் மற்றும் உடற்கட்டு, இளைஞர்களிடையே வாழ்க்கைத் திறன்களை வளர்த்தெடுத்தல், தேசியப் பெருமை குறித்த ஆழமான உணர்வை இந்திய மக்களிடம் ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்கு விளையாட்டு தான் முக்கியமான கிரியா ஊக்கியாக உள்ளது.

விளையாட்டுத் துறையில் இந்தியா சில ஆண்டுகளாக குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டி வருகின்றது. 2020ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இதுவரை இல்லாத வகையில், இந்திய வரலாற்றிலேயே முதன் முறையாக தடகளப் போட்டிகளில் தங்கப்பதக்கம் உள்ளிட்ட மொத்தம் ஏழு பதக்கங்களை வென்றுள்ளது. அதுமட்டுமின்றி, வரலாறு காணாத வகையில் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் 17 பதக்கங்களையும், காது கேளாதவர்களுக்கான ஒலிம்பிக் போட்டிகளில் 17 பதக்கங்களையும் இந்தியா வென்றுள்ளது. அதுமட்டுமின்றி, 72 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக தாமஸ் கோப்பையை இந்தியா வென்றுள்ளது. இவை அனைத்திற்கும் மேலாக நடப்பாண்டில் உலகக்குத்துச் சண்டைப் போட்டியில் வாகையர் பட்டம் வென்ற நிஹாத் ஜரின் இந்தியாவைச் சேர்ந்தவராவார்.



அண்மைக்காலத்தில் இந்தியாவில் இறகுப் பந்தாட்ட இரட்டையர் இணையரான சாத்விக், சிராக் ஆகியோர் 1000 இந்தோனேஷியன் சூப்பர் சீரிஸ் போட்டியில் இரட்டையர் பிரிவில் பட்டம் வென்றனர். இந்திய ஆடவர் இரட்டையர் அணி இந்தப் பட்டத்தை வென்றது இதுவே முதல் முறையாகும். அதேபோல், ஆசிய சாம்பியன் ஷிப் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் வாள்வீச்சு வீராங்கனை பவானி தேவி வெண்கலப் பதக்கம் வென்றார். ஆசிய சாம்பியன் ஷிப் போட்டிகளில் வாள் வீச்சுப் போட்டியில் இந்தியா பதக்கம் வெல்வது இதுவே முதல் முறையாகும். குறிப்பிடத்தக்க இந்த இரு வெற்றிகளும் இரண்டு நாட்கள் இடைவெளியில் இந்தியாவுக்குக் கிடைத்தன. அதற்கு ஒரு வாரம் முன்பாக, ஜூனியர் ஆசியக்கோப்பை ஹாக்கிப் போட்டிகளில் இந்திய ஆடவர் அணியும், மகளிர் அணியும் தங்கப் பதக்கம் வென்றனர். விளையாட்டு உலகில் இந்தியாவின் வலிமை எந்த அளவுக்கு அதிகரித்துவருகிறது என்பதற்கு இதுவே சான்றாகும். இந்திய விளையாட்டு வீரர்கள் ஒவ்வொரு முறை பதக்கம் வெல்லும் போதும், உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் ஒவ்வொரு இந்தியரின் மனதிலும் எழும் பெருமித உணர்வு ஈடு இணையற்றது. பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் இந்தியர்கள் வெல்லும் பதக்கமும், அந்தப் பதக்கத்தை வழங்குவதற்கான நிகழ்வின் போது



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

இசைக்கப்படும் இந்திய தேசிய கீதமும், ஒட்டுமொத்த நாட்டையும் ஒன்றாகப் பிணைக்கிறது. வேறு சில நிகழ்வுகளால் இத்தகைய உணர்வை ஏற்படுத்த முடியும் என்றாலும் கூட, அவற்றை விட அதிகமாக நாட்டைப் பிணைப்பது விளையாட்டுப் போட்டிகளில் கிடைக்கும் வெற்றிதான்.

அதே நேரத்தில் விளையாட்டுப் போட்டிகளில் அழகும் பெருமையும் உடனடியாக குவிக்கப்படும் வெற்றிகளில் மட்டும் அடங்கி இருப்பதில்லை. மாறாக, அத்தகைய வெற்றிகள் ஒட்டுமொத்த இளைய தலைமுறையின் மனநிலையையும் மாற்றி அமைக்கும் திறனை எந்த அளவுக்குக் கொண்டிருக்கின்றன, விளையாட்டுப் போட்டிகளில் தங்களின் முழுத் திறனையும் வெளிப்படுத்தி, வெற்றி பெறுவதை இலக்காகக் கொண்ட இளைஞர்களைக் கொண்ட இந்தியாவை அந்த வெற்றிகள் எவ்வாறு உருவாக்குகின்றன? என்பதில் தான் விளையாட்டின் அழகு உள்ளது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், “நீங்கள் விளையாடினாலே வெற்றி மலரும்” என்று குறிப்பிட்டதைப் போன்று, விளையாட்டுப் போட்டிகளில் ஒருவர் வெற்றி பெறுகிறாரா? அல்லது தோல்வி அடைகிறாரா? என்பது முக்கியமல்ல, மாறாக, இளைஞர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று விளையாட வேண்டும் என்பது தான் மிகவும் முக்கியமாகும். ஏனென்றால், விளையாட்டுப் போட்டிகளில் தான் வாழ்க்கையின் பாடங்கள் மிகவும் உள்ளார்ந்து பிணைந்திருக்கின்றன. அதன் மூலம் கவனம், அர்ப்பணிப்புணர்வு, விளையாட்டுகள் நமக்குக் கற்று தரக்கூடிய இறுதிவரை விடாமுயற்சியுடன் போராடக் கூடிய




திறன் ஆகியவற்றுடன் தேசத்தைக் கட்டி எழுப்பக்கூடிய எதிர்காலத் தலைமுறையை நம்மால் உருவாக்க முடியும்.

புதிய இந்தியாவைக் கட்டி எழுப்புவதில் விளையாட்டுகள் ஆற்றும் பங்கு என்பது எந்த அளவுக்குத் தனித்துவமானதோ, அதே அளவுக்கு பன்முகத் தன்மை கொண்டதுமாகும். இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளாக விளையாட்டுக்கான முக்கியத்துவம் அதிகரித்து வருவதற்கு காரணம் இந்தியப் பிரதமரின் அசாதாரணமான தொலைநோக்குத் திட்டங்கள் தான். விளையாட்டுப் போட்டிகளில் இந்தியப் பிரதமர் கொண்டுள்ள தனிப்பட்ட ஆர்வம், விளையாட்டு வீரர்கள் தங்களின் முழுத்திறனையும் வெளிப்படுத்தத் தூண்டுகின்றன என்பது மட்டுமின்றி, பிரதமரின் ஆர்வம் தான் பல்வேறு விளையாட்டுத் திட்டங்களுக்கு வடிவம் கொடுக்கவும் காரணமாக இருந்திருக்கிறது. பிரதமரால் வடிவம் கொடுக்கப்பட்ட விளையாட்டுத் திட்டங்களில், கேலோ இந்தியா திட்டம், ஒலிம்பிக் பரிசு மேடையை இலக்கு வைக்கும் திட்டம், ஃபிட் இந்தியா இயக்கம் உள்ளிட்ட இந்தியாவில் விளையாட்டின் பங்கை மாற்றியமைத்த பல்வேறு விளையாட்டுத் திட்டங்களும் அடங்கும். அதன் மூலம் தேசிய ஒருமைப்பாடு, மகளிருக்கு அதிகாரம் அளித்தல், இந்தியக் குடிமக்களின் ஆரோக்கியம் மற்றும் உடற்கட்டு, இளைஞர்களிடையே வாழ்க்கைத் திறன்களை வளர்த்தெடுத்தல், தேசியப் பெருமை குறித்த ஆழமான உணர்வை இந்திய மக்களிடம் ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்கு விளையாட்டு தான் முக்கிய கிரியா ஊக்கியாக உள்ளது.

**மண்டல வேற்றுமைகளை இணைக்கும் விளையாட்டு**

2016ஆம் ஆண்டில் கேலோ இந்தியா திட்டத்தை இந்தியப் பிரதமர் உருவாக்கி அறிவித்தார். 2017ஆம் ஆண்டில் அத்திட்டம் சீரமைக்கப்பட்டது. இந்தியா முழுவதும் உள்ள அடித்தட்டு மக்களில் விளையாட்டில் ஆர்வமும், திறமையும் கொண்டவர்களைக் கண்டறிந்து, அவர்களின் விளையாட்டுத் திறனை வளர்த்தெடுப்பது தான் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தியாவின் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு தேசிய அளவிலான போட்டிகளில் தங்களின் திறமையை வெளிப்படுத்தி, அடுத்தக்கட்டப் பயிற்சிகளைப் பெறுவதற்கு அடையாளம் காணப்படுவதற்கு இந்தத் திட்டம்தான் மிகச்சிறந்த வாய்ப்பாக அமைந்தது. இந்தத் திட்டத்தின்படி, 2500க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு ஆண்டுக்கு தலா 6.28இலட்சம் கோடி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. அதிநவீன வசதி கொண்ட விளையாட்டு மையங்களில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுவதுடன், உணவு, தங்குமிடம், விளையாட்டுக் கருவிகள், கல்வி ஆகியவையும் இந்த ஊக்கத்தொகையில் இருந்து வழங்கப்படுவது மட்டுமின்றி, மாதந்தோறும் ரொக்கப்படியாக



https://www.tnpscthervuthunaivan.com/

ரூ.10,000 வழங்கப்படுகிறது. இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தடகள வீரர்கள் அனைவருக்கும் இடையிலான ஓர் ஒற்றுமை என்னவென்றால், இவர்கள் அனைவரும் அடிமட்ட அளவில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டுத் திறன் கொண்டவர்கள் என்பது மட்டும் தான். அவர்களுக்கு இடையிலான ஒற்றுமை அத்துடன் நின்றுவிடுகிறது. பூகோள ரீதியாக இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் இருந்தும், பல்வேறு சமூகப் பொருளாதார பின்னணியில் இருந்து வரும் விளையாட்டு வீரர்களுக்கு, இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் உள்ள கேலோ இந்தியா அகாடெமிகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகளில் மட்டும் பயிற்சி அளிக்கப்படுவதில்லை. மாறாக, அவர்கள் தங்களுடன் தங்கி பயிற்சி பெறும் மற்றவர்களிடம் இருந்து பல்வேறு வகையான கலாச்சாரங்களை உள்வாங்கிக் கொள்கின்றனர். அதன் மூலம், இந்தியாவின் அடையாளமான பன்முகத் தன்மை மீது மிகுந்த மரியாதையையும், அன்பையும் உருவாக்கிக் கொள்கின்றனர். கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளுக்கும் இது பொருந்தும். இந்தப் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள், பயிற்சியாளர்கள், அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் வந்து 10 நாட்களுக்கும் மேலாகத் தங்கி இருந்து, பயிற்சி பெற்று, போட்டிகளில் பங்கேற்கின்றனர். ஒற்றை இந்தியா, வலிமையான இந்தியா என்ற தத்துவம் இத்தகைய விளையாட்டுப் போட்டிகளின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

2018ஆம் ஆண்டில் தொடங்கி, இதுவரை எட்டு முறை கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளும், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டிருக்கின்றன. இந்தப் போட்டிகளில் 59,833 பேர் கலந்துகொண்டு, விளையாட்டுப் போட்டிகளின் மூலமான இத்தகைய கலாச்சாரப் பரிமாற்றங்களை எதிர்கொண்டு இருக்கின்றனர்.

**தேசத்தைக் கட்டி எழுப்புவதை நோக்கிய விளையாட்டு உள்கட்டமைப்பு**

இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள், விளையாடுவதற்கான இடங்களையும், பயிற்சி மையங்களையும் எளிதில் அணுகுவதை உறுதிசெய்யும் நோக்குடன், கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் இந்தியா முழுவதும் விளையாட்டுக் கட்டமைப்பும் அதிகரிக்கும் நோக்குடன் 2014ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உள்ளூர் பயிற்சியாளர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரும் நோக்கத்துடன், இந்தியாவின் ஒவ்வொரு மாவட்டத்திலும் கேலோ இந்தியா பயிற்சி மையங்களை ஏற்படுத்துவதற்கான 1000 கேலோ இந்தியா மையங்கள் திட்டம் தொடங்கப்பட்டது. இந்தியாவில் விளையாட்டுச் சூழல் அமைப்பில் மிக முக்கியமான மைல் கல்லாக பார்க்கப்படுகிறது. இந்தியாவின் பல்வேறு மாநில அரசுகளுடன் மத்திய அரசு ஏற்படுத்திக் கொண்ட கூட்டாண்மையின் பயனாக, மொத்த 31 இடங்களில் கேலோ இந்தியா உயர் சிறப்புப் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த மையங்களில் பல்வேறு விளையாட்டுக்களில் கவனம் செலுத்தும் நோக்கத்துடன், விளையாட்டு வீரர்களுக்கு அதிநவீனப் பயிற்சி அளிக்கும் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர, கேலோ இந்தியா அமைப்பால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட 266 பயிற்சி மையங்களும் 500 தனியார் பயிற்சி மையங்களும், செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, 27 பள்ளிகள் கேலோ இந்தியா அமைப்பால் தத்தெடுக்கப்பட்டுள்ளன. அங்கு கேலோ இந்தியா அமைப்பின் விளையாட்டு வீரர்கள் பயிற்சி மேற்கொள்வார்கள். இதன் மூலம், இந்தியாவில் விளையாட்டுக் கட்டமைப்புக்கு கூடுதல் வலிமை சேர்க்கப்பட்டுள்ளது. இந்தியாவில் விளையாட்டை முழுநேரத் தொழிலாகத் தேர்ந்தெடுத்துள்ள வீரர்களுக்கு ஏராளமான வசதிகள் ஒருபுறம் செய்து தரப்படும் நிலையில், விளையாட்டுக் கலாச்சாரம் வளர்த்தெடுக்கப்படுவதை உறுதிசெய்யும் நோக்குடன், 17,500 விளையாட்டுத் திடல்கள் அடையாளம் காணப்பட்டு, அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன. அதன் மூலம் பெற்றோர்கள் தாங்கள் வசிக்கும் பகுதிகளில் தங்களின் குழந்தைகள் விளையாடுவதற்கான இடத்தை எளிதாக அடையாளம் கண்டு தேர்ந்தெடுக்க முடியும்.

இந்தியாவின் விளையாட்டுக் கட்டமைப்பை மேம்படுத்தும் பணிகள் எந்த அளவுக்கு தேசத்தைக் கட்டி எழுப்புவதற்கு உதவுகின்றன என்பதை ஒரு புள்ளிவிவரம் தெளிவாக விளக்கும். 2010ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

யிலான காலத்தை விளையாட்டுக் கட்டமைப்பு தொடர்பான 38 திட்டங்கள் மட்டுமே வெற்றிகரமாக முடிக்கப்பட்டன. அதே நேரத்தில், 2014ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் கேலோ இந்தியா திட்டத்தில் 293 விளையாட்டுக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. அவற்றில் 146 திட்டங்கள் ஏற்கெனவே நிறைவேற்றி முடிக்கப்பட்டுவிட்டன. இத்தகைய விளையாட்டுக் கட்டமைப்புகளை உருவாக்கியது விளையாட்டு வீரர்களும், விளையாட்டு ஆர்வலர்களும் தங்களின் கனவை நனவாக்கிக் கொள்வதற்கு உதவிசெய்ததோடு மட்டுமின்றி, இந்தியாவின் ஒட்டுமொத்த பொருளாதார உற்பத்தி மதிப்புக்கும் பெருமளவில் பங்களித்தது. ஏராளமான மக்களுக்கு வேலைவாய்ப்பையும் இது உருவாக்கிக் கொடுத்துள்ளது. அந்த வகையில், தற்சார்பு இந்தியாவை உருவாக்குவதில் விளையாட்டுகளின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

**விளையாட்டின் மூலம் ஏற்படுத்தப்படும் அனைவரையும் உள்ளடக்கிய தன்மை**

இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களை விளையாட்டு எவ்வாறு ஒன்றாக்குகிறதோ, அதே போல், பொருளாதார அடிப்படையிலும் பூகோள அடிப்படையிலும் புறக்கணிக்கப்பட்ட பெண் களுக்கும், இளைஞர்களுக்கும் அதிகாரம் அளிப்பதற்கும் விளையாட்டுகள் பெரும் உதவி செய்துள்ளன. விளையாட்டுப் போட்டிகளில் பெண்கள் அதிக அளவில் பங்கேற்பதை உறுதி செய்யவேண்டும் என்ற நோக்குடன், கேலோ இந்தியா பெண்கள் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான சிறப்பு விதிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. கேலோ இந்தியா மகளிர் விளையாட்டுப் போட்டிகள் திட்டம் கடந்த ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து இப்போது வரை நாடு முழுவதும் 50 இடங்களில் நடத்தப்பட்ட 27 வகையான விளையாட்டுப் போட்டிகளில் 1.25இலட்சத்திற்கும் கூடுதலான பெண்கள் கலந்து கொண்டிருக்கின்றனர். இன்னும் கேட்டால், விளையாட்டுப் போட்டிகளில் தங்களின் முத்திரையைப் பதிக்கவேண்டும் என்பதற்காக, பல்வேறு பொருளாதாரத் தடைகளையும், சமூக முட்டுக்கட்டைகளையும் எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த பெண்கள், கேலோ இந்தியா மகளிர் விளையாட்டுப் போட்டிகள் தங்களின் வாழ்க்கையைத் தலைகீழாக மாற்றி விட்டதாக ஒப்புக்கொள்கின்றனர். இதேபோல், இன்னும் ஏராளமான வெற்றிக்கதைகள் விளையாட்டுச் சூழல் அமைப்பில் சொல்லப்படுகின்றன. குத்துச் சண்டைப் போட்டிகளில் உலக சாம்பியன் பட்டம் வென்ற வீராங்கனை நிக்கத் ஜரினின் கதை மிகவும் சுவையானது. நிக்கத் ஜரின் இளம் வயதில் இருந்தே குத்துச்சண்டைப் போட்டிகளில் ஆர்வம் கொண்டவராக இருந்தார். அவர் குத்துச்சண்டை போட்டிகளில் பங்கேற்பதை அவரது தந்தையும் ஆதரித்தார். ஆனால், நிக்கத் ஜரினின் தந்தை, தமது மகளை குத்துச்சண்டை வீராங்கனையாக ஆக்குவதற்கு சமூகத்தின் பல்வேறு தரப்புகளில் இருந்தும் எதிர்ப்புகள் எழுந்த நிலையில், அதையெல்லாம் மீறி வரவேண்டி இருந்தது. நிக்கத் ஜரின் குத்துச்சண்டைப் போட்டிகளில் பங்கேற்பதற்கு சமூகத்தின் பல்வேறு தரப்புகளில் இருந்து எதிர்ப்புகள் எழுந்தாலும் கூட, குத்துச்சண்டை தான் தமது வாழ்க்கை என்பதில் நிக்கத் உறுதியாக இருந்தார். இப்போது, குத்துச் சண்டைப் போட்டிகளில் சாதனை படைத்த நிலையில், தமது சமூகத்தைச் சேர்ந்த ஏராளமான இளம் பெண்களை தங்களின் வாழ்க்கையை மாற்றி அமைப்பதற்காக விளையாட்டைத் தேர்ந்தெடுக்க தமது வெற்றி தூண்டியிருக்கிறது என்று நிக்கத் ஜரின் கூறியிருக்கிறார்.

நம்பிக்கை மிகுந்த, திடீரென ஏற்படும் முட்டுக்கட்டைகளால் தளர்ந்துவிடாத புதிய இந்தியாவை உருவாக்குவதில் விளையாட்டுகள் ஆற்றிய பங்கு குறித்து உலகிற்கு எடுத்துரைக்கக் கூடிய வெற்றிக் கதைகள் இவைகள் ஆகும். ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்றவர்களில் கிட்டத்தட்ட 50 விழுக்காட்டினர் பெண்கள் என்பதிலும், இந்தியாவால் கைப்பற்றப்பட்ட பதக்கங்களில் கிட்டத்தட்ட 50 விழுக்காடு பதக்கங்கள் மீராபாய் சானு, லாவ்லினான், போர்கோஹைன், பி.வி.சிந்து உள்ளிட்ட பெண்களால் வெல்லப்பட்டன என்பதிலும் நான் மிகுந்த பெருமை அடைகின்றேன்.

விளையாட்டுகளில் பங்கேற்கும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. பெண்களை பல்வேறு பிரிவினரும் எவ்வாறு பார்க்கின்றனர்? என்ற பார்வையை இது மாற்றியமைக்கும். பெண்களைப் போலவே இந்தியாவின் அனைத்துப் பகுதிகளை, குறிப்பாக ஜம்மு–காஷ்மீர் மற்றும் இடதுசாரித் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த இளைய சமுதாயத்தை



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

முதன்மைச் சமுதாயத்துடன் உள்ளடக்குவதற்கான கிரியா ஊக்கியாக விளையாட்டு பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்காக தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜம்மு–காஷ்மீர் பகுதியில் விளையாட்டுக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக 50 கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல், இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.10இலட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த முயற்சிகள் அந்தப் பகுதிகளில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. எடுத்துக்காட்டாக, ஒரு காலத்தில் தவறாக வழிநடத்தப்பட்டு, பிறர் மீது கற்களை வீசும் செயலில் ஈடுபடுத்தப்பட்ட குழந்தைகள், இப்போது அந்தப் பகுதியில் சிறந்த கால்பந்து வீரர்களாக உருவாகியுள்ளனர். தீவிரவாதச் செயல்களின் காரணமாக இரவு நேரத்தில் நடமாடவே முடியாத இடங்கள் என்று அஞ்சப்பட்ட பகுதிகள் எல்லாம், இப்போது இரவு நேரக் கால்பந்துப் போட்டிகள் நடைபெறும் மையங்களாக மாறியிருக்கின்றன. இதுதான் விளையாட்டுகள் உருவாக்கியுள்ள, உருவாக்கி வரும் மாயாஜாலமாகும்.

மாற்றுத்திறன் விளையாட்டு வீரர்களை உள்ளடக்குவதற்காகவும், சிறப்பு இடம் உருவாக்கப்பட்டிருக்கிறது. 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் பெர்லின் நகரில் நடைபெற்ற சிறப்புக் கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவில் இருந்து



198 மாற்றுத்திறன் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர். இதற்காக, இந்தியா அரசு ரூ.7.7 கோடி நிதி வழங்கியது மட்டுமின்றி, அப்போட்டிக்கு அவர்களைத் தயார்படுத்துவதற்காக இந்திய விளையாட்டு ஆணையத்திற்குச் சொந்தமாக தில்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் ஆயத்தப் பயிற்சி முகாமையும் நடத்தியது. மாற்றுத்திறன் வீரர்களுக்கான சிறப்பு ஒலிம்பிக் போட்டிக்காக இந்திய அரசால் இப்போது ஒதுக்கப்பட்ட நிதிதான் இதுவரை ஒதுக்கப்பட்டதில் மிகவும் அதிகம் என்பது ஒருபுறம் இருக்க, அந்தப் போட்டிகளில் பங்கேற்கும் இந்திய வீரர்களும், வீராங்கனைகளும் இதுவரை இல்லாத வகையில், மிக அதிக எண்ணிக்கையிலான பதக்கங்களைக் கைப்பற்றி வருவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

### விளையாட்டால் உத்வேகம் பெற்ற ஃபிட் இந்தியா இயக்கம்

விளையாட்டு என்பது விளையாட்டு வீரர்களுக்கான தொழிலாகும். இது விளையாட்டு ஆர்வலர்களுக்கு வேட்கையாகும். ஆனால், இந்தியாவில் உள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் விளையாட்டும், உடற்கட்டும் வாழ்க்கை முறையாக மாறவேண்டும். ஏனென்றால், உடலைக் கட்டாக வைத்திருக்கும் குடிமக்களால் தான் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் பங்களிக்க முடியும். இத்தகைய எண்ணத்துடன் தான், விளையாட்டு வீரர்களுக்கும் அல்லது உடற்கட்டு வல்லுநர்களுக்கும் மட்டுமல்லாமல், ஒவ்வொரு குடிமகனுக்கும் உடற்கட்டு என்பதை வாழ்க்கைமுறையாக மாற்றும் நோக்குடன் ஃபிட் இந்தியா இயக்கத்தை 2019ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமர் அறிவித்தார். “உடற்கட்டை ஏற்படுத்துவதற்கான வழி... தினமும் அரை மணி நேர உடற்பயிற்சி” என்ற இந்தியப் பிரதமரின் அறைகூவல் நாடு முழுவதும் எதிரொலித்து, அதற்குப் பெரும் பயன் கிடைத்திருக்கிறது. பிரதமரின் அறைகூவலை ஏற்று, மராத்தான் ஓட்டங்கள், சைக்கிள் போட்டிகள், ஓட்டப் பந்தயங்கள் போன்ற உடற்கட்டை ஏற்படுத்தக்கூடிய போட்டிகள் ஆண்டு முழுவதும் நடத்தப்பட்டு, அதில் ஏராளமான குடிமக்கள் கலந்து கொண்டனர். அதன் மூலம் ஃபிட் இந்தியா இயக்கம்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

ஒரு மக்கள் இயக்கமாக மாறியது. இந்தியா முழுவதும் 2 முறை நடத்தப்பட்ட மொத்தம் 7.08 கோடி மக்கள் பங்கேற்ற ஃபிட் இந்தியா விடுதலை ஓட்டமாக இருந்தாலும், 1.74இலட்சம் மாணவர்கள் பங்கேற்ற பள்ளிக் குழந்தைகளுக்கான விளையாட்டு மற்றும் உடற்கட்டு தொடர்பான புதிர்கள் அடங்கிய ஃபிட் இந்தியா புதிர்ப் போட்டியாக இருந்தாலும், நமக்கு சொல்வது ஒரு செய்தியைத்தான். இந்தியாவில் அனைத்து வயது பிரிவினரிடமும் உடற்கட்டு சார்ந்த ஆர்வம் அதிகரித்திருக்கிறது என்பதைத் தான் இந்தச் செய்திகள் சொல்கின்றன. ஃபிட் இந்தியா புதிர்ப் போட்டிகள் இந்திய மாணவர்களிடையே அவர்களின் வாழ்வில் விளையாட்டும், உடற்கட்டும் எவ்வளவு முக்கியமானது என்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, அது குறித்த செய்தியை தங்களின் சக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடம் ஏற்படுத்தத் தூண்டுவதால், அவை மிகவும் தனித்துவமானவையாகும். விளையாட்டு குறித்த உணர்வை மாணவர்களிடம் அதிக அளவில் தூண்டும் நோக்குடன் ஒவ்வொரு ஆண்டும் ஃபிட் இந்தியா பள்ளி வாரம் நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் நடத்தப்படும் உடற்கட்டு சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளில் 2.5இலட்சத்திற்கும் கூடுதலான மாணவ மாணவிகள் கலந்து கொண்டிருக்கின்றனர். ஃபிட் இந்தியா இயக்கத்தில் பள்ளி மாணவர்கள் முதல் இளைஞர்கள், மூத்த குடிமக்கள் என அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டிருப்பதன் மூலம் புதிய இந்தியாவில் குடிமக்கள் இந்தியாவை உடற்கட்டு மிக்க நாடாக மாற்ற உறுதி பூண்டிருக்கிறார்கள் என்பது உறுதியாகிறது.



**விளையாட்டுப் போட்டிகளால் பெருகும் பொருளாதார வளர்ச்சி**

இந்தியா இன்று உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக வளர்ச்சி அடைந்திருக்கிறது. அது மட்டுமின்றி, வரலாறு காணாத வளர்ச்சிப் பாதையில் பயணம் செய்து கொண்டிருக்கிறது. இந்தப் பொருளாதார வளர்ச்சிக் கதையில் இந்தியாவின் விளையாட்டுப் பொருள்கள் தயாரிப்புத் தொழில்துறை முக்கியமான பங்காற்றி வருகிறது. 2023ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வெளியான இன்வெஸ்ட்மென்ட் இந்தியா என்ற தலைப்பிலான அறிக்கையில், அதிகப் போட்டி மிகுந்த உலக விளையாட்டுப் பொருள்கள் சந்தையில் விளையாட்டுக்கருவிகள் உற்பத்தி செய்யும்ஆசியாவின் மூன்றாவதுபெரிய நாடாக இந்தியா முன்னேறியிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து விளையாட்டுக் கருவிகளிலும் சுமார் 60சதவீதக்கருவிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அது மட்டுமின்றி, விளையாட்டுக் கருவிகள் உற்பத்தித்துறை இந்தியாவில் ஐந்து கோடிக்கும் கூடுதலானவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உடற்பயிற்சிக் கருவிகள், காற்று ஊதி நிரப்பக்கூடிய பந்துகள், மிதிவண்டிகள், கிரிக்கெட் உபகரணங்கள், விளையாட்டு ஆடைகள் என இந்தியாவில் இருந்து ஏராளமான பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுவதன் மூலம், இந்தியா வலிமை மிகுந்த விளையாட்டுப் பொருள்கள் ஏற்றுமதியாளராக மாறி இருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சீனா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட 200க்கும் கூடுதலான நாடுகளுக்கு மிதி வண்டிகளை ஏற்றுமதி செய்யும் இந்தியா, 2022ஆம் நிதியாண்டில் உலகின் இரண்டாவது பெரிய மிதிவண்டி உற்பத்தியாளராக உருவெடுத்துள்ளது. அந்த ஆண்டில் இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மிதி வண்டிகளின் மதிப்பு 46.1 கோடி அமெரிக்க டாலர் ஆகும். இந்தியாவில் விளையாட்டுப் பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சிலை அமைப்பது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள விருப்பதால், இந்திய விளையாட்டுப் பொருள்கள் உற்பத்தித் துறையின் மதிப்பு இனி




https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

வரும் காலங்களில் அதிகரிக்கும். இந்திய விளையாட்டுப் பொருள்கள் சந்தையின் மதிப்பு 2020 21ஆம் ஆண்டில் இருந்த 3,900 கோடி அமெரிக்க டாலர் என்ற அளவில் இருந்து, 2027ஆம் ஆண்டில் 6,600 கோடி அமெரிக்க டாலர் என்ற அளவுக்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேசத்தைக் கட்டி எழுப்புவதில் விளையாட்டின் வலிமை இதுதான்.

இந்தியாவில் விளையாட்டுகள் கடந்த ஒன்பது ஆண்டுகளில் மிகப்பெரிய முன்னேற்றத்தைச் சந்தித்துள்ளன. இந்திய விளையாட்டு வீரர்கள் உலகம் முழுவதும் நடைபெறும் பல்வேறு வகையான பன்னாட்டுப் போட்டிகளில் ஆதிக்கம் செலுத்துவது மட்டுமின்றி, விளையாட்டு உலகில் இந்தியா ஆதிக்கம் செலுத்தப் போகும் சக்தியாகப் பார்க்கப்படுகிறது. உலகின் பல்வேறு விளையாட்டு அமைப்புகள் அண்மைக் காலங்களில் தங்களின் போட்டிகளை நடத்துவதற்கான நாடாக இந்தியாவை தேர்ந்தெடுத்திருப்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. 44வது செஸ் ஒலிம்பியாட், 17 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான மகளிர் உலகக்கோப்பை கால்பந்துப் போட்டிகள் போன்றவை 2022ஆம் ஆண்டிலும் உலகக் குத்துச் சண்டை சாம்பியன் ஷிப் போட்டிகள், உலகக்கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டிகள் ஆகியவை 2023ஆம் ஆண்டிலும், இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடத்தப்பட்டதே இந்தியா வளர்ந்து வரும் விளையாட்டு சூப்பர் ஸ்டார் என்ற தகுதியை இப்போது பெற்றிருக்கிறது என்பதற்கான சான்று ஆகும்.

**– அனுராக் சிங் தாகூர், மத்திய அமைச்சர், தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை, இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை, இந்திய அரசு, புது தில்லி.**






https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# ஒருங்கிணைந்த முழுமையான அணுகுமுறை

– டாக்டர் மன்சுக் மாண்டவியா

**இந்தியாவில் பாரம்பரிய மருத்துவத்தையும் அலோபதி மருத்துவத்தையும் ஒருங்கிணைப்பது என்பது முழுமையான நலவாழ்வை நோக்கிய உருமாற்ற முன்னெடுப்பு நடவடிக்கையை குறிக்கின்றது. இந்த ஒருங்கிணைவு அணுகுமுறையானது தொடர்புடைய இரண்டு மருத்துவ முறைகளின் வலிமைகளையும் ஒன்று சேர்க்கின்றது. இது நோயாளிகளுக்கு விரிவான சிகிச்சையை அளிப்பதோடு அவர்களது உடல், மனம் மற்றும் ஆன்மீகத் தேவைகளையும் நிறைவு செய்கிறது. இந்தியாவில் உள்ள சுகாதாரப் பராமரிப்பு அமைப்பானது ஆரம்பநிலை, இடைநிலை மற்றும் மேல்நிலை சிகிச்சை முறைகள் மூலம் தொடர் பராமரிப்பை அளிக்கும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று சிகிச்சை நிலைகளுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க செயல்பாட்டு உறவு உள்ளது. அதுமட்டுமல்லாமல் அனைவருக்கும் ஆரோக்கியம் என்பதை உறுதி செய்வதற்கு இந்த இரண்டு மருத்துவ முறைகளும் ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள சார்புநிலை தவிர்க்க இயலாதது ஆகும்.**

இந்தியாவின் சுகாதாரப் பராமரிப்பு அமைப்பானது நரேந்திர மோடி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற 2014இல் இருந்து குறிப்பிடத்தக்க உருமாற்றத்தை அடைந்து உள்ளது. ஆரோக்கியத்திற்கான சிகிச்சை என்பது சொகுசானது என்ற நிலையில் இருந்து அனைவருக்கும் உறுதி அளிக்கப்பட்ட ஒரே விதமான ஆரோக்கியப் பராமரிப்பு என்ற நிலைக்கு மாறி உள்ளது. மேற்கொள்ளப்பட்டு வரும் அமைப்பு ரீதியான சீர்திருத்தங்களின் மூலம் பொதுசுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு தற்போதைய அரசு கூடுதல் அழுத்தம் தந்துள்ளது. மக்களின் இருப்பிடத்திற்கே சென்று இலவசமாக தரமான சேவைகளை வழங்குவதற்கும் அரசு முக்கியத்துவம் அளித்து வருகின்றது. அந்தியோதயா என்ற தத்துவத்தை அதாவது ஒருவரையும் விட்டுவிடக் கூடாது மற்றும் வரிசையில் நிற்கின்ற கடைசி நபருக்கும் சேவைகள் கிடைக்க வேண்டும் என்ற தத்துவத்தை இது அடிப்படையாகக் கொண்டு உள்ளது.




கடந்த 10 ஆண்டுகளில் ''மாதிரியில் இருந்து மொத்தத்திற்கு'' என்ற அணுகுமுறையைப் பின்பற்றி சுகாதாரப் பிரிவை முழுமையாக வலுப்படுத்தும் குறிக்கோளுக்கு கவனம் செலுத்தப்பட்டு வந்துள்ளது. அதற்கேற்ப பிரதம மந்திரி நமது சுகாதாரப் பராமரிப்பு அமைப்பில் விரிவான அணுகுமுறையைக் கடைபிடிக்குமாறும் ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வில் கவனம் செலுத்துமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். அவரது வார்த்தைகளிலேயே கூற வேண்டுமென்றால், ''நலவாழ்விற்கான நமது தொலைநோக்குப் பார்வை என்பது உலகளாவியதாகவும் அதே சமயம் குடும்ப அளவினதாகவும் இருக்கின்றது. கோவிட்19 பெருந்தொற்றுக்குப் பிறகு ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வை உலகம் தீவிரமானதாகப் பார்க்கின்றது. இந்த விஷயத்தில்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

இந்தியா நிறைய பங்காற்ற முடியும். நமது யோகாவும் ஆயுர்வேதமும் ஆரோக்கியமான கிரகத்திற்கு பங்களிக்க முடியும்''.

ஒரு நாட்டின் ஆரோக்கியம் என்பது நாட்டின் அனைத்து வயதுப் பிரிவைச் சேர்ந்த மக்களின் ஆரோக்கியத்தைச் சார்ந்தது ஆகும். தேசத்தைக் கட்டமைக்கும் எந்தவொரு முயற்சியும் அனைத்து மக்களும் ஆரோக்கியமாக இருந்தால் வெற்றி பெறுவதைக் காணலாம். இது ஆரோக்கியமான சமுதாயங்களுக்கும் தேசிய உற்பத்தித் திறனுக்கும் பங்களிக்கின்றது. எனினும் அரசியல், பொருளாதாரம், குடிமையியல் மற்றும் நோயியல் ஆகியவற்றில் நாட்டில் ஏற்படுகின்ற இடைமாற்றங்கள் மக்களின் ஆரோக்கியத்தின் மீது நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. மாற்றங்களின் வேகத்திற்கு தொடர்ந்து ஈடுகொடுக்க வேண்டுமெனில் சான்று அடிப்படையிலான சுகாதாரக் கொள்கைகளும் வலுவான சுகாதார அமைப்புகளும் இன்றியமையாது தேவைப்படுகின்றன. இவையே நமது குடிமக்களுக்கு திறன்மிக்க, சரிசமமான, அணுகக்கூடிய, குறைந்த செலவிலான மற்றும் தரமான சுகாதாரப் பராமரிப்பை வழங்குவதை உறுதி செய்யும். இதைப்பொறுத்து தேசமானது உடனடியாக பதில்வினை ஆற்றக்கூடிய சுகாதார அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற தனது பொறுப்புடைமையில் உறுதியாக நிற்கின்றது. இந்த அமைப்பானது நாட்டின் குடிமக்கள் செயலூக்கமான வாழ்வை மேற்கொள்ள உதவுவதோடு ஆரோக்கியமான சமுதாயங்களையும் கட்டமைக்கும்.

இந்தியாவில் உள்ள சுகாதாரப் பராமரிப்பு அமைப்பானது ஆரம்பநிலை, இடைநிலை மற்றும் மேல்நிலை சிகிச்சை முறைகள் மூலம் தொடர் பராமரிப்பை அளிக்கும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று சிகிச்சை நிலைகளுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க செயல்பாட்டு உறவு உள்ளது. அதுமட்டுமல்லாமல் அனைவருக்கும் ஆரோக்கியம் என்பதை உறுதி செய்வதற்கு இந்த இரண்டு மருத்துவ முறைகளும் ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள சார்புநிலை தவிர்க்க இயலாதது ஆகும். உதாரணமாக தேசிய சுகாதார இயக்கம் என்று இப்பொழுது அழைக்கப்படும் தேசிய ஊரக சுகாதார இயக்கமானது தொடக்கநிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்ப சுகாதார அணுகுமுறையின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டது. குறிப்பாக பாதிப்பிற்கு ஆளாகக்கூடிய குழுவினரிடம் இனப்பெருக்க மண்டலம் மற்றும் குழந்தை ஆரோக்கியம், தொற்றுநோய்கள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் தரப்பட்டு இருந்தது. இதனால் பெரும் பலன்கள் ஏதும் ஏற்படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட சிகிச்சை தொகுப்பு என்பது மாறிவரும் மக்களின் தேவைகளை இனியும் பூர்த்தி செய்வதாக இல்லை. அதுமட்டுமல்லாமல் தொற்றா நோய்கள் ஏற்படுத்தும் நோய்ப்பரவல் நிலை மற்றும் இறப்பு விகிதம் ஆகிய சுமைகளை எதிர்கொள்ள முடியவில்லை.



**ஆயுஷ்மான் பாரத்**

2018ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஆயுஷ்மான் பாரத் முன்னெடுப்புத் திட்டத்தில் சுகாதாரம் மற்றும் நலவாழ்வு மையங்கள் (AB – HWC) மற்றும் பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கியத் திட்டம் (AB – PMJAY) என இரு கூறுகள் உள்ளன. சுகாதார பராமரிப்பு சவால்களை எதிர்கொள்ளவும் மருத்துவ சிகிச்சைக்கு ஆகும் செலவுகளைக் குறைக்கவும் உதவக் கூடியவையாக இவை இருந்து வருகின்றன. சுகாதாரம் மற்றும் நலவாழ்வு மையங்கள் சமுதாயத்தினருக்கு ஆரம்ப சுகாதார மருத்துவச் சேவைகளையும் நலவாழ்வு நடவடிக்கைகளையும் வழங்குகின்றன. பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கியத் திட்டமானது மருத்துவமனையில் சேர்ந்து இலவசமாக சிகிச்சை பெறவும் உள்நோயாளியாக மருத்துவச் சேவைகளைப் பெறவும் ஏழை மக்களுக்கும் நலிவடைந்த பிரிவினருக்கும் உதவுகின்றது. இந்த முன்னெடுப்பு நடவடிக்கைகள் தரமான மருத்துவச் சிகிச்சையை மக்களுக்கு கிடைக்கச் செய்து உள்ளன. அதிலும் குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் மூத்த குடிமக்கள் ஆகியோர் மீது கூடுதல் கவனம் செலுத்தப்படுகின்றது.

விரிவான ஆரம்ப சுகாதார சிகிச்சைகளை வழங்கவும் நலவாழ்வு நடவடிக்கைகளை மேம்படுத்தவும் இந்த சுகாதாரம்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

மற்றும் நலவாழ்வு மையங்கள் மக்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகிலேயே செயல்படுகின்றன. டிசம்பர் 2022க்குள் 1.5 இலட்சம் ஆயுஷ்மான் பாரத் – சுகாதாரம் மற்றும் நலவாழ்வு மையங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருந்தன. இந்த இலக்கை நாடு வெற்றிகரமாக அடைந்துள்ளது. அதாவது மக்கள் வசிப்பிடங்களுக்கு அருகிலேயே 1,59,859 சுகாதாரம் மற்றும் நலவாழ்வு மையங்கள் செயல்பட்டு மக்களுக்கு அதிலும் குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் மூத்த குடிமக்களுக்கு இலவசமாக மருத்துவச் சேவைகளை வழங்கி வருகின்றன. தொடங்கப்பட்டதில் இருந்து சுகாதாரம் மற்றும் நலவாழ்வு மையங்களுக்கு இதுவரை மொத்தமாக 172.13 கோடி நோயாளிகள் வந்துள்ளனர். இதில் 35.67 கோடி நபர்கள் நீரிழிவு நோய்க்கும், 41.26 கோடி நபர்கள் உயர்ரத்த அழுத்த நோய்க்கும், 24.46 கோடி நபர்கள் வாய்ப்புற்று நோய்க்கும், 11.32 கோடி பெண்கள் மார்பகப் புற்று நோய்க்கும், 7.74 கோடி பெண்கள் கர்ப்பப்பை புற்று நோய்க்கும் பாதிக்கப்பட்டு உள்ளனர். 2.08 கோடி நபர்களுக்கு யோகா பயிற்சி அல்லது நலவாழ்விற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு உள்ளன. சமுதாயத்தில் மருத்துவ சிகிச்சை மற்றும் நலவாழ்விற்காக மக்கள் சென்றடையும் முதல் புகலிடமாக சுகாதாரம் மற்றும் நலவாழ்வு மையங்கள் இப்பொழுது அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கியத் திட்டத்தின் கீழ் 33 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 40 சதவிகிதம் தகுதி வாய்ந்த மக்களுக்கு நிதி பாதுகாப்பு அளிக்கப்படுகின்றது. 23 கோடிக்கும் அதிகமான எண்ணிக்கையில் ஆயுஷ்மான் அட்டைகள் உருவாக்கப்பட்டு உள்ளன. உயர்நிலையில் தரமான சிகிச்சையை வழங்குவதற்காக 28 ஆயிரத்து 368 மருத்துவமனைகள் அங்கீகரிக்கப்பட்டு உள்ளன. நோயறிதல், உறுப்பு மற்றும் திசு மாற்று சிகிச்சை முறைகள் மற்றும் வலி நிவாரண சிகிச்சை உள்ளிட்ட 1949 மருத்துவ சிகிச்சை முறைகள் படிப்படியாக இந்தத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு உள்ளன. தொடங்கப்பட்டதில் இருந்து இந்த பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கியத் திட்டத்தின் கீழ் 5 கோடிக்கும் மேலான நோயாளிகள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உள்ளனர். இவர்களுக்கான மொத்த மருத்துவச் செலவு ரூபாய் 61,807 கோடி ஆகும். இதனால் ஏழைகளின் உயிர் காப்பாற்றப்பட்டு இருப்பதோடு அவர்களின் நிதிச் சுமையும் நீக்கப்பட்டு உள்ளது.

### டிஜிட்டல் உருமாற்றம்

நாட்டில் ஒருங்கிணைந்த டிஜிட்டல் சுகாதார உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் அதற்கு உறுதுணையாக இருக்கவும் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கம் (ABDM) தொடங்கப்பட்டது. இந்த டிஜிட்டல் இயக்கத்தின் கீழ் சுகாதார உள்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துவதற்காக குறிப்பிடத்தக்க வகையில் ரூபாய் 200 கோடிக்கும் அதிகமான முதலீடுகள் செய்யப்பட்டு உள்ளன. ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்குகளை (ABHA) தொடங்குவதன் வாயிலாக டிஜிட்டல் சுகாதார சூழல்சார் அமைப்பில் நாடு பங்கேற்பதற்கான உதவிகளை இந்த இயக்கம் வழங்கி உள்ளது. ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்குகளுக்கான ஐடி (ID) என்பது பல்வேறு வகைப்பட்ட சுகாதார பராமரிப்பு வழங்குபவர்களுக்கு இடையில் ஒரு பிரத்யேக அடையாளத்தை உருவாக்கித் தருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ஐடியில் பொதுசுகாதார திட்டங்கள் முதல் காப்பீட்டுத் திட்டங்கள் வரை பெறக்கூடிய அனைத்து சுகாதாரப் பலன்களும் இணைக்கப்படும். நாடு முழுவதும் எந்தவொரு மருத்துவமனையிலும் பதிவு செய்வதை இது எளிதானதாக்கும். மேலும் இந்த ஐடியானது சுகாதார தரவுப் பகிர்விற்காக செங்குத்து வரிசையிலான சுகாதார ஆவணப் பதிவேடுகளை உருவாக்கும். இதுவரையில் 40.22 கோடிக்கும் அதிகமான எண்ணிக்கையில் ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்குகளுக்கான ஐடி உருவாக்கப்பட்டு உள்ளது. மேலும் ஜுன் 2023 வரை 27.48 கோடிக்கும் அதிகமான எண்ணிக்கையில் சுகாதார ஆவணப் பதிவேடுகள் உருவாக்கப்பட்டு உள்ளன. இதற்கு முன்பு நோயாளிகள் சிறப்பு மருத்துவ வசதி பெறுவதற்காக அல்லது தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதற்காக நெடுந்தொலைவுகளுக்கு பயணப்பட வேண்டியதாக இருந்தது. இப்பொழுது இசஞ் சீவினி போன்ற மின்சுகாதார முன்னெடுப்பு நடவடிக்கைகள் 1.11 இலட்சம் ஆயுஷ்மான் பாரத் சுகாதாரம் மற்றும் நலவழி மையங்களில் கிடைக்கின்றன. இது மருத்துவச் சேவையை அணுகிப் பெறுவதில் உள்ள இடைவெளியை குறைப்பதோடு சிறப்பு மருத்துவர்களின் ஆலோசனையை வீட்டிற்கே கொண்டு சேர்க்கின்றன.



https://www.tnpscthervuthunaivan.com/

சஞ்சீவினி வாயிலாக இதுவரை 9 கோடி தொலை ஆலோசனைகள் நடைபெற்று உள்ளன. இதில் 57 சதவிகித பயனாளிகள் பெண்களாகவும் 12 சதவிகித பயனாளிகள் மூத்த குடிமக்களாகவும் உள்ளனர்.

**பெருந்தொற்றுப் பரவலுக்கான பதில்வினையும் தயார்நிலையும்**

கோவிட்19 பெருந்தொற்றுக்கு எதிரான இந்தியாவின் பதில்வினையானது அதனது உலகளாவிய தலைமைத்துவத்தையும் எதையும் தாங்கி நிற்கும் ஆற்றலையும் உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளது. தொற்று பரவத் தொடங்கிய உடனேயே மிக விரைவாக பரிசோதனை வசதிகளுக்காக 2022ஆம் ஆண்டிற்குள் 3388 ஆய்வுக்கூடங்கள், 821 அரசு மற்றும் 1487 தனியார் ஆர்டிபிசிஆர் ஆய்வுக்கூடங்கள், 1115 கார்ட்ரிட்ஜ் ஆய்வுக்கூடங்கள் மற்றும் 53 மரபணு வரிசைப்படுத்துதல் ஆய்வுக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. சுயசார்பு பாரதம் (ஆத்ம நிர்பார் பாரத்) என்ற முன்னெடுப்பு நடவடிக்கையானது நோயறிதலுக்கான பரிசோதனை சந்தையில் போட்டியை ஏற்படுத்தியது. இதன் காரணமாக 2020இல் பரிசோதனைப் பொருட்களின் விலை1727 ரூபாய் என இருந்தது 2021இல் 72 ரூபாயாக குறைந்தது. கோவிட் மையங்கள், ஐசியூ படுக்கைகள், வென்ட்டிலேட்டர்கள், ஆக்சிஜன் கான்சன்ட்ரேட்டர்கள், ஆக்சிஜன் தயாரிப்பதற்கான பிஎஸ்ஏ ஆலைகள் போன்ற சுகாதார உள்கட்டமைப்பு வசதிகள் மிக விரைவான முறையில் ஏற்படுத்தப்பட்டன.

கொரோனா பெருந்தொற்றுப் பரவலில் இருந்து கற்றுக்கொண்ட



பாடங்களின் அடிப்படையில் பல்வேறு சுகாதார பராமரிப்பு நிலைகளுக்கு இடையில் முழுமையான சுகாதார சூழல்சார் அமைப்பை உருவாக்குவதற்கு நாடு "சமுதாயம் முழுமைக்கும்" (Whole of Society) என்ற அணுகுமுறையையே தேர்ந்தெடுத்துள்ளது. பிரதம மந்திரி ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு இயக்கம் (PMABHIM) என்ற இந்தியா முழுமைக்குமான மிகப்பெரிய உள்கட்டமைப்பு வசதி திட்டத்தின் வாயிலாக இது செயல்படுத்தப்படும். இந்த உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு இயக்கமானது பராமரிப்பின் அனைத்து நிலைகளிலும் சுகாதார நிறுவனங்களின் திறனை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்துகிறது. அதாவது உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல், கண்காணிப்பு, நோயறிதல், நிர்வாகம் மற்றும் ஆராய்ச்சி ஆகிய அனைத்திலும் இந்த இயக்கம் கவனம் கொள்கின்றது. இதுவரை இந்த சுகாதார உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு இயக்கமானது 7,808 கட்டிடம் இல்லா துணைசுகாதார மையங்களுக்கு உதவி புரிந்துள்ளது, 264 நகர சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்கள் (UHWCs), 485 வட்டார பொதுசுகாதார மையங்கள் (BPHUs), 216 ஒருங்கிணைந்த பொதுசுகாதார ஆய்வுக்கூடங்கள் (IPHL) மற்றும் மருத்துவமனைகளில் 166 அவசரக்கால பராமரிப்பு பிளாக்குகள் (CCBs) ஆகியவற்றை நிறுவவும் இந்த இயக்கம் உதவி உள்ளது. அதிகாரத்தை பரவலாக்குவதை மீண்டும் வலுப்படுத்தும் வகையில் 15ஆவது நிதிக் கமிஷன் சுகாதாரப் பிரிவு மானியத்தின் மூலம் ஊராட்சி மற்றும் நகராட்சி அமைப்புகளுக்கு ரூபாய் 70,051 கோடி கூடுதல் நிதி ஆதாரமாக ஒதுக்கியுள்ளது.

பலன்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுதல், பற்றாக்குறைகளைத் தீர்த்து வைத்தல், புத்தாக்கங்களை மேற்கொள்ளுதல், தயார் நிலைக்கான சிறந்த நடைமுறைகள் ஆகியன எதையும் தாங்கி நிற்கக்கூடிய மற்றும் சுயசார்பான இந்தியாவை உருவாக்கும் பயணத்தில் முன்நிற்கின்றன. மிகப்பெரும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக உள்ள ஆயுஷ்மான் பாரத் திட்டமானது பொதுசுகாதார செயல்பாடுகளுக்கு உத்வேகம் கொடுக்கக் கூடிய அதிகம் தேவைப்படும் திட்டமாக நம்முன் உள்ளது. அனைத்து நிலைகளிலும் வழக்கமான மற்றும் அத்தியாவசியமான மருத்துவச் சேவைகளை வழங்கும் பணி எந்த வகையிலும் பாதிக்கப்படாத வகையில் நெருக்கடிகால மருத்துவ மேலாண்மையை சரியான அளவில் மேற்கொள்ள வேண்டும். இதற்கு நமது மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களை சுயசார்பு உள்ளதாகவும் நமது நாட்டை முற்றிலும் தற்சார்பு உடையதாகவும் மாற்ற வேண்டும்.

**சுகாதாரத் துறைக்கான மனிதவளம் (HRH)**

தொழில்திறன் பெற்ற சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்ததால் அரசு மருத்துவம் மற்றும்

https://www.tnpscthervuthunaivan.com/

செவிலியர் கல்வி இடங்களை அதிகரிப்பதற்கு குறிப்பிடத்தக்க அளவு முயற்சிகளை எடுத்துள்ளது. இதனால் இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவக் கல்விக்கான இடங்கள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளன. 2014ஆம் ஆண்டில் இருந்து இந்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக பொதுசுகாதார அமைப்பில் தொழில்திறன் பெற்ற சுகாதார ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தற்போது நாட்டில் மருத்துவக் கல்வியில் இளநிலைப் படிப்பில் 1.07 இலட்சம் இடங்கள் உள்ளன. 67 சதவிகிதம் மருத்துவக் கல்லூரிகள் அதிகரித்து உள்ளன. இளநிலை படிப்பிற்கான இடங்கள் 93 சதவிகிதம் அதிகரித்துள்ளது. அதேபோன்று முதுநிலைப் படிப்பிற்கான இடங்கள் 105 சதவிகிதம் அதிகரித்து உள்ளது. சுகாதாரத்தில் திறன்பெற்ற ஊழியர்களின் அதிலும் குறிப்பாக மருத்துவர்களின் பரவல்நிலை, அவர்கள் பணிக்கு கிடைக்கும் நிலை மற்றும் அவர்களை அணுகும்நிலை ஆகியன நாட்டில் இடத்திற்கு இடம் வேறுபட்டு இருந்தாலும்கூட ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது இவர்களின் எண்ணிக்கையானது அதிகரித்தே உள்ளது. அரசு பல்வேறு திட்டங்களுக்காக செவிலியர் கல்வி நிலையங்களை அங்கீகரித்துள்ளது. இப்பொழுது ஓராண்டிற்கு 1.25 இலட்சத்திற்கும் மேற்பட்ட செவிலியர் பட்டதாரிகள் சுகாதாரப் பராமரிப்பு பணியில் சேர்கின்றனர். நாட்டில் செவிலியர் பணியாளர்களை வலுப்படுத்தும் முக்கிய நடவடிக்கையாக பிரதம மந்திரி தலைமை வகிக்கும் பொருளாதார உறவுகளுக்கான கேபினெட் கமிட்டி 2014இல்



இருந்து தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கும் மருத்துவக் கல்லூரிகளின் வளாகத்திலேயே 157 புதிய செவிலியர் கல்லூரிகளைத் திறப்பதற்கு அனுமதி அளித்துள்ளது. இந்த நடவடிக்கையின் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் தோராயமாக 15,700 செவிலியர் பட்டதாரிகள் பணிக்கு கிடைப்பார்கள்.

**தடுப்பு மருந்து மற்றும் நோய்க்கட்டுப்பாடு**

மருத்துவச் சேவைகளை வழங்குவதில் அரசு எப்பொழுதும் மிகுந்த ஆர்வமும் கவனமும் கொண்டுள்ளது. உதாரணமாக அனைவருக்குமான தடுப்பு மருந்து திட்டமானது தடுப்பு மருந்து தரும் செயலை மக்களின் சமூக இயக்கமாக மாற்றியுள்ளது. மிஷன் இந்திரதனுஷ் மூலமாக வழக்கமான தடுப்புமருந்துச் சேவைகளுடன் கூடுதலாக பல தடுப்புமருந்துகள் சேர்க்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. இதன் வாயிலாக தடுப்பு மருந்து பெறுபவர்களின் சதவிகிதம் 62இல் (2015–2016) இருந்து 76.4 சதவிகிதமாக (2019–2021) அதிகரித்து உள்ளது. மேலும் தொற்று நோய்களின் பரவலைக் குறைப்பதற்காக தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட முயற்சிகளின் காரணமாக 2014ஆம் ஆண்டிற்கும் 2021ஆம் ஆண்டிற்கும் இடையில் மலேரியா நோய்த்தொற்று எண்ணிக்கை 85.3 சதவிகிதம் குறைந்துள்ளது. ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2014இல் 1661ஆக இருந்தது. இந்த எண்ணிக்கை 2021இல் 787ஆக குறைந்து உள்ளது. வழக்கமான தடுப்பு மருந்து வழங்குவதற்கான விரிவான மூலவளங்களும் உள்கட்டமைப்பு வசதிகளும்தான் நாட்டில் மிகப்பெரிய எண்ணிக்கையில் கோவிட்–19 தடுப்பு ஊசிகள் செலுத்தப்பட்டதை உலக அளவில் வெற்றிகரமான நிகழ்வாக மாற்றி உள்ளன. ஒன்பது மாதங்களிலேயே 100 கோடி கோவிட் தடுப்பூசித் தவணைகள் செலுத்தப்பட்டு இருந்தன. அடுத்த ஒன்பது மாதங்களில் இந்த எண்ணிக்கையானது இரட்டிப்பாகி 200 கோடி கோவிட் தடுப்பூசி தவணைகள் என்ற அளவு எட்டப்பட்டது. அதுமட்டுமல்லாமல் தடுப்பு மருந்து தோழமை (வேக்சின் மைத்ரி) என்ற முன்னெடுப்பு நடவடிக்கையின் கீழ் 100க்கும் மேற்பட்ட அயல்நாடுகளுக்கும் இரண்டு ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகளுக்கும் 291.5 மில்லியன் கொரோனா தடுப்பூசி தவணைகள் வழங்கப்பட்டன. இது இந்தியா உலக அளவில் ஒரு தலைமைத்துவ இடத்தை நோக்கி நகர்வதற்கு காரணமாகியது.

பிரதம மந்திரி காசநோய் இல்லாத இந்தியா திட்டமானது பிரதம மந்திரியின் குடிமக்களை மையமாகக் கொண்ட கொள்கைகளை பிரதிபலிக்கின்றது. அரசு மருத்துவமனைகளில் காசநோய்க்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுவது குறித்த விழிப்புணர்வை மக்களிடையே அதிகரிப்பது என்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம் ஆகும். கோவிட்–19 பெருந்தொற்று



https://www.tnpscthervuthunaivan.com/

ஏற்படுத்தியுள்ள பல்வேறு சவால்களுக்கு இடையிலும் 2025ஆம் ஆண்டிற்குள் காசநோயை முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்ற தனது பொறுப்புடைமையை இந்தியா தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. காசநோயாளிகளைக் கண்டறிந்து அறிவிக்கை செய்வது என்பது பெருந்தொற்றுக்கு முன்பான காலகட்டத்தின் அளவைத்தாண்டி விட்டது. இது எதையும் தாங்கி நிற்கும் தேசத்தின் வலிமையை எடுத்துக்காட்டுகிறது. மக்கள் பங்கேற்பு (ஜன் பாகிதரி) என்ற உத்வேகத்துடன் அரசு நிக்ஷய் 2.0 (Nikshay 2.0) என்பதை அறிமுகப்படுத்தி உள்ளது. நோயாளிகளுக்கான உதவி மற்றும் காசநோய் ஒழிப்பில் சமூகத்தினரை ஈடுபடுத்துதல் ஆகியவற்றை அதிகரிப்பதற்கான ஒரு பிரத்யேக பிளாட்ஃபார்மாக இது செயல்படுகின்றது. இத்தகைய சீர்திருத்தங்கள் பெருநிறுவன சமூகப் பொறுப்புடைமை வாய்ப்புகளையும் அதிகரிக்கின்றன. அதுமட்டுமல்லாமல் உலகளாவிய நிலையில் மக்களிடம் இருந்து நிதி திரட்டலுக்கான முன்னோடி மாதிரியையும் இது நிறுவி உள்ளது. நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பிரதம மந்திரியின் தொலைநோக்கு பார்வையிலான தலைமையின் கீழ் காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்குவோம்.

**மனநலமும் நலவாழ்வும்**

இந்தியாவின் தேசிய மனநல கணக்கெடுப்பானது பல்வேறு மனநல கோளாறுகளுக்கு சிகிச்சை எடுப்பதில் 70 92 சதவிகிதம் இடைவெளி உள்ளதாக எடுத்துக்காட்டி உள்ளது. கோவிட் பெருந்தொற்று பரவலானது டிஜிட்டல் மனநல வலைப்பின்னலின் தேவையை வலியுறுத்தி உள்ளது. இதன் விளைவாக, அரசு டெலி – மனஸ் (Tele – MANAS) என்ற மாவட்ட மனநலத் திட்டத்தின் டிஜிட்டல் பிரிவை அறிமுகப்படுத்தியுள்ளது. இதுவரை தொடங்கப்பட்டுள்ள 42 டெலி – மனஸ் மையங்களில் 1.5 இலட்சத்திற்கும் அதிகமான தொலைபேசி அழைப்புகள் வந்துள்ளன. தங்களது மனநலத்திற்கு ஆலோசனையும் உதவியும் தேவைப்படுகின்ற தனி நபர்களுக்கு அவர்கள் யார் என்று பிறருக்கு தெரியப்படுத்தாமலேயே இந்த மையங்கள் உதவிகளை வழங்கி வருகின்றன. இதனால், மனநலப் பிரச்சினை என்பதோடு தொடர்புடைய களங்கப்படுத்துதல் குறைகின்றது. நாம் அனைவரும் சேர்ந்து இதன்மூலம் சிகிச்சைக்கான இடைவெளியைக் குறைப்பதோடு ஆரோக்கியமான சமுதாயத்தை பேணுகின்றோம்.

வழக்கமான மருத்துவச் சேவைகள் மற்றும் அவசரக்காலச் சேவைகள் என இரண்டிற்குமான சுகாதாரப் பராமரிப்பு அமைப்பின் திறனை மேம்படுத்துவது என்பது சுகாதாரப் பிரிவிற்கு அரசு கொடுத்துள்ள உயர் முன்னுரிமையின் விளைவு என்பது தெளிவாகின்றது. கடந்த 10 ஆண்டில் தனிநபர் ஒருவருக்கான அரசின் சுகாதாரச் செலவு குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளது. அதாவது 74 சதவிகிதம் வளர்ச்சி ஏற்பட்டு உள்ளது. மேலும் இதனோடு கூடுதலாக, அரசின் நிதி உதவி செய்யும் சுகாதாரக் காப்பீடு படிப்படியாக 167 சதவிகிதம் வரை அதிகரித்து உள்ளது. 2013–2014ஆம் நிதி ஆண்டில் இருந்து ஆரோக்கியத்திற்காக ஒருவர் சொந்தமாக செலவிடுவது என்பது 16 சதவிகிதப் புள்ளிகள் குறைந்துள்ளது. இந்தப் புள்ளி விவரங்கள் சுகாதாரப் பராமரிப்பு அமைப்பை வலுப்படுத்துவதற்கான உறுதியான முயற்சிகளை எடுத்துக்காட்டுகின்றன. மருத்துவ சிகிச்சை தேவைப்படுகின்ற தனிநபர்களுக்கு ஏற்படக்கூடிய பணச்சுமை குறைந்துள்ளதையும் இவை எடுத்துக்காட்டுகின்றன.

**பாரம்பரிய மருந்துகளின் பலன்களை அங்கீகரித்தல்**

பாரம்பரிய மருத்துவ முறைகள் நோய் வராமல் முன்காப்பு செய்தல்,



https://www.tnpscthervuthunaivan.com/

இயற்கை முறையில் சிகிச்சை மற்றும் மனம் – உடல் – ஆன்மா மூன்றின் சமநிலை ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்ற ஒரு பிரத்யேக அணுகுமுறையை சுகாதாரப் பராமரிப்பிற்கு வழங்கி உள்ளது. பாரம்பரிய மருந்துகள் நாட்பட்ட நோய்களுக்கு பலன் அளிப்பதையும் நலவாழ்வை அபிவிருத்தி செய்வதையும் அங்கீகரித்துள்ள அரசானது, இத்தகைய மருத்துவ சிகிச்சை முறைகளை பெரும்போக்கான மருத்துவ அமைப்புடன் ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இந்த அறிவு மற்றும் நிபுணத்துவ ஒருங்கிணைப்பு என்பது தரநிலைப்படுத்தப்பட்ட செயல்முறைகளை அபிவிருத்தி செய்யவும் சான்று அடிப்படையில் வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்கவும் பாதுகாப்பான பலன் அளிக்கக்கூடிய பாரம்பரிய மருந்து கூட்டுச்சேர்க்கைகளை உருவாக்கவும் வழிகாட்டுகின்றது.

இந்தியாவில் பாரம்பரிய மருத்துவத்தை வளர்த்தெடுப்பதில் ஆயுஷ் அமைச்சகம் (ஆயுர்வேதம், யோகா – இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியாபதி) முக்கிய பங்காற்றுகின்றது. இந்த அமைச்சகமானது அலோபதி மருத்துவ நிலையங்கள், ஆராய்ச்சி அமைப்புகள், மருத்துவ நிபுணர்களுடன் இணைந்து சுகாதார பராமரிப்பு சேவைகளை வழங்குவதில் ஒருங்கிணைந்த அணுகுமுறையை உருவாக்கி வருகின்றது. நாடு முழுவதும் ஆயுஷ் நலவாழ்வு மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவை அதிகளவிலான மக்களுக்கு பாரம்பரிய மருந்துகளை கொண்டு சேர்க்கவும், அலோபதி சிகிச்சை




முறைக்கு இணை சிகிச்சை முறையாக பாரம்பரிய சிகிச்சையை முன்னிறுத்தவும் செய்கின்றன.

இந்தியாவில் பாரம்பரிய மருந்தையும் அலோபதி முறையையும் ஒருங்கிணைப்பது என்பது முழுமையான நலவாழ்வை நோக்கிய குறிப்பிடத்தக்க உருமாற்ற நடவடிக்கை ஆகும். ஒருங்கிணைந்த அணுகுமுறை என்பது சம்பந்தப்பட்ட இரண்டு மருத்துவ முறைகளின் வலிமைகளையும் ஒன்று சேர்த்து நோயாளிகளுக்கு விரிவான சிகிச்சை அளிக்கின்றது. இதன்மூலம் அவர்களின் உடல், மன மற்றும் ஆன்மீகத் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன.

இந்தியாவின் ஜி 20 தலைமைத்துவம் மக்கள் மீதான பொறுப்புடைமையை மையமாகக் கொண்டுள்ளது. ஜன் பாகிதரியின் வழிகாட்டு கொள்கை என்பது மக்கள் பங்கேற்பை வலியுறுத்துவது ஆகும். இது நாடு முழுவதும் தீவிரமான உற்சாகத்திற்கு வழிவகுத்து உள்ளது. ஆய்வரங்கு, கருத்தரங்குகள் மற்றும் திருவிழாக்கள் போன்ற பலவகையான ஜி20 தொடர்பான நிகழ்வுகள் இந்தியாவின் தலைமைத்துவத்தில் மக்களையும் பங்குதாரர்களாக ஈடுபடுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் ஜி 20 தலைமைத்துவத்தின் ஆன்மா ''ஒரு பூமி, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம்'' என்பதில் அடங்கி உள்ளது. இதன் சாராம்சம் வசுதேவ குடும்பகம் என்ற பழமையான சமஸ்கிருத பண்பில் அடங்கி உள்ளது. இதற்கேற்ப அனைவரையும் உள்ளடக்குதலை பேணுதல், வளர்ச்சி மற்றும் செழுமையை நோக்கிய பயணத்தில் அனைத்து தனிநபர்களும் ஈடுபடுவதை உறுதி செய்தல் ஆகியவற்றில் நம்பிக்கை ஏற்பட்டு உள்ளது. நமது தடுமாற்றம் இல்லாத பொறுப்புடைமை என்பது ஸர்வே பவந்து சுகினா,சர்வே சந்து நிர்ஆமாயா மந்திரத்தால் வழிநடத்தப்படுகின்ற ஒவ்வொரு குடிமக்களுக்குமான குறைந்த செலவில் சமநிலையில் பாதுகாப்பாக தரமான சுகாதாரப் பராமரிப்பை அளித்தல் ஆகும்.

---

**– டாக்டர் மன்சுக் மாண்டவியா, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சர்.**



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# 75ஆம் ஆண்டில் இந்தியா - அடுத்து என்ன?

– வி.அனந்த நாகேஸ்வரன்

வளரும் நிலையில் உள்ள நாடுகளின் பாதையை வகுப்பதில் பொருளாதாரம் முக்கியமான பங்காற்றுகிறது. இந்தியப் பொருளாதாரம் தன்னுடைய 75வது ஆண்டு சுதந்திரத்தைக் கொண்டாடும் இந்தக் காலகட்டத்தில் நம்நாட்டின் இளமை, துடிப்பு மற்றும் முற்போக்கு அணுகுமுறையைப் பிரதிபலிக்கும் வண்ணம் சவால்கள், அவற்றை ஏற்கும் தன்மை மற்றும் வாய்ப்புகளை வெளிப்படுத்துகிறது. கடந்த பல ஆண்டுகளில் இந்தியப் பொருளாதாரம் பல ஏற்றத்தாழ்வுகளைக் கண்டும், தடங்கல்களை விலக்கி, வாய்ப்புகளைப் பயன்படுத்தி உலகத்தின் ஐந்தாவது மிகப்பெரிய பொருளாதாரமாக உருப்பெற்றுள்ளது.

இந்தியாவின் பொருளாதாரப் பாதை, நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்தே துவங்குகிறது. அப்போது, சோசலிசக் கொள்கைகளையும், சந்தைப் பொருளாதாரத்தையும் கொண்ட கலப்புப் பொருளாதாரச் செயல்வடிவத்தை ஏற்றுக்கொண்டது. அப்போதைய அணுகுமுறையில் புதியதோர் நாட்டை உருவாக்கவும், தொழில்மயமாக்கவும் பொதுத்துறை மூலமாகவும் இறக்குமதிக்கான மாற்றுப் பொருளகளை உருவாக்கியும், தன்னிறைவு பெற முயன்றோம். இந்தக் கொள்கைகளினால் வளமான தொழில்வளர்ச்சிக்கான அடித்தளம் அமைக்கப்பட்ட போதிலும் நாம் எதிர்பார்க்காத விளைவுகளான அரசு முறையின் செயலற்ற தன்மைகள், குறைந்த அளவான போட்டி மனப்பான்மை, புத்தாக்கலை முளையிலே கிள்ளும் தன்மைகள் போன்றவை இருந்தன.




1990களில் (இது 80களிலேயே துவங்கியது என்று சிலர் கருதுகிறார்கள்) இந்தியப் பொருளாதாரத்தில் ஒரு முக்கியமான திருப்புமுனை ஏற்பட்டது. 1980 90களில் பொருளாதார மேல்மட்டத் தன்மைகளில் ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்ட நிலையில் 1991இல் அடிப்படை சீர்திருத்தங்களை அரசு மேற்கொண்டது. அப்போது, மத்திய மாநில அரசுகளின் நிதிப்பற்றாக்குறை, உயர் விலையேற்றம் ஏற்றுமதியை விட இறக்குமதி அதிகமாக இருந்தது ஆகிய காரணங்களால் அந்நிய செலாவணி பிரச்சினை ஏற்பட்டது. இதனை எதிர்கொள்ள இந்தியா பொருளாதார தாராளமயமாக்கலையும், சீர்திருத்தங்களையும் மேற்கொண்டது.

அனுமதி அளிக்கும் நடைமுறையைத் தளர்த்தி, அந்நிய நேரடி முதலீட்டை ஊக்கப்படுத்தி தனியார் மயமாக்கலை அரசு துரிதப்படுத்தியது. இந்திய ரூபாயின் மதிப்பு அன்றாடம் மாறுபடக்கூடியதாக அறிவிக்கப்பட்டு, மதிப்பு குறைவதால் நம் பொருளாதாரத்தின் போட்டித் தன்மை மிகும் என்று கருதப்பட்டது. ஏற்றுமதி, இறக்குமதிக்கான ரூபாய் பயன்பாட்டை அந்நிய செலாவணிக்கு முழுவதுமாக மாற்ற அனுமதிக்கப்பட்டது. மூலதன நிதிப் பரிவர்த்தனையில் அந்நிய செலாவணி மாற்று ஒருபகுதியாக அனுமதிக்கப்பட்டது. இப்படி சந்தைக்கேற்ற பொருளாதாரச் சீர்திருத்தங்களால் வளர்ச்சிக்கான பாதைகள் தோன்றின, தொழில்முனைவுகள் ஏற்பட்டன, வெளிநாட்டு மூதலீடுகள் அதிகரித்தன. இந்தியாவின் உண்மையான வளர்ச்சி விகிதம் 1980களில் 5.5 சதவிகிதம் இருந்த



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

நிலையில் நிதியாண்டு 1993 முதல் நிதியாண்டு 2000 வரையான காலகட்டத்தில் 6.3 சதவிகிதமாக உயர்ந்தது. இந்தியாவின் வெளிநாட்டு வணிகம் சிறப்பாக உயர்ந்து, 1990இல் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் பொருள்கள் மற்றும் சேவைகளில் நம் உலக வணிகம் 17.2 சதவிகிதம் இருந்த நிலையில் 2000வது ஆண்டில் 30.6 சதவிகிதமாக உயர்ந்தது.

இந்த நூற்றாண்டு தொடக்கத்தில் இந்தச் சீர்திருத்தங்கள் தொடர்ந்து நடைபெற்றன சில தடங்கல்களுக்கிடையே. 2000வது ஆண்டுகளின் துவக்கத்தில் நேரடி அந்நிய முதலீடு மேலும் தளர்த்தப்பட்டது. 1999இல் மேற்கொள்ளப்பட்ட புதிய தொலைத்தொடர்புக் கொள்கை இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத்துறையில் பெரிய வளர்ச்சியை ஏற்படுத்தியது. இதனால் மற்ற துறைகளுக்கும் நல்ல பயன்கள் ஏற்பட்டன. இக்கால கட்டத்தில் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை வெளி யிடுவதும், அவற்றைத் தனியார் மயமாக்குவதும் வலுப்பெற்றன. இதற்காக, ஒரு தனி அமைச்சகம் அமைக்கப்பட்டது. பொருளாதார மேல்மட்ட நிலைமைகளின் ஏற்றத்தாழ்வுகளைச் சீர்செய்ய அடிப்படைச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. நிதிநிலைப் பொறுப்பு மற்றும் நிதிநிலை மேலாண்மைச் சட்டம் இயற்றப்பட்டு, காலம்காலமாக இருந்து வந்த உயர் அளவு நிதிப்பற்றாக்குறை எதிர் கொள்ளப்பட்டது. 1991க்குப் பிறகு, மேற்கொள்ளபட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்களினால் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட வாராக் கடன்களை எதிர்கொள்ள வாராக் கடன்களை வசூல் செய்வதற்கான SARFAESI சட்டம் 2002 இயற்றப்பட்டு வட்டி விகிதங்களை மாற்றியமைக்க இந்திய ரிசர்வ் வங்கிக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டது. இப்படிப்பட்ட அடிப்படைச் சீர்திருத்தங்களினால் இந்தியாவின் மேல்மட்ட பொருளாதாரச் செயல்பாடுகளுக்கான நல்ல அடித்தளம் அமைக்கப்பட்டு, அடுத்த சில ஆண்டுகளில் இந்தியா உயர் வளர்ச்சி விகிதம் கண்டது. 2003–2008 காலகட்டத்தில் உலகப் பொருளாதார வளர்ச்சி விகிதம் 4.8 ஆக இருந்த நிலையில் இந்தியாவின் சராசரிப் பொருளாதார வளர்ச்சி 8 சதவிகிதத்திற்கும் அதிகமாக ஆனது. உள்நாட்டுப் பொருளாதாரச் செயல்பாடுகள் தொடர்ந்து முன்னேறிய நிலையிலும், தனியார் நிறுவனங்களின் செயல்பாடுகள் சிறப்பாக இருந்த நிலைமையிலும், முதலீடுக்கான சூழல் சாதகமாக இருந்த நிலையிலும் உலகளவில் பணப்புழக்கம் தாராளமாக இருந்த நிலையிலும் நல்ல வட்டி விகிதங்கள் இருந்ததாலும், 2004 முதல் 2008 வரை இந்தியாவிற்கு முதலீட்டு வரவுகள் கணிசமாக உயர்ந்தன. உள்நாட்டுக் கடன் வளர்ச்சி, குறிப்பாக வங்கிக் கடன்களுக்கான வளர்ச்சி, உள்நாட்டு மொத்த உற்பத்தியை ஒப்பிடும் போது இரண்டு மடங்காக உயர்ந்தது. 2022–23க்கான இந்தியாவின் பொருளாதார ஆய்வறிக்கை அத்தியாயம் 2இல் இதற்கான கூடுதல் விளக்கங்கள் உள்ளன.

இப்படி, இந்த நூற்றாணடின் துவக்கத்தில் ஏற்பட்ட தாங்கமுடியாத கடன் பெருக்கத்தால் வங்கிகளின் வாராக்கடன்களும் அதிகரித்தன. சில நிறுவனங்களின் முதலீடுகள் பயனளிக்காத நிலையில் அவர்களால் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. இப்படி, நிதி மற்றும் நிதி அல்லா நிறுவனங்கள் பல ஆண்டுகளாக நெருக்கடிகளைச் சந்தித்து வந்த நிலையில் அரசும், இந்திய ரிசர்வ் வங்கியும் பல கொள்கைமுனைவுகளை மேற்கொண்டு நிதித்துறை நிறுவனங்கள் அழுத்தத்திலிருந்து வெளிவர உதவி செய்தன. SARFAESI சட்டத்தில் திருத்தங்கள், திவால் நெறிமுறைச் செயல்பாடுகள், வங்கிகளின் கடன் பட்டியல்களை மறு பரிசீலனை செய்தல், அதற்குத் தேவையான திருத்தங்களை உடனடியாகச் செய்தல், பொதுத்துறை நிறுவனங்களின் மூலதனத்தை உயர்த்துதல் மற்றும் பொதுத்துறை வங்கிகளின் ஒருங்கிணைப்பு ஆகியவற்றால் வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்களின் நிதி அழுத்தங்கள் சீர் செய்யப்படும்.

**புதிய தலைமுறை சீர்திருத்தங்கள்:**

இந்த நூற்றாண்டின் இரண்டாவது பத்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிதிநிலை சீரமைப்புகளினால் இந்தியாவின் வளர்ச்சியும், துடிப்பும் சற்றே குறைந்தது. ஆகவே, 2014க்குப் பிறகு, இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கையின் பார்வை நாட்டின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக வணிகச் செயல்பாடுகளுக்கான நெறிமுறைகளை குறைத்தல் மற்றும் மின்மய உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதுமாக அமைந்தது. இம்முனைவுகள் மூலம் வணிகச் சூழல் மேம்படுத்தப்பட்டு, இந்தியாவின் பொருள் உற்பத்தித்துறை போட்டிமிக்கதாக உருவாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எளிதாக வணிகம் செய்வதற்காகவும்,



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும், பலவகையான பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அரசின் கட்டமைப்பும், செயல்பாடுகளும் மேம்படுத்தப்பட்டன.

திவால் நெறிமுறைச் செயல்பாடுகள் மற்றும் கட்டுமானத்துறை ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு சட்டம் போன்ற சீர்திருத்தங்களால் ஒழுங்குமுறைச் செயல்பாடுகள் எளிதாக்கப்பட்டு, வணிகம் செய்வது எளிதாக்கப்பட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கை மிகுந்துள்ளது. திவால் நெறிமுறைச் செயல்பாடுகள் தனியார் நிறுவனங்களின் நிதி நெருக்கடிகளைத் திருத்துவதில் வெற்றி கண்டுள்ளது. இந்த திவால் நெறிமுறை செயல்பாடுகளிலிருந்து விலக்கு பெறுவதற்காக கடன்களைச் செலுத்த முடியாத நிறுவனங்கள், நீதிமன்றங்களுக்கு வெளியே உடன்பாடுகளைக் காணுகின்றன. கட்டுமானத்துறை ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு சட்டத்தால் கட்டுமானத்துறை முறைப்படுத்தப்பட்டு, இத்துறையில் முதலீடுகள் அதிகரித்து வருகின்றன.

இது அல்லாமல், 2014 முதல் இந்தியாவின் வரி வசூல் சூழலில் பெருத்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த பொருள்கள் மற்றும் சேவைகள் வரி உள்ளிட்ட வரிக் கொள்கைச் சீர்திருத்தங்கள், நிறுவன மற்றும் தனியார் வரிக் குறைப்பு, இறையாண்மைச் சொத்து நிதியங்கள் மற்றும் பென்ஷன் நிதியங்கள் ஆகியவற்றிற்கு வரிகள் விலக்கு, தனியார் நிறுவனங்கள் இலாப ஈவுத்தொகை வழங்கலுக்கான வரிவிலக்கு, முன் தேதியிட்ட வரிகள் ஒழிப்பு ஆகியவை தனியார் மற்றும் வணிகங்களின் வரிச் சுமைகளைக் குறைத்துள்ளன. பொருள்கள் மற்றும் சேவைகள் வரிச் செயல்பாட்டினால் வரி திரட்டல் அடித்தளம் விரிவாக்கப் பட்டுள்ளது, செலுத்தும் முறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன. மாநிலங்க ளுக்கிடையே நாடெங்கிலும் பொருளகள் மற்றும் சேவைகள் பரிமாற்றம் எளிதாக்கப்பட்டுள்ளது. பொருளாதாரமும் முறைப்படுத்தப் பட்டுள்ளது. ஜிஎஸ்டி வருமானமும் அதற்கு முந்தைய காலத்து வரி வருமானத்தை விட கணிசமாக உயர்ந்துள்ளது. 2018 நிதியாண்டில் 0.9 இலட்சம் கோடி ரூபாயாக இருந்த வரி வருமானம் 2023 நிதியாண்டில் 1.5 இலட்சம் கோடி ரூபாயாகவும் நடப்பு நிதியாண்டில் முதல் மூன்று மாதங்களில் 1.7 இலட்சம் கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. பெருமளவிலான சிறு வணிகங்கள் ஜிஎஸ்டி வலைக்குள் கொண்டு வரப்பட்டு, இந்த வரி செலுத்துவோரின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

நீண்ட கால உள்கட்டமைப்பு வசதி இடைவெளி மற்றும் பொருள் பரிமாற்ற வலைத் தொடர் சிக்கல்களை அகற்ற 2014 முதல் பொதுச் செலவு பன்மடங்கு உயர்ந்துள்ளது. 2013 14இல் உள்நாட்டு உற்பத்தியில் 2.8 சதவிகிதமாக இருந்த மத்திய அரசின் முதலீட்டுச் செலவினங்கள் 2022–23 இல் 3.8 சதவிகிதமாக உயர்ந்துள்ளன. இந்த மூலதன முதலீடுகளால் பல உள்கட்டமைப்பு வசதிகள் நவீனமயமாக்கப்பட்டுள்ளன, உதாரணமாக சாலை வழித்தொடர்பு (பாரத் மாலா), துறைமுகங்கள் உள்கட்டமைப்பு (சாகர் மாலா), மின்சார வசதி, ரயில்வே, விமான நிலையங்கள் மற்றும் வான்வழித்தடங்கள் (உடான்). தேசிய பொருள்கள் சேவைகள் பரிமாற்ற உள்கட்டமைப்புக் கொள்கை 2022இன்படி, இந்த முனைவுகளை மேற்கொள்ள ஒரு மேல்மட்ட சூழல் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் பரந்த நிலப்பரப்பை கவனத்தில் கொண்டு அனைத்துப் பகுதிகளிலும் நீண்ட கால உள்கட்டமைப்பு மேம்பாடுகளை மேற்கொள்ள தேசிய உள்கட்டமைப்புச் செயல்முறை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தொலைநோக்கு அணுகுமுறையின்படி, 2024–25 வரை ரூபாய் 111 இலட்சம் கோடி உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்காக செலவிடப்பட உள்ளது. தற்போது. ரூ.108 இலட்சம் கோடி அளவில் 9000 தேசிய உள்கட்டமைப்புச் செயல்பாட்டுத் திட்டங்கள் பல கட்டங்களில் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இது அல்லாமல், நாட்டில் முதலீட்டுச் சூழலை மேம்படுத்த பல சீர்திருத்தங்களும், அரசு முனைவுகளும் கடந்த ஒன்பது ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 'சுயசார்பு இந்தியா' மற்றும் 'இந்தியாவில் உற்பத்தி செய்வோம்' போன்ற திட்டங்கள் மூலம் இந்தியாவில் உற்பத்தித்திறன் மேம்படுத்தப்பட்டு, ஏற்றுமதியும் உயர்த்தப்பட உள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து, உற்பத்தித்துறையில் உலகளாவிய முதன்மை நிறுவனங் களை உருவாக்க உற்பத்தி சார்ந்த ஊக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. மிக முக்கியமான துறைகளான பாதுகாப்பு, சுரங்கங்கள் மற்றும் விண்வெளி உள்ளிட்டவை தனியார் முதலீட்டிற்காக தாராளமயமாக்கப்பட்டுள்ளன. இது அல்லாமல், அந்நிய



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

நேரடி முதலீட்டுக் கொள்கை தாராளமயமாக்கப்பட்டு, தற்போது கிட்டத்தட்ட எல்லாத் துறைகளிலும் சுயமாகவே 100 சதவிகித வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது அல்லாமல், புதிய பொதுத்துறை நிறுவனங்கள் கொள்கை உருவாக்கப்பட்டு, அரசு நிறுவனங்களின் செயல்பாடு ஒரு சில அத்தியாவசிய முக்கியத் துறைகளுக்கு மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கொள்கைத் தெளிவின்மையை குறைக்க முக்கியமான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. கம்பெனிச் சட்டம் 2013இல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, சிறு பொருளாதாரத் தவறுகள் குற்றங்களாகக் கருதப்படாமல் மாற்றியமைக்கப்பட்டுள்ளதால் வணிகங்கள் செய்வது, எளிதாக்கப்பட்டுள்ளது. இதனால் நிலுவையிலிருந்த 1400 வழக்குகள் நீதிமன்றங்களுக்கு வெளியே தீர்வு காணப்பட்டது. இது அல்லாமல், 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் தண்டனையை தவிர்ப்பதற்காக தாங்களே முன்வந்து தங்களுடைய தவறுகளைத் திருத்திக் கொண்டிருக்கிறார்கள். இது அல்லாமல் கடந்த 9 ஆண்டுகளில் தேவையற்ற சுமார் 25000 செயல்பாடுகள் விலக்கப்பட்டுள்ளன மற்றும் 1400க்கும் மேற்பட்ட பழைய சட்டங்கள் விலக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசு மேற்கொண்டுள்ள சீர்திருத்தங்கள் தனியார் துறையில் பெரு நிறுவனங்களுக்கு மட்டுமல்ல. கோவிட் பெருந்தொற்றுத் தாக்கத் திலிருந்து வெளிவந்து மேம்பட சிறு வணிகங்களுக்கும் தொடர்ந்து சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அவசர காலக் கடன் உறுதித்திட்டம், சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ், குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் யாவை என்ற விளக்கங்கள், குறு, சிறு, நடுத்தரத் தொழில்நிறுவனங்களுக்குச் செலுத்தப்படும் நிதித்தொகைகளுக்கான தாமதத்தை சீர் செய்யும் திட்டம், சில்லறை மற்றும் மொத்த வணிகத்தையும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் முனைவுகளாக ஏற்றுக்கொள்ளுதல், குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நிலை மாறும் போது அடுத்த மூன்று வருடங்களுக்கு வரி அல்லாத சலுகைகள் நீட்டிப்பு ஆகியன இந்த சிறு வணிகத்துறையின் மேம்பாட்டிற்காகச் செய்யப்பட்டுள்ளன.

இப்படி மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களில் தொழில்நுட்பமும், மின்மயத் தளங்களும் ஒருங்கிணைக் கப்பட்டுள்ளன. 2014–2019 வரை இந்தியாவின் அடிப்படை மின்மயப் பொருளாதாரம், பொதுவான பொருளாதார வளர்ச்சியைவிட 2.4 மடங்கு வளர்ச்சி கண்டுள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. இப்படி மின்மயமாக்கப்பட்டதால் பொருளாதாரத்தின் மீது நல்ல தாக்கம் ஏற்பட்டு, எல்லோரையும் உள்ளடக்கிய உயர் நிதிநிலைமை அதிகமான முறைப்படுத்தல் மற்றும் திறமை மேம்பாடு ஆகியவை அதிகரித்து இந்தியாவின் வளர்ச்சி வலுவாக்கப்பட்டுள்ளது.

மின்மய உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டால் ஒவ்வொருவருக்கும் மின்மய அடையாளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால், நிதிச் செயல்பாடுகளையும் சந்தைகளையும் அணுகவும் வசதிகள் மேம்பட்டுள்ளன. நிதிச் செயல்பாடுகளின் செலவினங்கள் குறைந்துள்ளன. வரி வருமானம் அதிகரித்துள்ளது. சமீபத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள மின்மய முனைவுகளான பொது வழி வலைத்தொடர் மின்மய வணிகம் மற்றும் கணக்குகள் ஒருங்கிணைப்புச் செயல்முறை ஆகியவற்றால் பொருளாதார வளர்ச்சி மேலும் மேம்பட வாய்ப்புள்ளது. பொதுவழி வலைத்தொடர் மின்மய வணிகத்தால் வலைதளம் மூலம் செயயப்படும் வணிகங்களுக்கு அதிக சந்தை வாய்ப்புகள் கிடைக்கும். இதனால், வியாபார வளர்ச்சியும், விரிவாக்கமும் ஏற்படும். கணக்குகளின் ஒருங்கிணைப்புச் செயல்பாட்டால் சிறுவணிகங்கள் கடன் பெறும் வாய்ப்புகள் அதிகரிக்கும். இதனால், அவர்களின் மேம்பாடும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் மேம்படும்.

**இனிவரும் காலங்களில்**

இந்தியப் பொருளாதாரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள புதுயுகச் சீர்திருத்தங்களினால் அமுத காலத்தில் சிறப்பான வளாச்சிக்கு அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக உருவாக்கப்பட்டுள்ள சிறப்பான, வளமான நிதித்துறையினால் கடன் வழங்குதல் சீரமைக்கப்பட்டு, அடுத்த சில ஆண்டுகளில் அதிக முதலீடுகளாலும் நுகர்வோராலும் பொருளாதார வளர்ச்சி சிறப்பாக விளங்கும். கடன் வழங்கு சுழற்சி சீரமைக்கப்பட்டு, பொதுத்துறை நிறுவனங்களின் மூலதன விலீ ஜீவாக்கத்தினால் தனியார்துறை மூலதன விரிவாக்கமும் அதிகரிக்கும். மின்மயமாக்கலில் மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் மற்றும் அதனால் விளையும் பலன்களான அதிக




https://www.tnpscthervuthunaivan.com/

அளவிலான முறைப்படுத்தல், எல்லோரையும் உள்ளடக்கிய நிதி வசதிகள் மற்றும் மேம்பட்ட பொருளாதார வாய்ப்புகள் ஆகியவைகளினால் அடுத்த சில ஆண்டுகளில் இந்தியப் பொருளாதார வளர்ச்சி உந்தப்படும். உயர்தர உற்பத்தி மற்றும் உயர் மதிப்புக்கூட்டுச் சேவைகளின் துரித வளர்ச்சிக்கான ஓர் உயரிய சூழலை உருவாக்க, மின்மய உள்கட்டமைப்பு விரிவாக்கம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும், பொது மற்றும் தனியார் நிறுவனங்களில் ஆய்வு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் உயர்த்தப்பட வேண்டும் மற்றும் திறன்பட்ட பணியாளர்கள் அதிக அளவில் உருவாக்கப்பட வேண்டும். 2047ஆம் ஆண்டு வரை தொடர்ந்து நிலையான, சிறப்பான வளர்ச்சி பெற செயற்கை நுண்ணறிவு மற்றும் பருவநிலை மாற்றங்களுக்கேற்ப எரிசக்தி உற்பத்தி மாற்றங்கள் ஆகியவை சார்ந்த தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மேம்படுவதற்கும் அரசியல் மற்றும் பொருளாதாரச் சவால்களைப் புரிந்துகொண்டு இந்தியாவின் மக்கள்தொகை அமைப்பைக் கருத்தில் கொண்டு அதற்குத் தேவையான பொருளாதாரச் சீர்திருத்தங்களை நாம் செய்துகொண்டே வர வேண்டும்.

---

**– வி.அனந்த நாகேஸ்வரன், தலைமைப் பொருளாதார ஆலோசகர், இந்திய அரசு.**



https://www.tnpscthervuthunaivan.com/



# ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்

– ஜி.கிஷன் ரெட்டி

**'ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்' (AKAM) என்பது இந்திய அரசின் முதன்மையான முயற்சியாகும். இது இந்தியா சுதந்திரம் அடைந்த 75 ஆண்டுகளை நினைவுகூரும் வகையில் தொடங்கப்பட்டுள்ள அமிர்தப் பெருவிழா உலகில் எங்கும் இல்லாத மிகப்பெரிய கொண்டாட்ட முயற்சிகளில் ஒன்றாகும், ஒட்டுமொத்த சமூகமும் மிகப் பரந்த அளவில் இதில் பங்கேற்று வந்துள்ளது. ஒருங்கிணைக்கும் சக்தியாக இது செயல்பட்டு வந்துள்ளது.**

ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் 2021 மார்ச் மாதத்தில் தொடங்கப்பட்டதிலிருந்து, மத்திய அரசு, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள், அரசுத்துறைகள், தனியார் அமைப்புகள் ஆகியவற்றால் கூட்டாக 1.7 இலட்சத்திற்கும் அதிகமான நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன. நகர்ப்புறங்கள், கிராமப்புறப் பகுதிகள், இந்தியாவின் தொலைதூர எல்லை கிராமங்கள் ஆகியவற்றிலும் இந்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. சுதந்திரப் பெருவிழா ஒரு மக்கள் இயக்கமாக மாறியுள்ளது. இந்தியா என்ற அதிசயத்தைக் கொண்டாட தேசம் ஒன்றுபட்டுள்ளது!

### அமுதப்பெருவிழாவின் ஐந்து தூண்கள்

பெருவிழாவின் பயணம் ஐந்து தூண்களுடன் தொடங்கியது சுதந்திரப் போராட்டம், யோசனைகள்@75, செயல்கள்@75, தீர்வுகள்@75, சாதனைகள்@75, ஆகிய ஐந்து தலைப்புகளின் கீழ் பல்வேறு நிகழ்ச்சிகள் இந்தியா முழுவதும் நடத்தப்பட்டன. இந்த ஒவ்வொரு தூணும் இந்தியாவின் கதையை உள்ளடக்கியது, தேசத்தின் பரிணாமத்தை விவரிப்பது. சுதந்திரப் போராட்டம் நமது வரலாற்றின் மைல்கற்களை நினைவுகூருகிறது.

சுதந்திரப் போராட்டம் எனும் தலைப்பு அதிகம் அறியப்படாத



விடுதலைப் போராட்ட நாயகர்களைக் கொண்டாடுகிறது. நமது தேசத்தை வடிவமைத்த யோசனைகளையும் இலட்சியங் களையும் யோசனைகள்@75 கொண்டாடுகிறது, புதிய இந்தியாவுக்கான கடமைகளை நிறைவேற்றுவதில் காணப்பட்ட முன்னேற்றங்களை செயல்கள்@75 எடுத்துக்காட்டுகிறது. குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்கான நமது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துவது பற்றி தீர்வுகள்@75 எடுத்துரைக்கிறது. பல்வேறு துறைகளில் இந்தியாவின் முன்னேற்றங்களையும் பரிணாம வளர்ச்சியையும் சாதனைகள்@75 காட்டுகிறது.

### முன்முயற்சிகளும் பிரச்சாரங்களும்

அம்ரித் உத்சவ் கொண்டாங்களின் கீழ் எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகளில் ஒன்று இந்தியாவில் உள்ள 6.5 இலட்சம் கிராமங்களின் கலாச்சார வரைபடத்தை அவசியமானதாக ஆக்கியிருக்கிறது. இதில் ஒவ்வொரு கிராமத்தின் புவியியல் அமைப்பு, மக்கள்தொகை, அந்த கிராமத்தின் ஆக்கப் பண்புகளின் விவரக்குறிப்பு ஆகியவை இதில் சேர்க்கப்படுகின்றன. நமது சுதந்திரப் போராட்டத்தின் அதிகம்





https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

அறியப்படாத, மறக்கப்பட்ட மாவீரர்களை 'போற்ற மறந்த மாவீரா்கள்' பகுதி நினைவுகூர்ந்தது, இதன் விளைவாக AKAM இணையதளத்தில் இவர்களைப் பற்றிய 8858 கதைகள் வெளியிடப்பட்டன. 'டிஜிட்டல் மாவட்ட களஞ்சியம் (Digital District Repository - DDR) இந்திய சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய மக்கள், நிகழ்வுகள், இடங்கள் ஆகியவற்றின் கதைகளை அந்தந்த மாவட்டத்தின் நுண்ணளவில் கண்டறிந்து ஆவணப்படுத்த முயற்சித்தது. இத்தகைய 11,935 கதைகள் AKAM இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. ஹர் கர் திரங்கா HarGharTiranga முன்முயற்சி மிகப்பெரிய பிரச்சாரமாக அமைந்திருந்தது. இந்தியாவின் 75 வது சுதந்திரத்தைக் குறிக்கும் வகையில் தேசியக் கொடியை வீடுகள் தோறும் ஏற்றுவதற்கு மக்களை ஊக்குவித்தது. இந்தப் பிரச்சாரம் 23 கோடிக்கும் அதிகமான வீடுகளைச் சென்றடைந்தது. அங்கு மக்கள் தங்கள் வீடுகளில் தேசியக் கொடியை ஏற்றினர்.ஆறு கோடிக்கும் அதிகமான மக்கள் ஆன்லைனில் கொடிகளை இணைத்திருந்தனர்.

**நிகழ்வுகள் பற்றிய கண்ணோட்டம்**

AKAM கொண்டாட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளில் மக்கள் பங்கேற்பு மாபெரும் அளவுகளில் இருந்தது. உலகளாவிய தளத்தில் இந்தியாவின் தெருக்களில் இருந்து தனித்துவமான திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் ‘படைப்பாற்றலில் ஒற்றுமை’ என்ற போட்டி நடத்தப்பட்டது. இதில் மொத்தம் 5,16,885 உள்ளீடுகள் கலாச்சார அமைச்சகத்தால் பெறப்பட்டன. இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு இறுதி



நிகழ்வில் பரிசுகள் வழங்கப்பட்டன. கர்தவ்யா பாதையில் ஒவ்வொரு வார இறுதியில் ஏற்பாடு செய்யப்படும் கலாஞ்சலி கலாச்சார நிகழ்ச்சிகளை ரசிக்க ஆயிரக்கணக்கான பார்வையாளர்களை இந்தியா கேட்டில் திறந்த வெளியான நடுவிடத்தைச் சுற்றி அமைந்திருக்கும் சுற்று அரங்கங்களுக்கு (Amphitheatres) வந்திருந்தனர். இந்த நிகழ்வுகள் இந்தியப் பாரம்பரியத்தின் சமூக கலாச்சார நுணுக்கங்களை எடுத்துக்காட்டின.

தேசத்தின் மீது காஷ்மீர் கலாச்சாரத்தின் தாக்கத்தைப் பற்றி விட்டாஸ்டா எனும் பெயரில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் எடுத்துரைத்தன. விடாஸ்டாவின் மூன்று நிகழ்வுகள் தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் ஜம்மு மற்றும் காஷ்மீர் ஆகிய இடங்களில் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன, காஷ்மீருக்கும் இந்தப்பகுதிகளுக்கும் உள்ள ஒற்றுமைகளை இந்த நிகழ்ச்சிகள் எடுத்துரைத்தன.

AKAMஇன் கீழ் உள்ள மற்றொரு நிகழ்வு தாரா, இந்தியாவின் அறிவாற்றலை விளக்கும் கதைப்பாடல் இது. மருத்துவம், கணிதம், வானியல், வேதியியல் போன்ற துறைகளில் இந்தியாவின் பண்டைய அறிவியல் அறிவை இந்தப்பாடல்கள் அடிக்கோடிட்டுக் காட்டின.

AKAM இதன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட மற்ற முக்கிய நிகழ்வுகளாவன: பழங்குடியினருக்கான உள்நாட்டு விளையாட்டு நிகழ்வு (Janjatiya Khel Mahotsav,) குஜராத்தின் மாதவ்பூர் கெத் திருவிழா (MadhavpurGhed Festival,) சுதேசி விஞ்ஞானிகள் தொடர் (Swadeshi Scientists series,) இந்தியாவின் எல்லைப்புறப் பகுதிகள் (Frontiers of India), அமிர்த சமகம் (AmritSamagam), ஆன்மீகத் தலைவர்கள் மாநாடு (Spiritual Leaders Conference),





https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



ராஷ்ட்ரிய சமஸ்கிருதி மஹோத்சவ் (RashtriyaSanskritiMahotsav), கலிங்க உத்சவ் (KalingaUtsav), காசி தமிழ் சங்கமம் (Kashi Tamil Sangamam) மற்றும் பல. இந்த நிகழ்வுகள் மூலம், ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற உணர்வு மக்களின் இதயங்களில் ஒன்று திரட்டப்பட்டு, இந்தப் பெருவிழாவை மக்கள் ஒன்று கூடிக் கொண்டாடினர்.

நாம் சுதந்திரம் பெற்ற 75ஆவது ஆண்டில் நடைபெற்ற பல்வேறு நினைவேந்தல் நிகழ்வுகள், கடந்த ஆயிரம் ஆண்டுகளில் இந்த மாபெரும் தேசத்திற்கு அடித்தளமிட்டவர்களைக் கௌரவிப்பதில் உள்ள நமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தின. குரு கோவிந்த் சிங் ஜியின் மகனான பாபா ஃபதே சிங் மற்றும் ஜோராவர் சிங் ஆகியோரின் தியாகத்தை போற்றும் வகையில் வீர் பால் திவாஸ் கொண்டாடப்பட்டது. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 125வது பிறந்தநாள் இந்தியா முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்ட தொடர் நிகழ்வுகளின் மூலம் கொண்டாடப்பட்டது. கர்தவ்யா பாதையில் நேதாஜிக்கு வெண்கலச் சிலை நிறுவப்பட்டதுடன் இந்தக் கொண்டாட்டம் முடிவடைந்தது. இதே போல், ஸ்ரீ அரவிந்த கோஷின் 150வது பிறந்தநாள், அல்லூரி சீதாராம ராஜுவின் 125வது பிறந்தநாள் விழா, ராஜா ராம் மோகன் ராயின் 350வது பிறந்தநாள், மகரிஷி தயானந்த சரஸ்வதியின் 200வது பிறந்தநாள் விழா ஆகியவை நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டன. இந்நிகழ்ச்சிகளில் பிரதமர், பல்வேறு உயரதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### பிரசாரங்கள் 2.0

AKAM இன் இந்த இரண்டாம் கட்டத்தில், நமது 75ஆவது சுதந்திர தினத்தை நிறைவு செய்யும் சுதந்திர தின உரையின் போது பிரதமர் அவர்களால் வெளிப்படுத்தப்பட்ட பஞ்ச பூதத்தின் அடிப்படையிலான ஒன்பது புதிய கருப்பொருள்கள் அடையாளம் காணப்பட்டன. இந்தக் கருப்பொருள்களில் பெண்களும் குழந்தைகளும், பழங்குடியினருக்கு அதிகாரமளித்தல், நீர், சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறை (LiFE), உடல்நலமும் ஆரோக்கியமும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, ஆத்மநிர்பர் பாரத், கலாச்சாரப் பெருமையும் ஒற்றுமையும் ஆகியவை இதில் அடங்கும். அமைச்சகங்கள், துறைகள், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் போன்ற அனைத்துப் பங்குதாரர்களின் ஆதரவுடனும் ஈடுபாட்டுடனும் இந்த பிரச்சாரங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டன. இது வருங்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பிரச்சாரங்களின் அடித்தளத்தை அமைத்துத் தரும். இந்தியாவின் கடமைக்காலத்தின் புகழ்பெற்ற பயணத்தை விளக்கப்படமாக உருவாக்கி அளித்திடும்.

---

**– ஜி கிஷன் ரெட்டி, மத்திய கலாச்சாரம், சுற்றுலா மற்றும் வடகிழக்குப் பிராந்தியத்தின் மேம்பாட்டிற்கான அமைச்சர்,**





https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# தமிழ் சினிமா கடந்து வந்த பாதை

– தியடோர் பாஸ்கரன்

**சினிமா இங்கு தோன்றிய போது இது ஒரு அசுரக் குழந்தையின் பிறப்பு என்பதற்கான எந்தவிதமான அறிகுறியும் இல்லை. முதல் சலனப்படம் சென்னையில் 1897இல் திரையிடப்பட்டு பத்து, பதினைந்து ஆண்டுகளில், வணிக ரீதியில் வேரூன்ற ஆரம்பித்தது. நகரின் சில இடங்களில் சாலையோரக் காட்சிகளாகப் படங்கள் காட்டப்பட்டன. நகருக்கு மின்சாரம் இன்னும் வரவில்லை. கையால் சுழற்றப்பட்ட புரொஜெக்டர் மூலம் சில நிமிடங்கள் மட்டுமே ஓடிய துண்டுப் படங்கள், காட்சித்துணுக்குகள் போல, நுழைவுக் கட்டணத்துடன், திரையிடப்பட்டன.**

### தொடக்க காலம்

இது ஒரு பொழுதுபோக்குச் சாதனமாக வளரும் என்ற எதிர்பார்ப்பு அன்று இல்லையென்றாலும் முதலில் இது ஓர் அதிசயம் போல மக்களால் எதிர்கொள்ளப்பட்டன. படங்கள் அசைகின்றனவே.! திரையிடப்பட்ட பெருவாரியான படங்கள் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவைகளே. சிறு கதைப்படங்கள் வர ஆரம்பித்த பின் இக்காட்சிகளுக்கு மேலும் நல்ல வரவேற்பு கிடைத்தது. நிரந்தர கொட்டகைகள் எழுந்தன. சென்னையில் அண்ணாசாலை அஞ்சலக வளாகத்தில் இன்றும் இருக்கும் எலெக்ட்ரிக் தியேட்டர் தான் முதன்முதலில் 1900இல் தென்னிந்தியாவில் கட்டப்பட்ட திரையரங்கம். அதையடுத்து வெங்கையா 1913இல் கெயிட்டி கொட்டகையைக் கட்டினார்.

### படங்காட்டிகள்

சினிமா தொழிலுக்கு மூன்று பரிமாணங்கள் உண்டு. தயாரிப்பு, விநியோகம், படங்காட்டுதல் (Production, distribution and exhibition). இதில் படங்காட்டுதல் மூலம் தான் முதன்முதலாக தென்னிந்திய சினிமா தொழில் தோன்றியது. மனைவியின்



ஏ.நாராயணனும் மனைவி மீனாட்சியும்

வைரமாலையை விற்று, ஃபிரெஞ் சுக்காரர் டுபான் (Dupont) இடமிருந்து, 2500 ரூபாய்க்கு ஒரு புரொஜெக்டரையும் சில துண்டுப்படங்களையும் சாமிக்கண்ணு வின்சென்ட் வாங்கினார். திருச்சியில் ஒரு கூடாரத்தில் படங்காட்ட ஆரம்பித்து பின்னர் திருவனந்தபுரம், மதுரை நகர்களில் முகாமிட்டு மதராஸுக்கு வந்து காட்சிகள் நடத்தினார். அங்கிருந்து வடக்கே சென்று பெஷாவர், லாகூர் பின்னர் லக்னோ நகரங்களில் படக்காட்சிகள் நடத்திவிட்டு 1909இல் மதராஸ் திரும்பினார். எஸ்பிளனேடில் (இன்றைய பாரிஸ் அருகே) கூடாரம் போட்டு சலனப்படங்களைத் திரை யிட்டார். இதே காலகட்டத்தில் வெங்கையா, செல்லம் செட்டியார் போன்ற படங்காட்டிகள் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

சினிமா தொழிலை இங்கு நிறுவ மதராஸிலிருக்கும் போது சாமிக்கண்ணு ஒரு முக்கியமான அடியெடுத்து வைத்தார். புரொஜக்டர்களை இறக்குமதி செய்து விற்க ஆரம்பித்தார். இதனால் புதிய திரையரங்குகள் வர ஏதுவாயிற்று. பின்னர் கோயம்பத்தூர் சென்று வெரைட்டி ஹால் என்ற பெரிய திரையரங்கு ஒன்று கட்டியதோடல்லாமல் வள்ளி திருமணம் (1933) போன்ற தமிழ் பேசும் படங்களையும் தயாரித்தார்.

### படத்தயாரிப்பு

இந்தியாவில் பல இடங்களில் படங்காட்டிகள் பயணித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில், சென்னையில் ஆர்.நடராஜ



https://www.tnpscthervuthunaivan.com/


1000 தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி

முதலியாருக்கு படம் தயாரிக்கும் கனவு வந்தது. வெளி நாட்டுப் படங்களையே திரையிட்டுக் கொண்டிருந்த காலத்தில் இந்தியா பிலிம்ஸ் என்ற ஸ்டுடியோவை கீழ்ப்பாக்கத்தில் நிறுவி 1916இல் கீசகவதம் என்ற படத்தை உருவாக்கினார். இதுதான் முதல் தமிழ்ப்படம். கதாபாத்திரங்கள் தமிழில் தான் பேசினார்கள். ஒலித்தடம் இல்லாததால் அவர்களின் பேச்சு திரையில் எழுத்து உருவில், விவரண அட்டைகள் (title cards) மூலம் காட்டப்பட்டன. ஒன்றன்பின் ஒன்றாகப் பல படப்பிடிப்பு தளங்கள் சென்னையில் நிறுவப்பட்டன. அதில் பெரியதும் அதிகமான படங்களை தயாரித்ததுமான ஏ.நாராயணனின் ஜெனரல் பிக்சர்ஸ் கார்ப்பரேஷன் தான். தமிழ் சினிமாவிற்கு அடித்தளமிட்டது இந்த நிறுவனம்தான்.

**பிறகு ஒலி வந்தது.**

ஒலி வந்த பின் சினிமாவின் வீச்சு பெருகியது. சினிமா அரங்குகள் மளமளவென்று எழுந்தன. எல்லா மக்களுக்கும் பொதுவான, ஒரு ஜனநாயகப் பொழுதுபோக்கு உருவானது. இதுவே ஒரு பெரிய சமுதாயப்புரட்சி. ஜாதி, சமயம், வகுப்பு, இனம் என்ற பாகுபாடுகளைத் தாண்டி ஒரே கூரையின் கீழ் எல்லா மக்களும் கூடக்கூடிய ஒரு முதல் பொதுவெளியாக சினிமா அரங்கு உருவானது.

இங்கே நாம் மனதில் கொள்ள வேண்டியது தமிழ் பேசும்படம் அதன் மௌன சகாப்தத்தின் தொடர்ச்சியாக இருக்கவில்லை. இங்கிலாந்து, ஃபிரான்ஸ் போன்ற நாடுகளில் சலனப் படங்களிலிருந்து பேசும்படம் இயல்பாகப் பரிணாம வளர்ச்சியடைந்தது. ஆனால் இங்கேயோ 16 வருட சலனப்படப் பாரம்பரியத்தை விட்டுவிட்டு, பாட்டு, நடனம், இசையமைப்பு, பாடும் நடிகர்கள் ஆகியோரைக் கொண்ட கம்பெனி நாடகங்களின் பாரம்பரியத்தை திரை ஸ்வீகரித்துக் கொண்டது. ஒரு ரெடிமேட் நிகழ்களை தயார் நிலையில் கம்பெனி நாடக வடிவில் அவர்களுக்குக் கிடைத்தது. ஆரம்பகால தமிழ் பேசும் படங்கள் படமாக்கப்பட்ட நாடகங்களாகவே உருவாயின.


திரும்பிப்பார் படத்தில் சாக்ரடீஸாக சிவாஜி கணேசன்

பேசும் படம் தோன்றி முதல் ஐந்து ஆண்டுகள் தமிழ்ப்படங்கள் பம்பாய், கல்கத்தா, புனா, கோலாப்பூர் போன்ற நகரங்களில் தயாரிக்கப்பட்டன. நாடகக் கம்பெனிகளின் நடிகர்கள், ஒரு குழுவாக இந்த ஊர்களுக்குச் சென்று, தங்கியிருந்து படத்தை முடித்தனர். முதல் பத்தாண்டுகளில் வந்த படங்கள் எல்லாமே புராணக்கதைகள் தான். அதிலும், நாடக உருவில், ஏற்கனவே பார்வையாளர்களுக்குத் தெரிந்திருந்த கதைகளே திரைப் படமாக்கப்பட்டதால் திரைமொழி, திரை இலக்கணம் வளர வாய்ப்பில்லாமல் போனது. நாடகக் கம்பெனிகளிருந்து வேல்சாமி கவிராயர் போன்ற வாத்தியார்களும், டி.ஆர்.ராஜகுமாரி, எம்.கே. தியாகராஜ பாகவதர் போன்ற நடிகர்களும் திரையுலகிற்கு நாடக பாணியைக் கொண்டு வந்தனர். சினிமாவின் தனி இயல்புகளை அவர்கள் அறிந்திருக்கவில்லை. நாடகத்திலிருப்பது போலவே, திரைப்படத்தின் ஒரு முக்கிய பகுதியாக இங்கு பாட்டு ஆனது. சில ஆண்டுகள் கழித்து, சமகாலக் கதைப்படங்கள் தயாரிக்கப்பட்ட போது ('சோஷியல்ஸ்) இதே நாடக பாணி தொடர்ந்தது. பாத்திரப் பேச்சால் கதையை நகர்த்தும் உத்தி பின்பற்றப்பட்டது.

**ஸ்டுடியோக்களின் காலம்**

தமிழ்நாட்டின் முதல் பேசும்பட ஸ்டுடியோ, ஸ்ரீனிவாசா சினிடோன் ஏ. நாராயணனால் எழுப்பப்பட்டு ஸ்ரீனிவாச கல்யாணம் (1934) படம் தயாரிக்கப்பட்டட்து. . நாராயணனின் மனைவி மீனாட்சி ஒலிப்பதிவாளராகச் செயல்பட்டார். ஜெமினி, ஜூபிடர், ஏ.வி.எம் போன்ற ஸ்டுடியோக்கள் நிறுவப்பட்ட பின்னர் படத்தயாரிப்புத் தொழில் வெகுவேகமாக வளர ஆரம்பித்தது. தொடர்ந்த சில பத்தாண்டுகளில் தமிழ் சினிமா பெரும் வளர்ச்சி கண்டு உலகின் ஒரு முக்கியமான சினிமாவாக உருவானது. இதை "ஸ்டுடியோக்களின் காலம்''


மர்மயோகி படத்தில் கரிகாலனாக எம். ஜி. ஆர்.

https://www.tnpscthervuthunaivan.com/



தாகம் படத்தில்
முத்துராமனும் நந்திதாவும்

என்று சில வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர், ஒரு பெரிய தொழிற்சாலை போல் இவை இயங்கின. நடிகர்கள் மாத சம்பளத்திற்கு வேலை செய்தார்கள். எஸ். எஸ்.வாசன் போன்றவர்கள் சினிமாத்துறையில் மேலோங்கி இருந்தனர். சந்திரலேகா (1948) மாயாபசார் (1957) போன்ற படங்கள் வெளி வந்த காலம் இது.

**திரைப்பாடல்கள்**

இந்தி, தெலுங்கு சினிமா போலவே தொடக்க காலத் தமிழ்ப்படங்களும் பாட்டுகள் நிறைந்த புராண அல்லது நாட்டாரியல் கதைகளாகவே, ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி (1947) போல் இருந்தன. இது கம்பெனி நாடகப் பாரம்பரியத்தின் தொடர்ச்சி. பேசும்படம் வந்து சில ஆண்டுகளிலேயே சினிமா பாட்டு ஏறக்குறைய ஒரு தனிக் கலையாக வளர்ந்து மக்களிடையே சினிமாவின் பிடிப்பை இறுக்கமாக்கியது. இசைத்தட்டுகளும், மக்கள் வாங்கக்கூடிய விலையில் கிடைத்த கிராமபோன்களும் சினிமா பாட்டுகளைப் பிரபலப்படுத்தின. சினிமா கலாசாரத்தின் ஒரு முக்கிய கூறாக பாட்டு உருவானது. மக்களின் வாழ்க்கையில் நாட்டுப்புறப்பாடல் கொண்டிருந்த இடத்தை திரைப்பாடல்கள் இன்று பிடித்துள்ளன. இரண்டையும் ரசிக்க இசையறிவு தேவையில்லை. இன்று மேலை நாடுகளில் பாப் இசை இருக்கும் இடத்தில் தமிழகத்தில் சினிமாப்பாட்டு மக்களிசையாக இருக்கின்றது. பண்பலை வானொலி, குறுந்தகடு, தொலைக்காட்சி போன்ற சாதனங்கள் திரைப்பாடல்களுக்குத் தனி ஊடக அந்தஸ்தை அளித்துள்ளன.

சுதந்திரம் வந்த பின் கிராமப்புறங்களுக்கு மின்சாரம் பரவியதோடு அங்கு சினிமாவும், நம் நாட்டிற்கே உரித்தான டூரிங் டாக்கீஸ் எனும் எனும் உத்தியுடன், செல்ல முடிந்தது. 1950களில் திரைப்படம் தமிழகத்தில் நன்கு பரவி மக்களின் வாழிவில் ஒன்றாகக் கலந்து விட்டது.



செல்லப்பிள்ளை படத்தில்
கே.ஆர்.ராமசாமியும் சாவித்திரியும்

**சினிமாவும் அரசியலும்**

தமிழ் பேசும் படம் தோன்றியதும் நாடகக் கம்பெனி கலைஞர்கள் பெருமளவில் சினிமா உலகிற்கு புலம் பெயர்ந்தனர். 1919 ஆண்டு நடந்த பஞ்சாப் படுகொலை என்றறியப்பட்ட ஜாலியன்வாலா பாக் நிகழ்வுநாடெங்கும் ஏற்படுத்திய அதிர்வு நாடகக்கலைஞர்களை சுதந்திரப்போராட்டதிற்குள் கொண்டு வந்தது. பின்னர் அவர்கள் சினிமா ஸ்டுடியோக்களுக்கும் நுழைந்த போது தங்களுடன் கூடவே தேசிய ஈடுபாட்டையும் பிரச்சார முறைகளையும் கொண்டு வந்தனர்.

சினிமா கலைஞர்கள் இரண்டு வகையில் தங்களை இந்திய தேசிய எழுச்சியில் ஈடுத்திக் கொண்டார்கள் ஒன்று திரையின் மூலம் தேசியக் கருத்துகளைப் பரப்புவது. இரண்டாவது நடிகர்கள் நேரிடையாக அரசியலில் ஈடுபடுவது. இத்தகைய பிணைப்பை ஊக்குவித்தவர் காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி. கலைஞர்கள் யாவரையும் காங்கிரஸுக்குள் கொண்டு வந்து ஆதரவு காட்டினார். தமிழ் சினிமாவின் சகல பரிமாணங்களையும் அரசியலுக்கு முதலில் பயன்படுத்தியது காங்கிரஸ்தான். தமிழ்நாட்டில் சினிமா அரசியல் ஊடாட்டம் இவ்வாறுதான் ஆரம்பித்தது.

கே.பி.சுந்தரம்பாள், சித்தூர் நாகையா போன்ற பல சினிமா நடிகர்கள், காங்கிரஸ் கட்சிக்கு தங்களது ஆதரவைத் தந்து நேரிடை அரசியலில் ஈடுபட்டனர். 1937 பொதுத்தேர்தலில் சுந்தராம்பாள், மற்ற பல நடிகர்களுடன் காங்கிரஸுக்காக பிரச்சாரத்தில் ஈடுபட்டார். 1958இல் காங்கிரஸ் ஆதரவுடன் மேல்சபையில் இடம் பெற்ற இவர் தான் நாட்டிலேயே முதன்முதலில் சட்டசபைக்குள் நுழைந்த திரைப்பட நடிகர்.

1937 முதல் 1939 வரை ராஜாஜி முதல்வராக மதராஸ் ராஜதானியில் காங்கிரஸ் ஆட்சி அமைத்த போது தணிக்கை முறை நடைமுறையில் இல்லாத நிலை யில்,தேச முன்னேற்றம், (1938)



முத்துராமனும் சுந்தரராஜனும்
மேஜர் சந்திரகாந்த் படத்தில்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

தியாகபூமி, (1939) மாத்ருபூமி (1939) போன்ற பல அரசியல் பிரச்சாரப் படங்கள் வெளியாயின. எந்தப் படமும் வெளியான போது தடைசெய்யப்படவில்லை. மாத்ருபூமியில் வந்த நமது ஜென்ம பூமி நமது ஜென்ம பூமி பாட்டு வெகு பிரபலமாகி பள்ளிகளில் பாடப்பட்டது.

**சினிமாவும் திராவிட இயக்கமும்**

சத்தியமூர்த்தி 1943இல் மறைகிறார். சினிமா கலைஞர்கள் சரியான தலைமையில்லாமல் தடுமாறிக் கொண்டிருந்தனர். அந்த மாபெரும் சக்தியை அன்றைய தி.மு.க தலைவர்கள் அண்ணாதுரை, கருணாநிதி போன்றோர் உணர்ந்து பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்களும் சினிமாவில் வசனகர்த்தாக்களாக இயங்கினர். ஆனால், சினிமாக்காரர்களை பெரியார் தொடர்ந்து தாக்கிக் கொண்டிருந்தார்.

திராவிட முன்னேற்றக்கழகம் சினிமாவில் ஈடுபாடு கொண்டபின், பல திரைப்படக் கலைஞர்கள் கழகத்தில் இணைந்தனர். கே.ஆர். ராமசாமி தொடக்க ஆண்டுகளில் இக்கட்சிக்கு பெரும் ஆதரவு தந்தார். என்.எஸ்.கிருஷ்ணனும் திமுகவுடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். எஸ்.எஸ்.ஆர் போன்ற நடிகர்கள் தேர்தலில் நின்று பெரும் வெற்றி பெற்றனர். பெரிய அளவில் தன் பிரபலத்தை தி.மு.க பயன்படுத்திக்கொள்ள எம்.ஜி.ஆர் அனுமதி கொடுத்தார். கட்சியின் நிழல் போல செயல்பட்ட அவரது ரசிகர்கள் அனைவரும் அரசியல் ரீதியாக ஒரே கருத்துக்களைக் கொண்டிருந்தனர். அதனால்தான் எம்.ஜி.ஆர் தனிக்கட்சி ஆரம்பித்த போது ஒருமுகமாக அவரை ஆதரித்தனர். கலைஞர்களை கூத்தாடிகள் என்று இகழ்ந்த காமராஜர் கூட 1967 தேர்தலில் சிவாஜி கணேசனின் உதவியை நாட வேண்டி வந்தது. ஆனால் சிவாஜி கணேசன் 3000 ரசிகர் மன்றத்துடன் அரசியலில் ஈடுபட்டபோதும் அவரால் தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை.

அரசியல் சினிமாவிற்கும் அரசியல் நோக்கங்களுக்காகத் தயாரிக்கப்படும் சினிமாவிற்கும் உள்ள வேறுபாட்டை நாம் மனதில் கொள்ள வேண்டும். அரசியல் சினிமாவின் கதையில், உள்ளடக்கத்தில் அரசியல் சித்தாந்தம் அடங்கியிருக்கும் . ஆகவே பாத்திரப்பேச்சு மூலம் பிரசங்கம் செய்ய தேவையிருக்காது. அவன் அமரன், (1955) தண்ணீர் தண்ணீர் (1981) போன்ற படங்களை இவ்வாறான படங்களாகக் கூறலாம். சினிமாவின் இயல்புகளை,



ஜெமினி ஸ்டுடியோ. வாசன், அண்ணதுரை, கருணாநிதி

கூறுகளை நன்கு உணர்ந்து அதைப் பயன்படுத்துபவர்களால் தான் அரசியல் சினிமாவை உருவாக்க முடியும். மக்களிடையே ஒரு நடிகரின் ஈர்ப்பை ஆதாரமாகக் கொண்டு கட்சியைப் பலப்படுத்த எடுக்கப்படும் படங்கள் இரண்டாவது வகையைச் சேர்ந்தவை.

**ரசிகர் மன்றங்கள்.**

நடிகர்களுக்கு ரசிகர் குழுக்கள் இயங்குவது மௌனப்பட காலத்திலேயே தமிழ்நாட்டில் துவங்கிவிட்டது என்றாலும்,



யாருக்காக அழுதான்? வகாப் காஷ்மிரி, கே.ஆர்.விஜயா, நாகேஷ்.

அறுபதுகளில் தான் அவை பரந்த அளவில் கட்டமைப்புடன் கட்சிகளின் நிழல் போல செயல்படத் தொடங்கின. திரை நட்சத்திரங்கள் கிராமதேவதை போல உருவாக்கப்பட்டனர். அவர்களைச் சுற்றி உருவாகியுள்ள பாலாபிஷேகம் போன்ற சம்பிரதாயங்களும் சடங்குகளும் இதையே நினைவுபடுத்துகின்றன. இந்த பின்புலத்திலும் இது போன்று சாரக்கட்டுகள் இல்லாமல் நடிகர்களாக பிரகாசிக்க முடியும் என்று நிரூபிப்பது போல ஜெமினி கணேசன், சத்யராஜ், சிவகுமார் போன்ற நடிகர்கள் ரசிகர் மன்றங்களை தவிர்த்திருக்கின்றனர். இன்றும் பரத், ஆர்யா, விஜய்சேதுபதி போன்ற இளம் நடிகர்கள் மன்றங்களில்லாமல் இயங்குகின்றனர்.

**பாத்திரப்பேச்சு**

தமிழ் சினிமாவில் ஒரு அடையாளம் பாத்திரப்பேச்சு மிகுந்திருப்பது. நாடகங்களிருந்து வந்த இந்தப் பழக்கம் திராவிட இயக்கத்திலிருந்து திரைக்கு வந்த வசனகர்த்தாக்களின் அடுக்குமொழி உரையாடல்களால் அழுத்தம் பெற்றது. தங்கள் அரசியல் சித்தாந்தங்களை விளக்கவும், சமுதாய அநீதிகளைச் சாடவும்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



உதிரிப்பூக்கள் படத்தில் ஒரு காட்சி

பாத்திரப் பேச்சை – வசனத்தைப் பயன்படுத்தினார்கள். இந்த நீண்ட வசனங்கள் ஒரு மேடைப் பேச்சின் பாணியில் அமைந்திருந்தன. காமிராக் கோணங்கள் கூட ஒரு பாத்திரம் சினிமாப் பார்வையாளர்களை நோக்கி ஒரு பிரசங்கம் பண்ணுவது போல அமைக்கப்பட்டிருந்தன. திரும்பிப்பார் (1953) போன்ற படங்கள் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. மக்களிடையே இத்தகைய வசனம் பெரும் வரவேற்பு பெற்றது. பாத்திரப்பேச்சு புத்தகவடிவிலும் கிராமபோன் தட்டு வடிவிலும் வெளியிடப்பட்டது.

## நட்சத்திரப் போட்டி

ஐம்பதுகளிலிருந்து தமிழ் சினிமாவின் இரு பெரும் நட்சத்திரங்களாக எம்ஜிஆர், சிவாஜி கணேசன் ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் கோலோச்சினார்கள். அரசியலிலும் சினிமாவிலும் அவர்களது போட்டி வெளிப்பட்டது. அவர்கள் இருவரை ஆதரித்து செயல்பட்டுக் கொண்டிருந்த ஆயிரக்கணக்கான ரசிகர் மன்றங்கள் அவர்களின் அரசியல் செயல்பாட்டிற்கு சாரக்கட்டங்களாக இயங்கின. எம் ஜி ஆர் வாட்போர் உள்ளிட்ட சண்டைக்காட்சிகள் கொண்ட படங்களில் நடித்து புகழ் பெற்றார். இவ்வகைப் படங்களுக்கு மர்மயோகி (1952) ஒரு நல்ல எடுத்துக்காட்டு. சிவாஜி கணேசன், பாசமலர் (1962) போன்ற மிகையுணர்ச்சியுள்ள (melodramatic) சமூகப்படங்களில் கவனம் செலுத்தினார். இப்படங்களில். கதாபாத்திரங்களின் படைப்பு, கதையின் வடிவமைப்பு, இவை ஒரே மாதிரியாக இருந்தன.

“இந்த இருபெரும் நட்சத்திரங்களின் கீழ் இருந்த ஒவ்வோரு ஆண்டிலும் இந்த இருவரும் என்னென்ன படம் பண்ணினார்கள்? எந்தப்படம் அதிக பணம் குவித்தது என்பவைகள் தாம் தமிழ் சினிமாவின் வரலாறு என்று ஒரு விமர்சகர் எழுதினார். அழகியல் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏனென்றால் இங்கே பணவசூலுக்கு அடுத்தபடிதான் அழகியல்.”

## சபாக்களின் வரவு

தமிழ் சினிமாவின் தொடக்கக் காலத்தில் மேடை நாடகங்களை ஆதாரமாகக் கொண்டே படங்கள் எடுக்கப்பட்டன என்று கூறியிருந்தேன். 1960களின் நாடக உலகிலிருந்து ஏ.பி.நாகராஜன், கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் போன்ற சில புதிய இயக்குநர்கள் மூலம் இன்னொரு பாதிப்பு தமிழ்த்திரைக்கு வந்து, முன்னமே வேரூன்றி இருந்த நாடகக்கூறுகளை உறுதிப்படுத்தின. ஒரு நாடகக் கம்பெனியில் வாத்தியாராக இருந்த நாகராஜன், திரைப்படத்திற்கு கதை வசனம் எழுதி பின்னர் நல்ல இடத்து சம்பந்தம் (1958) மூலம் இயக்குநராக அறிமுகமானார். தனது படங்களில் முந்நாள் நாடக நடிகர்களை பலரை நடிக்க வைத்தார். அவரது படங்களின் நாடகத்தன்மை இதனால் கூடியது. நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியில் பயின்ற கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் இதே சமயத்தில் திரையுலகில் புகழடைந்தார். இந்த இரு இயக்குநர்களுமே நாடகக்கூறுகள் நிறைந்த, மேடை நாடக வடிவமைப்பு கொண்ட திரைப்படங்களையே தயாரித்தனர்.

சில ஆண்டுகளில் இன்னோரு பாதிப்பும் திரையுலகிற்குள் வந்து சேர்ந்தது. தொழில்முறை சாராத சபா நாடகங்களில் வெற்றி பெற்ற பலர் சினிமாவில் நுழைந்தனர். எஸ்.வி.சகஸ்ரநாம்ம், (சேவா ஸ்டேஜ்), சோ (விவேக் ஃபைன் ஆர்ட்), மௌலி (நாடக ரசா), எஸ்.வி.சேகர் (நாடகப்பிரியா), விசு (விஸ்வசாந்தி) இவர்கள் முதலில் வசனகர்த்தாக்களாக வந்து, பின் இயக்குநர்களாகப் பரிணமித்தனர். அவர்கள் உருவாக்கிய பல வெற்றிப்படங்கள் மேடை நாடக அழகியலைச் சார்ந்தே இருந்தன. சினிமாவின் ஆதார இயல்புகள், சாத்தியக்கூறுகள், தனித்துவம் கதை சொல்லலில் பயன்படுத்தப்படவில்லை. அவர்களது படங்கள், இயக்குநரின் திறமையைச் சாராமல், நடிகர்களின் திறமையைச் சார்ந்திருந்தது. இவர்களில் மிகவும் வெற்றியடைந்த இயக்குநர், ராகினி ரெக்ரியேக்ஷன்ஸ் கே.பாலசந்தர் எடுத்த அரங்கேற்றம் (1973). சமகாலத்து, நகர்ப்புற நடுத்தர மக்களின் பிரச்சினைகளைத் தொட்ட இவரது படங்கள், பாரம்பரிய மதிப்பீடுகளையும் நம்பிக்கைகளையும் உறுதி செய்தது.

இவர்களின் நடுவே, 1960களில் ஸ்ரீதர் தோன்றி, நெஞ்சில் ஓர் ஆலயம் (1962) போன்ற திரைப்படங்களை இயக்கி பெயர் பெற்றார். அவருடைய பல படங்கள் முக்கோணக் காதலைச் சார்ந்து இருந்தன. ஒருவனுக்கு ஒருத்தி போன்ற மரபு விழுமியங்களைப் போற்றின. ஒளிப்பதிவாளர் வின்சென்ட் துணையுடன் ஒளியூட்டத்தை அழுத்தமாகப் பயன்படுத்தி படங்களின்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

தாக்கத்தைக் கூட்டினார். நெஞ்சில் ஓர் ஆலயம் படத்தில் நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் பாடல் காட்சி ஒரு எடுத்துக்காட்டு.

**1970-களின் புதிய அலை.**

எழுபதுகளில், சில புதிய தலைமுறை படைப்பாளிகள், ஸ்டுடியோ அமைப்பை விட்டு, தனியாக இயங்கி, நட்சத்திரங்களைச் சார்ந்திருக்காமல் படமெடுத்தனர். திரைப்பட விநியோகஸ்தர்களின் கிடுக்கிப் பிடியிலும் இவர்கள் சிக்கியிருக்கவில்லை. இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு ஜெயகாந்தனின் யாருக்காக அழுதான் (1968). இதே போல எழுபதுகளில் பாபு நந்தன்கோடு (தாகம் 1972) போன்ற சில புதிய இயக்குநர்களின் வரவால் தமிழ் சினிமா செறிவாக்கப்பட்டது. 16 வயதினிலே (1977) படத்தின் மூலம் கிராமப்புறத் தமிழ்நாட்டை கவனித்தார் பாரதிராஜா. ஜான் ஆபிரகாமின் அக்கிரகாரத்தில் ஒரு கழுதை 1977இல் வெளியாகி தேசிய விருது பெற்றது. மூன்று பள்ளிச்சிறுவர்கள் பற்றிய அழியாத கோலங்கள் (1979) படத்தில் ஐரோப்பிய சினிமாவின் தாக்கத்தை பாலுமகேந்திரா பிரதிபலித்தார். புதுமைப்பித்தனின் கதை ஒன்றை உதிரிப்பூக்கள் (1979) என்ற தலைப்பில் மகேந்திரன் படமாக்கிப் புகழ் பெற்றார். இவர்களிடம் பயிற்சி பெற்ற சில இளம் இயக்குநர்கள், கவனத்தை ஈர்த்த சில படங்களை எடுத்து, தமிழ் சினிமாவின் எல்லைகளை விரிவுபடுத்தினர். சேது (1999) படத்தை இயக்கிய பாலா இவர்களில் ஒருவர். தமிழ் மக்கள் விரும்பிப் பார்த்த ஆட்டோகிராப் (2005) படத்தை இயக்கிய சேரன் மற்றொருவர். இவர்களது படைப்புகள் தமிழ் சினிமாவின் பாதை மாறும் என்ற நம்பிக்கையை கொடுத்தன.

**விருதுகள்**

ஆராயிரத்திற்கு மேற்பட்ட படங்கள் வெளிவந்தும், அண்மையில் தான் தமிழ் சினிமா தேசிய அளவில் கவனிக்கப்பட்டிருக்கின்றது. இரண்டு படங்கள் சிறந்த படமாக விருது பெற்றிருக்கின்றன. முதலாவது, இந்திரா பார்த்தசாரதியின் நாவலைத் தழுவி, சேதுமாதவன் இயக்கிய மறுபக்கம் (1992). இரண்டாவது பட்டு நெசவாளர் குடும்பம் பற்றி பிரியதர்ஷன் இயக்கிய காஞ்சிவரம் (2008. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் நடந்ததாக எழுதப்பட்ட கதையாகும். சிறந்த இயக்குநர் விருதை அகத்தியனும், பி. லெனினும் பெற்றிருக்கின்றனர். நடிகர்களில் லட்சுமி , ஷோபா, சுகாசினி, அர்ச்சனா சிறந்த நடிகை விருது பெற்றனர். கமலஹாசன் மூன்று முறை சிறந்த நடிகராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். தாதா சாகேப் விருது ஒரு நடிகருக்கும் – சிவாஜி கணேசன் – ஒரு இயக்குநருக்கும்– கே.பாலசந்தருக்கும் கிடைத்தது. Elephant Whisperers (2022) என்ற தமிழ்ப் படத்திற்கு ஆஸ்கார் விருது கிடைத்தது தமிழ் சினிமாவின் உச்சக்கட்டம்.

**இன்றைய நிலைமை**

கடந்த சில ஆண்டுகளாக தமிழ்சினிமா உலகில் ஒரு நல்ல மாற்றத்தைக் காண முடிகின்றது. சில இளைய இயக்குநர்கள் புதிய வடிவமைப்பு, அழகியலுடன் உள்ளடக்கத்திலும் வேறுபட்ட யதார்த்த பாணிப் படைப்புகளை உருவாக்கினர். அம்மாதிரியான ஒரு படமான சுப்ரமணியபுரம் (2008) படத்தின் வெற்றி ஒரு நல்ல மாற்றத்திற்கான அறிகுறியானது. உள்ளூர் அரசியல்வாதி ஒருவனின் பேச்சைக் கேட்டுச் சிறைக்கு செல்லும் இளைஞர்கள் பற்றிய கதை இப்படங்களில் குத்து, வெட்டு, கொலைக்காட்சிகள் இடம் பெற்றிருந்தன. வேறு சில படங்களும் வன்முறைக் காட்சிகளுடன் வெளிவந்தன. இப்படங்களை சில விமர்சகர்கள் 'கொடூர சினிமா' என வகைப்படுத்தினர். 2012இல் சான் ஃபிரான்சிஸ்கோவில் ' கொடூர சினிமா தமிழ்த்திரையின் புதிய திசை' என்ற தலைப்பில் நடந்தேறிய கருத்தரங்கத்தில் திரையியலாளர்கள் சில புதிய தமிழ்ப்படங்களைப் பற்றி விவாதித்தனர்.

ஒரு குதிரையும் அதன் சொந்தக்காரரையும் பற்றிய ஒரு கதையை அழகர்சாமியின் குதிரை (2011) யதார்த்த பாணியில் எடுத்துக்காட்டியிருந்தது. இப்படம் மதநம்பிக்கை சார்ந்த விமர்சனத்தையும் முன்னிறுத்தியது. பாட்டு, ஆட்டபாட்டம் இவற்றிலிருந்து விலகி சென்ற இந்தப்படங்களில் இலத்தீன் அமெரிக்கப் படைப்புக்களின் பாதிப்பைக் காண முடிந்தது. டிவிடி புரட்சியும் இந்த மாற்றத்திற்கு ஒரு காரணம். பெரும்பாலும் விளிம்புநிலை மக்களைச் சுற்றிய கதைகளை அடிப்படையாகக் கொண்ட இந்த புதியபாணி படங்கள் நகர்ப்புறக் குடிசைப்பகுதிகளைக் களமாகக் கொண்டவை. பாலாஜி சக்தி வேல் இயக்கிய வழக்கு எண் 18/9, வீட்டுவேலை செய்பவர்களில் நிலையை ஆராய்ந்தது. வடிவமைப்பிலும் உள்ளடக்கத்திலும் புதிய கூறுகள் கொண்ட இறுக்கமான கதையமைப்பு கொண்டது. நலன் குமாரசாமி இயக்கத்தில் வந்த சூது கவ்வும் (2013) திருவனந்தபுரம் திரைப்பட விழாவில் நல்ல கவனிப்பு பெற்றது மட்டுமல்லாமல் திரையரங்கப் பார்வையாளர்களிடமும் வரவேற்பு பெற்றது. அண்மையில் சாதி



https://www.tnpscthervuthunaivan.com/



பரி ஏறும் பெருமாள் படத்தில் கதிர்.

வேறுபாட்டை எதிர்த்து பல படங்கள் வந்துள்ளன. மாரி செல்வராஜ் இயக்கிய பரியேறும் பெருமாள் (2018) மற்றும் ஞானவேல் இயக்கிய ஜெய் பீம் (2021) சிறப்பானவை. மாய யதார்த்தபாணி (Magical realism) யில் வந்த குதிரைவால் (2021) ஒரு முக்கியமான படைப்பு

பன்னாட்டளவில் விளிம்பு நிலை மக்களைப் பற்றிய ஆய்வும் கலாச்சார ஆய்வும் வளர்ச்சியடைந்த பிறகு பலருடைய கவனம் தமிழ் சினிமாவின்பால் திரும்பியது. இந்தியாவிலும் பல பல்கலைக்கழகங்கள், தனிப்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்களிலுள்ள மானிடவியலாளர்களும், ஆய்வு மாணவர்களும் தமிழ்த்திரையை உற்றுநோக்க ஆரம்பித்துள்ளனர். அதுமட்டுமல்ல. வரலாற்றியலுக்குத் திரைப்படங்கள் ஒரு நல்ல மூலப்பொருளாக பார்க்கப்படுகின்றன. சினிமாவின் மூலம் அந்த சமுகத்தைப் பற்றிய ஒரு புரிதல் கிடைக்கும் நம்பப்படுகின்றது. சில மேலைநாடுகளில் தமிழ் சினிமா பற்றிய ஆய்வு தொடருகின்றது. சிட்னி பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் சில ஆய்வாளர்கள் Tamil Cinema: The Cultural Politics of India's other film industry என்ற நூலை வெளியிட்டுள்ளனர். ஆனால் தமிழ்நாட்டில் கல்விப்புலம் சினிமாவைப்பற்றி எந்த அக்கறையும் காட்டவில்லை.

---

**– தியடோர் பாஸ்கரன்**

**தமிழ் சினிமா பற்றிய தனது நூலுக்காக குடியரசுத் தலைவரின் விருது பெற்றவர் நிழற்படங்கள் உதவி : கட்டுரையாசிரியர்**


OUR JOURNALS

| சந்தா திட்டங்கள் | YOJANA (Development Monthly in English, Hindi, Urdu and 10 other Indian Languages), KURUKSHETRA (Monthly on Rural Development English and Hindi), AJKAL (Literary and Cultural Monthly in Hindi & Urdu), திட்டம் தமிழ் இதழ் இவை ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக சந்தா தொகை | | Bal Bhararti Children's Monthly (Hindi) | | Employment News English/ Hindi/ Urdu | |
|---|---|---|---|---|---|---|
| | சாதாரண அஞ்சல் | பதிவு அஞ்சல் | சாதாரண அஞ்சல் | பதிவு அஞ்சல் | அச்சுப் பதிப்பு (சாதாரண அஞ்சல்) | மின் பதிப்பு |
| 6 மாதம் | -- | -- | -- | -- | ரூ. 265 | ரூ. 200 |
| 1 ஆண்டு | Rs.230 | ரூ. 434 | Rs.160 | ரூ. 364 | ரூ. 530 | ரூ. 400 |
| 2 ஆண்டுகள் | Rs.430 | ரூ. 838 | Rs.300 | ரூ. 708 | ரூ.1000 | ரூ. 750 |
| 3 ஆண்டுகள் | Rs.610 | ரூ.1222 | Rs.420 | ரூ.1032 | ரூ.1400 | ரூ.1050 |

நீங்கள் சந்தா செலுத்த விரும்பும் இதழின் பெயரையும், சந்தா செலுத்தும் கால அளவையும் குறிப்பிடவும்.

**SUBSCRIPTION COUPON (New Membership/Renewal/Change in Address)**

Please send me ( Journal's Name & Language) for 1Yr/2Yrs/3Yrs

Name (in BLOCK LETTERS): ______________________

ADDRESS: ______________________

PINCODE: __________ MOBILE No.: __________ Subscription Number (If already a Subscriber)

DEMAND DRAFT /POSTAL ORDER/MONEY ORDER No: ---------------- DATE: ----------

சந்தா கட்டணத்தை <https://bharatkosh.gov.in>/Product/Product என்ற முகவரியில் இணையதளம் வாயிலாக எளிதில் செலுத்தலாம். வரைவோலையாகச் (DEMAND DRAFT) செலுத்துவோர், ADDITIONAL DIRECTOR GENERAL, MINISTRY OF BROADCASTING, NEWDELHI - 110003 என்ற பெயரில் புதுதில்லியில் மாற்றத்தக்கதாக எடுத்து, EDITOR, JOURNALS UNIT, PUBLICATIONS DIVISION, ROOM No.779, 53 SOOCHNA BHAVAN, CGO COMPLEX, LODHI ROAD, NEWDELHI - 110003 என்ற முகவரிக்கு மேற்காணும் சந்தா கூப்பனுடன் அனுப்பி வைக்கவேண்டும்.

தொடர்புக்கு மின்னஞ்சல் முகவரி: pdjucir@gmail.com
தொலைபேசி எண்: 011-24367453

முதல் இதழ் சந்தாதாரருக்கு வந்து சேர 4 முதல் 6 வாரங்கள் ஆகலாம். சந்தா புதுப்பிப்பு/முகவரி மாற்றம் ஆகியவற்றிற்கு உங்கள் சந்தா எண்ணை மறவாமல் குறிப்பிட்டு எழுதவேண்டும்.

https://www.tnpscthervuthunaivan.com/



# அதிகம் அறியப்படாத சுதந்திரப் போராட்ட வீரர்கள்

–ஜெ.சுமதி

இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட அறியப்படாத சாமானியர்கள் முதல் செல்வாக்கு மிக்கவர்கள் வரை பலரும் ஒவ்வொரு ஊர்களிலும் இருந்தனர். அவர்கள் அனைவரின் முயற்சியின் காரணமாகவே நாட்டின் விடுதலை சாத்தியமானது. நாம் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட முக்கியமான தலைவர்களை மட்டுமே பொதுவாக அறிந்திருப்போம். ஆனால், வெளி உலகின் வெளிச்சத்திற்கு வராமலேயே இருக்கும் போராளிகள் பலர் இருக்கின்றனர். இவர்களில் பலர் சுதந்திரத்திற்குப் பிறகு, அவர்களுடைய தியாகத்தையும் சேவையையும் போற்றும் முகத்தான் மத்திய மற்றும் மாநில அரசின்அங்கீகாரம் பெற்று ஒய்வூதியமும் விருதுகளும் பெற்றுள்ளனர். அவ்வாறு வெளிஉலக வெளிச்சத்திற்கு வராத சில தியாகிகளின் வரலாற்றையும் வீரக்கதைகளையும் இக்கட்டுரையில் காண்போம்.



தீரன் மாயாண்டி சேர்வை

மாயாண்டி சேர்வை அவர்கள் 1904ஆம் ஆண்டு மார்ச் மாதம்3 ஆம் நாள் பிறந்தார். 'தீரன்' என்ற தலைப்பு அவரது 'தைரியமான' தன்மையைக் குறிக்கிறது. அகில இந்திய இந்துமகாசபையின் உறுப்பினரான அவர், ஏகாதிபத்திய அடக்கு முறைகளுக்கு எதிராக அதிரடியாக ஏதேனும் செய்யவேண்டும் என்று தீவிரமாக யோசித்தார். அதன்அடிப்படையில் அவர் ஆங்கிலேயருக்கு அதிர்ச்சி தரும் வகையில், பரபரப்பான ஓர் அறிவிப்பை வெளியிட்டார். அதில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கோபுரத்தில் குறிப்பிட்ட தேதியில், இந்திய தேசியத்தின்அடையாளமாக மூவர்ணக்கொடியை ஏற்றியே தீருவேன் என்று, ஆங்கிலேயருக்கு அவர் சவால் விடுத்தார். இந்த நிகழ்வை எவ்வாறேனும் தடுத்து நிறுத்த வேண்டும் என்று அரசாங்க அதிகாரிகள் திட்டமிட்டனர். அன்றைய தினம் மதுரை மாநகர் முழுவதும் பரபரப்புடன் காணப்பட்டது. மாயாண்டி சேர்வையை எவ்வாறாயினும் பிடித்தே தீருவது என்று நகரின் அனைத்துமூலை முடுக்குகளிலும் நுழைந்து, போலீசார் தீவிரமான தேடுதல் வேட்டையை நடத்தினார், ஆனால்அவர்களால்அவரைக்கண்டுபிடிக்கஇயலவில்லை.

சேர்வை அவர்களோ வேறு விதமான அதிரடித் திட்டத்துடன் செயல்பட்டார். போலீசார் மாயாண்டி சேர்வையை மற்ற இடங்களில் தீவிரமாகத்தேடி அலைந்து கொண்டிருக்க, அவரோ மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் வடக்குக் கோபுரத்தில் குறிப்பிட்ட தேதிக்கு பத்து நாட்கள் முன்னரே ஏறிவிட்டார். கோபுரத்தின், ஒவ்வொரு நிலைக்கும் இடையில் உள்ள சிறிய இடைவெளியில் அறை போன்ற பகுதி இருக்கும். அதில் ஏறிய மாயாண்டி சேர்வை, கடைசி நிலையில் உள்ள அறைக்குச் சென்று அங்கேயே தங்கிவிட்டார். பத்து நாட்களுக்கு முன்பே, கோபுரத்தில் ஏறி விட்ட நிலையில், உயிர்வாழ்வதற்கு உண்ணவேண்டும் என்பதற்காக, பத்து நாட்களுக்கு தேவையானசிறியஅளவிலான நிலக்கடலையையும், சிறிய பாத்திரத்தில் தண்ணீரையும் எடுத்துக்கொண்டார்.உணவு இல்லாமல் கூட சமாளித்து விடலாம். ஆனால் தண்ணீர் இல்லாமல் நீண்ட நாட்கள் கடத்துவது என்பது இயலாத காரியம். அந்தவகையிலேகொண்டுசென்றதண்ணீர் இரண்டொரு நாளில் தீர்ந்துவிடவே, நீருக்காக தனது சிறுநீரையே தான் கொண்டு சென்றபாத்திரத்தில் பிடித்து, அருந்தி வந்துள்ளார். குறிப்பிட்டநாள்வந்ததும்சேர்வை அவர்கள் கோபுரத்தின் உச்சியை அடைந்து ''வந்தே மாதரம்''என முழங்கி மூவர்ணக்கொடியை ஏற்றினர். அதே நேரம் அங்கிருந்தவர்கள் வந்தே மாதரம் என்று முழங்கிட, ஆங்கிலேய போலீசாரோ பெரும் அவமானத்தில் மூழ்கி அதிர்ச்சியடைந்தனர்.



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

உயரமான கோபுரத்தின் உச்சியில், கொடி கட்டப்பட்டிருந்ததனால் உடனடியாக அந்தக் கொடியை அகற்ற அவர்களால் முடியவில்லை. கொடியை இறக்கவும் மாயாண்டி சேர்வையைப் பிடிக்கவும், காவலர்கள் பலர் கோபுரத்தில் ஏறினர். ஆனால், போலீசாரின் கைகளில் சிக்காமல் அவர் தப்பித்து விட்டார். தீரர் மாயாண்டி சேர்வை தனது சபதத்தின்படி மீனாட்சி அம்மன் கோவில் கோபுரத்தின் உச்சியில், தேசியக்கொடி ஏற்றப்பட்டது. ஆங்கிலேயர்களின் ஆணவம் இறங்கியது. இங்கே ஜெயித்தது மாயாண்டி சேர்வை மட்டுமல்ல, சுதந்திர வேட்கையும் தான். பின்னர் அவர் 'தீரன் மாயாண்டி சேர்வை' என்ற பட்டத்தைப் பெற்று நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். சுதந்திரத்திற்குப் பிறகு மதுரை திருமங்கலத்தில் 'அகமுடையார் மகாசபை'யைத் தொடங்கி அதன்மூலம்மக்களுக்குசமூக சேவைகள் செய்துவந்தார். இவர்ஆகஸ்ட் 12, 1992 அன்று காலமானார்.

**தடியடி தணிகாசலம்**

கடலூர் அருகே புதுப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்தவர் தணிகாசலம் பிள்ளைஇவருக்குதடியடி தணிகாசலம்" என்கிற அடைமொழி வந்ததே பெரிய கதை.



தணிகாசலம் பிள்ளை அவர்கள் பதினெட்டுவயதில் இருந்தே இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்து சுதந்திர இயக்கத்தில் தீவிரமாகச் செயல்பட்டார். தனது இருபதாவது வயதில் ஹரிஜன சேவா சங்க ஆஸ்ரமத்தைத் தொடங்கி அடிப்படைக் கல்வியுடன், இலவச உணவும் குழந்தைகளுக்கு வழங்கினார். இந்த ஆஸ்ரமத்திற்கு நேதாஜி, வினோபாபாவே, சர்தார் வல்லபாய் பட்டேல், ராஜேந்திர பிரசாத், சரோஜினி நாயுடு போன்ற தலைவர்கள் வருகை புரிந்தனர். காந்திமதி என்ற பத்திரிகையைஆரம்பித்து அதன்வழியாக பிரிட்டிஷாரின் காலனி ஆதிக்கத்தை எதிர்த்து கட்டுரைகள் எழுதினார். இதனால் அந்தமான் சிறையில் ஆறுமாதங்கள் அடைக்கப்பட்டார். சிறையிலிருந்து விடுதலையான பின்னர்சுதந்திரவேட்கையின் முக்கியத்துவத்தை மக்களிடம் சேர்க்கவேண்டும்என்பதற்காக தனதுபத்திரிகைமூலம் தீவிரமாகச் செயல்பட்டார். அவரது செயல்களால்ஆத்திரமடைந்த போலீசார், அவரைப்பிடித்துஅவர் மயங்கி விழும் வரை தடியடி நடத்தினர். அங்கு திரண்டிருந்த மக்கள் அவரை மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்தச் சம்பவத்திலிருந்து அவர் "தடியடி தணிகாசலம்" (லத்தி சார்ஜ்தணிகாசலம்) என்று அழைக்கப்பட்டார். அவரது தியாகத்தைப் போற்றும் வகையில், இந்திய அரசு, 1972இல், இந்திய சுதந்திரத்தின் 25வது ஆண்டு விழாவைக் கொண்டாடிய நேரத்தில், அவருக்கு "தாமரபத்ர" விருதை வழங்கிகௌரவித்தது. தணிக்காசலம் பிள்ளை அவர்கள் 1988 ஜனவரி 21 அன்று காலமானார்.



**கோடை இடி குப்புசாமி முதலியார்**

வேலூரில் ராஜு முதலியார் அவர்களுக்கு மகனாக குப்புசாமி அவர்கள் 1891இல் பிறந்தார். இடிமுழக்கம் போன்று கம்பீரமாக பேசக்கூடிய சிறந்த சொற்பொழிவாளராக இருந்த அவர், 'கோடையில் இடியுடன் கூடிய மழை' எனப் பொருள்படும் 'கோடை இடி' என்ற செல்லப் பெயரைப் பெற்றார். அவர் ஒரு சிறந்த சுதந்திரப் போராட்ட வீரர் ஆவார், தனது மயக்கும் உரைகள் மற்றும் 'தெருக்கூத்து' (தெரு நாடகங்கள்) வாயிலாக,அவர் வேலூர் மற்றும் ஆற்காடு மக்களை ஆங்கிலேயர்களுக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தில் சேரத் தூண்டினார். 193031இல் உப்பு சத்தியாகிரகத்திலும், 1941இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்திலும் பங்கேற்று ஓராண்டு காலம் அலிபுரம் சிறையில் அடைக்கப்பட்டார். அக்காலத்தில் ஆற்காடு, ராணிப்பேட்டை ஆகிய பகுதிகளில் இருந்து மக்கள் வேலூர் 'கோட்டை மைதானத்திற்கு அவரது உரைகளைக் கேட்பதற்காக வருவார்கள். நாட்டின்விடுதலை போராட்டத்தில் அவருடைய பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக சுதந்திரத்திற்குப் பிறகு, அவர் நேரடியாக ராஜ்யசபா உறுப்பினராகப்




https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

பரிந்துரைக்கப்பட்டார். குப்புசாமி அவர்கள் 05.01.1961 அன்று காலமானார். அவர்கள் மறைவுக்குப் பிறகு, அவரது சேவையைப் பாராட்டி, வேலூரில் அவரது பெயரில் 'கோடை இடி குப்புசாமி முதலியார் பள்ளி' என்றஅரசுப் பள்ளி தொடங்கப்பட்டது.

**அரைச்சவரம் வைரப்பன்**

வைரப்பன் வேதாரண்யத்தில் காளிதீர்த்தன் வைரம்மாள் தம்பதியருக்கு 1906 மே 22 அன்று பிறந்தார். முடிதிருத்து வதைத்தொழிலாகக் கொண்ட வைரப்பன்அவர்கள், ஆங்கிலேயர்களுக்கும்,



அவர்களது பணியாளர்களுக்கும் முடிதிருத்துவதில்லை என்று உறுதி பூண்டிருந்தார்.ஒருநாள் ஒருவருக்குமுடிதிருத்தும் வேலை யில்அவர்ஈடுபட்டிருந்தார்.அவர் ஒரு கான்ஸ்டபிள் என்ற உண்மை, வைரப்பனுக்குத் பேச்சுவாக்கில் தெரியவந்தது, பாதி சவரம் செய்த நிலையில்அவர் அந்தக் கான்ஸ்டபிளுக்கு தொடர்ந்துசவரம் செய்ய மறுத்துவிட்டார். கான்ஸ்டபிள் அச்சுறுத்தியபோதும் வைரப்பன் தனதுகொள்கை யில்உறுதியாகஇருந்தார், இதனால் வைரப்பன்அவர்கள் கைது செய்யப்பட்டு, 1930ஆம் ஆண்டு செப்டம்பர் 14ஆம் தேதி வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். விசாரணை செய்த நீதிபதி வைரப்பனிடம் அந்த போலீஸ்காரருக்கு முழுச்சவரமும் செய்துவிட்டால் மனிதாபிமான அடிப்படையில் அவரை விடுவித்து விடுவதாகக் கூறினார். நீதிபதியின் இந்தக் கூற்றை உறுதியாக மறுத்த வைரப்பன் "உங்களுக்கு மனிதாபிமானம் இருக்கிறது என்றால், இதோ இருக்கிறது கத்தியும் பெட்டியும் நீங்கள் வேண்டுமானால் அவருக்கு சவரம் செய்யுங்கள்" என்று பதிலடி கொடுத்தார். இதைக் கேட்ட நீதிபதி ஆத்திரமடைந்து வைரப்பனுக்கு ஆறு மாத கடுங்காவல் தண்டனை விதித்தார். அவர் இந்த தண்டனையை வேலூர், திருச்சி சிறைகளில் அனுபவித்தார். வைரப்பன் தனது 90வதுவயதில் 1997ஆம்வருடம், ஆகஸ்டு திங்கள், 15ஆம் நாள் நாடு தனது சுதந்திர தினப் பொன்விழாவைக் கொண்டாடிக் கொண்டிருந்த நேரத்தில் மறைந்தார்.

**லவுட்ஸ்பீக்கர்சுப்ரி**

சுப்ரிஎன்று அழைக்கப்படும் சுப்பிரமணியம், வழக்கறிஞர் வி.ஆர். கிருஷ்ண ஐயர் மற்றும் பார்வதி இருவருக்கும் ஐந்தாவதுமகனாக 1898 இல் கோயம்புத்தூரில் பிறந்தார்.



காந்திஜியின் இலட்சியங்களால் ஈர்க்கப்பட்டஅவர்சுதந்திர இயக்கத்தில் சேர்வதற்காக கல்லூரியை விட்டு வெளியேற முடிவு செய்தார். காந்திஜி அவர்கள் கோயம்புத்தூர் மற்றும் நீலகிரிக்கு விஜயம் செய்த போது, அவரது மொழிபெயர்ப்பாளராக சுப்ரி இருந்தார். ஒலிபெருக்கியின் துணையின்றியே அதிகமான சத்தத்துடன் பேசக் கூடியவராக அவர்இருந்தார். அதனால்மகாத்மா காந்திஜி அவர்கள்அவரை 'லவுட் ஸ்பீக்கர்' என்று அன்புடன் அழைத்தார். 1921 சுப்ரமணியம் அவர்கள் கோவை நகர காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராக ஆனார். 1923 இல் நாக்பூரில் சா்தார் வல்லபாய் படேலின் கொடி சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டதற்காக இவர் ஒரு வருடம் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்த ஆண்டுகளில், சுப்ரி இசையமைத்த பாடல்கள் புத்தகமாகத் தொகுக்கப்பட்டன. பின்னர்ஊத்துக்குளி அருகே உள்ள படியூரில் காதி மையத்தை அவர் தொடங்கினார், காந்திஜி தனது“இளம் இந்தியா” (Young India) என்றஆங்கிலப்பத்திரிகை யில்சுதந்திர இயக்கத்தில் சுப்ரி அவர்களின் பங்களிப்பைப் பாராட்டியுள்ளார். 1930 உப்பு சத்தியாகிரகத்தில் பங்கேற்றதற்காக அவருடன்சேர்ந்து அவரது மனைவி கமலாவும், ஆறுமாதமே ஆன மகளுடன் சிறையில் அடைக்கப்பட்டனர்.காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக இருந்த சுப்ரமண்யம் அவர்கள் 1938 முதல் 1942 வரை கோவை நகராட்சியின் நகராட்சித் தலைவராகப் பணியாற்றினார். அவரது பதவிக் காலத்தில், நகரின் ஆர்.எஸ்.புரம் பகுதியில் காந்தி பூங்காவை உருவாக்குவதில் முக்கியமான

இதன் தொடர்ச்சி 45ஆம் பக்கம்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# சேதுபதி மன்னர்களின் கோட்டைகள்

– வே.இராஜகுரு

கி.பி.1601 முதல் சேதுநாட்டை ஆளத் தொடங்கிய சேதுபதி மன்னர்களின் முதல் தலைநகராக இருந்தது இராமநாதபுரத்திலிருந்து 15 கி.மீ தொலைவில் மதுரை செல்லும் சாலையில் சத்திரக்குடி அருகில் உள்ள போகலூர். ஆறு சேதுபதி மன்னர்களுக்குப் பின் ரெகுநாத கிழவன் சேதுபதியின் காலத்தில் அவர்களின் தலைநகர் இராமநாதபுரத்திற்கு மாறியது. புதுக்கோட்டை மாவட்டம் திருமயம், அறந்தாங்கி, சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர், மானாமதுரை, இராமநாதபுரம் மாவட்டம் போகலூர், அத்தியூத்து, கமுதி, பாம்பன், இராமநாதபுரம், செங்கமடை, ஓரியூர், சீனியப்பா தர்கா ஆகிய இடங்களில் ஏற்கனவே பாண்டியர்களால் கட்டப்பட்ட மண்கோட்டைகளை, கற்கோட்டைகளாக மாற்றியும், புதிய கோட்டைகளை அமைத்தும் ஆட்சியாண்டுள்ளார்கள் சேதுபதி மன்னர்கள்.

## கோட்டைகளின் பொதுவான அமைப்பு


சேதுபதி கோட்டைகளில் பொதுவான சிலஅமைப்புகள் காணப்படுகின்றன. கோட்டைக்கு உள்ளேயோ அல்லது முன்புறத்திலோ முனீஸ்வரர், கருப்பசாமி போன்ற மக்கள் தெய்வங்களின் கோயில்கள் உள்ளன. நாட்டுவீழி, சங்கஞ்செடி, ஆதொண்டை போன்ற மூலிகைத் தாவரங்கள் இக்கோட்டைப்பகுதிகளில் காணப்படுகின்றன. குதிரை லாயம், வீரர்கள் தங்கும் வசதி சில கோட்டைகளில் உள்ளன. பெரும்பாலான கோட்டைகள் செங்கல் கோட்டைகளே. அழிந்துபோன சில கோட்டைகளில் பீரங்கி வைக்கும் மேல்தளம் உள்ளது. சில கோட்டைகளில் சுரங்கப்பாதைகள் இருந்த தடயங்கள் உள்ளன.

## போகலூர் அரண்மனை

முதல் சேதுபதியான உடையான் ரெகுநாத சேதுபதி என்ற சடைக்கண் சேதுபதி முதல் கூத்தன் சேதுபதி, தளவாய் சேதுபதி, திருமலை ரெகுநாத சேதுபதி, இராஜசூரிய சேதுபதி, அதான ரெகுநாத சேதுபதி வரையானஆறு சேதுபதிகள் போகலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார்கள்.மதுரை திருமலைநாயக்கரின் தளபதி இராமபையனுக்கும் தளவாய் சேதுபதிக்கும் கி.பி.1639இல் நடந்த போரில் போகலூர் கோட்டையை இராமபையன் கைப்பற்றியுள்ளார். இப்பொழுது இவ்வூரின் கொற்றக்களம் என்ற பகுதியில் அரண்மனை இருந்ததற்கான அடிப்பகுதி மட்டும் பூமியில் புதைந்த நிலையில் உள்ளது.

## இராமநாதபுரம் கோட்டை

கி.பி.1678 முதல் கி.பி.1711 வரை ஆட்சி செய்த ரெகுநாதக் கிழவன் சேதுபதியின் காலத்தில் தான் இராமநாதபுரம் சேதுபதிகளின் தலைநகரானது. இராமநாதபுரம், சேதுபதி மன்னர்களின் தலைநகரமாக ஆவதற்கு முன்பே இராமநாதபுரம் அருகிலுள்ள சூரன்கோட்டை, களத்தாவூர், அச்சுதன்வயல் போன்ற ஊர்கள் வரலாற்றுச் சிறப்புடன் இருந்துள்ளன. வருவாய்த்துறை ஆவணங்களின் படி, சூரன்கோட்டையில் தான் ராமலிங்கவிலாசம் அரண்மனை உள்ளது. கி.பி.1168இல் மதுரை பராக்கிரமபாண்டியன் மகன் வீரபாண்டியனுக்கு ஆதரவாக வந்த இலங்கை பராக்கிரம பாகுவின் படை போரிட்ட இடங்களில்



கி.பி.1801க்கு முன் இருந்த கமுதிக் கோட்டையின் வரைபடம்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

இராமநாதபுரம் சூரன்கோட்டையும் ஒன்றாக இலங்கையின் மகாவம்சம் கூறுகிறது. பாண்டியர் காலத்தில் மண்கோட்டையாக இருந்த இதனுள் அரண்மனையும் இருந்துள்ளது. கி.பி.1678–80 இல் கிழவன் சேதுபதி செங்கல் மற்றும் கற்களைக் கொண்டு 27 அடி உயரமும் 5 அடி அகலமும் கொண்ட மதில் சுவர் எழுப்பி ஒரு கோட்டை கட்டி அதைச் சுற்றிலும் அகழி வெட்டி பாதுகாப்புக்காக 42 சிறிய படைக் கூட்டங்களை நியமித்திருந்தார்.

மதுரையிலிருந்து இராமநாதபுரம் வரும் வழியில் கூரிச்சாத்த அய்யனார் கோயில் அருகே இக்கோட்டையின் ஒரு கொத்தளம் இப்போதும் உள்ளது. இது மூலைக் கொத்தளம் எனப்படுகிறது. இக்கொத்தளத்தில் ஒன்பது பீரங்கிகள் வைக்கும் அமைப்பு இருந்துள்ளது. கோட்டையின் காவலராக உள்நாட்டுக் காலாட்படையின் ஒரு பிரிவு பொறுப்பேற்றிருந்தது.

வாரிசுரிமைக்காக, பவானி சங்கர சேதுபதி தஞ்சாவூர்ப் படையின் உதவியுடன் கி.பி.1726இல் தண்டத்தேவர் என்ற சுந்தரேச சேதுபதி மன்னருடன் இராமநாதபுரத்தில் நடத்திய போரில் கோட்டை சேதமடைந்தது. ரிபெல் முத்துராமலிங்க சேதுபதியின் காலத்தில் கோட்டை மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.கி.பி.1772இல் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கும்பெனிப் படைகளும், ஆர்க்காடு நவாபும் இக்கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டனர். ஆங்கிலேயத் தளபதி மார்டின்ஸ் இதை ஆக்கிரமித்து கோட்டைக்குள் தனக்கென ஒரு மாளிகையைக் கட்டிக்கொண்டு வாழ்ந்தார். அது மார்ட்டின்ஸ் மாளிகை எனப்பட்டது. சுவாமி விவேகானந்தர் இராமநாதபுரம் வந்தபோது அங்குதான் தங்கி யிருந்தார்.

கோட்டையின் உள்ளே கிழவன் சேதுபதியால் கட்டப்பட்ட இராமலிங்கவிலாசம் என்ற தர்பார் அரண்மனை உள்ளது. மேலும் கோட்டைக்குள் சொக்கநாதர் என்ற சிவன் கோயில், பெருமாள் கோயில், சுப்ரமணியசாமி கோயில், கூரிச்சாத்த ஐயனார் கோயில், இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில், ஆயுதசாலை, அந்தப்புரம், சரஸ்வதி விலாசம் எனும் ஆவணக் காப்பகம், நீச்சல் குளம், முகவை ஊரணி, பிராட்டஸ்டன்ட் தேவாலயம் ஆகியவையும் உள்ளன. இதில் கூரிச்சாத்த ஐயனார் கோயில் கூத்தன் சேதுபதியாலும், சொக்கநாதர் கோயில் தளவாய் சேதுபதியாலும், இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில் திருமலை ரெகுநாத சேதுபதியாலும் கட்டப்பட்டுள்ளன.இக்கோட்டை இரண்டு மைல் சுற்றளவில் செவ்வக வடிவில் இருந்துள்ளது. கோட்டையின் வாசலில் கோட்டை வாசல் பிள்ளையார் கோயில் உள்ளது.


ராமநாதபுரம் கோட்டையின் முதன்மை நுழைவு வாயில்

ரிபெல் முத்துராமலிங்க சேதுபதியிடம் பேஷ்குஷ் (அன்பளிப்பு) தொகை வசூலித்துத் தர ஆங்கிலேயர்களால் நியமிக் கப்பட்ட தளபதி மார்டின்ஸ் மூலம் மன்னரைத் தங்களின் மதமாற்ற வேலைக்கும் வணிகத்திற்கும் ஒத்துழைக்க நிர்பந்தித்தார்கள். அவர் அதை ஏற்காததால் கி.பி.1795 பிப்ரவரி 8ஆம் நாள் ஆங்கிலேயர் படை இக்கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டு மன்னரை திருச்சி சிறையில் அடைத்தது. இராமநாதபுரம் கோட்டையின் சுவரும் கொத்தளங்களும் கி.பி.1803ஸ்ரீ04இல் ஆங்கிலேயர்களால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. இன்று இராமநாதபுரத்தில் கோட்டை இருந்ததற்கு அடையாளமாக இருப்பது மூலைக்கொத்தளம் மட்டுமே.



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

கோட்டைவாசல் பிள்ளையார் கோயிலுக்கு மேற்கே உள்ள வாசல் தான் இக்கோட்டையின் முதன்மை நுழைவாயிலாக இருந்துள்ளது. முதன்மை நுழைவாயிலின் மேல்தளம் போர் வீரர்கள் நின்று காவல் காக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. சரிவான பீரங்கி வைக்கும் கொத்தளம் ஒன்று இப்போதும் மேல்தளத்தில் உள்ளது. நுழைவாயிலின் மேலே கஜலட்சுமியின் சுதை சிற்பம் உள்ளது. அதன் கீழ் பெரிய எழுத்துகளில் LONG LIVE OUR KING எனும் ஆங்கில வாசகம் உள்ளது.

இதன் வலப்புறம் திரும்பி இராமலிங்கவிலாசம் செல்லும் வாயிலின் தாழ்வாரத்தின் இருபுறமும் ஓவியங்கள் உள்ளன. மேற்கில் கருடன், சந்தானலட்சுமி, ஆதிலட்சுமி, கஜலட்சுமி, வித்யாலட்சுமி ஓவியமும், கிழக்கில் அனுமன், வீரலட்சுமி, ஐஸ்வர்யலட்சுமி, தான்யலட்சுமி, விஜயலட்சுமி ஆகிய ஓவியங்களும் உள்ளன. வாயிலின் அருகில் இருபுறமும் உள்ள கருடன், அனுமன் ஓவியங்கள் ஆறு அடி உயரத்திலும் அஷ்டலட்சுமிகளின் ஓவியங்கள் ஐந்து அடி உயரத்திலும் உள்ளன.

கோட்டை உள்ளே உள்ள ஒவ்வொரு கட்டடங்களின் வாசலிலும் அதன் மேல்பகுதியில் கஜலட்சுமியின் சுதை சிற்பம் அல்லது ஓவியம் உள்ளது. இராமலிங்கவிலாசம் அரண்மனையிலும் இதைக் காணலாம். சேதுபதிகள் கட்டிய அல்லது புணரமைத்த கோயில்களிலும் இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இராமலிங்கவிலாசம் அரண்மனையின் முன்புறம் கட்டப்பட்டுள்ள நுழைவுவாயில் பாஸ்கரசேதுபதியால் கட்டப்பட்டது.



இராமநாதபுரம் இராமலிங்கவிலாசம் தர்பார் அரண்மனை – சேதுபதி மன்னர் பவனி வரும் ஓவியம்

### இராமலிங்கவிலாசம்

இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களின் தர்பார் அரண்மனை, இராமலிங்கவிலாசம் எனப்படுகிறது. இது கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்று ஒரு கோயில் போன்ற அமைப்பில் உள்ளது. மகாமண்டபத்தில் உயரமான ஐம்பது தூண்கள் உள்ளன. இவை சுண்ணாம்பு, செங்கல் கொண்டு கட்டப்பட்டுள்ளன. இவை மதுரை திருமலை நாயக்கர் மகாலில் உள்ள தூண்களின் சிறிய அளவினதாக உள்ளன. அர்த்தமண்டபத்தில் 20 கருங்கல் தூண்களும் கருவறைப் பகுதியில் 12 கருங்கல் தூண்களும் தாங்குகின்றன. இவை மிக வழுவழுப்பாகத் தேய்க்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளன. இதுபோன்ற கருங்கல் தூண்கள் அந்தப்புரத்திலும், பெருவயல் முருகன் கோயிலிலும் உள்ளன. கருவறை போல் உள்ள பகுதியை இராமர் பீடம் என்கிறார்கள். மகாமண்டபத்தின் தென்மேற்கு மூலையில் சேதுபதிகள் பட்டம் சூட்டிக்கொள்ளும் அபிசேகமேடை உள்ளது.

தென்னிந்தியாவிலேயே முழுவதும் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரே அரண்மனையாக இராமலிங்க விலாசம் திகழ்கிறது. இங்குள்ள ஓவியங்கள் இயற்கையான மூலிகை வண்ணத்தில் உருவானவை. 300 ஆண்டுகளாக அவை பாதுகாக்கப்பட்டு வருகின்றன. திருமாலின் இராமாயண, பாகவதக் காட்சிகள் மகாமண்டபம், அர்த்த மண்டபங்களில் வரையப்பட்டுள்ளன. திருக்கோவிலூர் உலகளந்த பெருமாள், அகோபிலம் லட்சுமி நரசிங்கப்பெருமாள், ஸ்ரீமுஷ்ணம் வராகசுவாமி போன்ற சேதுபதிகள் வணங்கிய தெய்வங்களின் உருவங்கள், தஞ்சை மராட்டியர்களுடன்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

போர்க்காட்சிகள், மன்னர் பவனிவருதல், பலவகையான மதுக்குடுவைகள், பெண்களைக் கொண்டு உருவாக்கிய யானை, குதிரை உருவங்களின் மேல் மன்னரும் ராணியும் மன்மதன் ரதி உருவில் கரும்பு வில்லுடன் உள்ள ஓவியம், ராணிக்கு கண்ணாடி காட்டும் பணிப்பெண், கண்ணாடி பார்க்கும் ராணி ஆகிய சிறப்புமிக்க ஓவியங்களும், மாடியில் சேதுபதிகளின் அகவாழ்வைச் சித்தரிக்கும் ஓவியங்களும் உள்ளன.

ஒவ்வொரு ஓவியத்துக்கும் கீழ் அதுபற்றிய விளக்கம் பெரும்பாலும் தமிழிலும், சில இடங்களில் தெலுங்கிலும் எழுதப்பட்டுள்ளன. ஓவியங்கள் மூலம் அக்காலத்தில் இருந்த மக்கள், மன்னர், ராணி, படைத்தளபதிகள், பணிப்பெண்கள் ஆகியோரின் ஆடை அலங்காரங்களைப் பற்றி அறிந்துகொள்ள முடிகிறது. மன்னர் உள்ளிட்ட ஆண்கள் தாடி மீசையுடன் உள்ளனர். பெண்கள் அதிகளவில் அணிகலன்கள் அணிந்து அலங்காரத்துடன் உள்ளனர். தெய்வ உருவங்கள் நேராகப் பார்ப்பது போலவும், மனிதர்கள் ஒருபுறமாகப் பார்ப்பது போலவும் ஓவியங்கள் உள்ளன. ஓவியங்களில் உள்ளவர்கள் தடிமனான உடல்வாகுடன் இருப்பதாக வரையப்பட்டுள்ளது. விதானத்தில் தெய்வங்களின் கதைச் சிற்பங்களும் உள்ளன.

சிவப்பு, கறுப்பு, பச்சை, நீலம் ஆகிய வண்ணங்களும் அவற்றை ஒன்றுடன் கலந்த வண்ணங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாயக்க மன்னர்களின் கலைப்பாணியை பின்பற்றி சேதுபதிகளின் இந்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இந்த தர்பார் அரண்மனை கிழவன் சேதுபதியால் கட்டப்பட்டிருந்தாலும் ஓவியங்கள் அவருக்குப்பின் வந்த திருவுடையத்தேவர் என்றமுத்துவிஜய ரகுநாத சேதுபதியால் வரையப்பட்டவை. இங்குள்ள ஓவியங்களில் அவரே காணப்படுகிறார்.

### கமுதி வட்டக்கோட்டை

கி.பி.1713 முதல் கி.பி.1725 வரை சேதுநாட்டை ஆண்ட திருவுடையத்தேவர் என்ற முத்து விஜய ரெகுநாதசேதுபதி, பிரான்ஸ் நாட்டுப் பொறியியல் வல்லுநர்களின் உதவியுடன் புதிய வடிவங்களில் கமுதி, பாம்பன், செங்கமடை ஆகிய இடங்களில் மூன்று புதிய கோட்டைகளைக் கட்டினார். இதில் கமுதிக்கோட்டை வட்டவடிவில் உள்ளது.

தமிழ்நாட்டில் கட்டப்பட்டுள்ள கோட்டைகள் தரைமேல், தண்ணீரில், மலைமேல், காடுகளுக்கு இடையில் என நான்கு வகைகளில் காணப்படுகின்றன. அவ்வகையில் கமுதிக்கோட்டை காடுகளுக்கு இடையில் கட்டப்பட்ட கோட்டையாகக் காட்சியளிக்கிறது.



ஆறுமுகக் கோட்டை

கி.பி.1801இல் இடிக்கப்படும் முன் இருந்த இக்கோட்டையின் வரைபடம் மூலம் இக்கோட்டை உள்கோட்டை, வெளிக்கோட்டை என இரண்டு அடுக்கில் இருந்துள்ளதை அறியமுடிகிறது. வீரர்கள் நின்று கண்காணிக்கும் வகையில் உள்கோட்டை மற்றும் வெளிக்கோட்டை இரண்டிலும் தலா ஏழு கொத்தளங்கள் இருந்துள்ளன. இவை வட்டவடிவிலான கண்காணிப்புக் கோபுரங்களாக வீரர்கள் நின்று காவல்புரிய, கண்காணிக்க பயன்பாட்டில் இருந்துள்ளன. வெளிக்கோட்டையை விட உள்கோட்டை உயரமாக இருந்துள்ளது.

உள்கோட்டை மற்றும் வெளிக்கோட்டைக்குள் செல்ல இரண்டடுக்குப் பாதுகாப்பு முறை இருந்துள்ளது. இரு கோட்டைகளுக்குமிடையில் மேற்கில் நல்ல தண்ணீர் குளம், வடக்கில் நெற்களஞ்சியம், தெற்கில் பங்களா இருந்துள்ளது. உள்கோட்டைக்கு வடக்கில் நெற்களஞ்சியம் அருகிலும், வெளிக்கோட்டைக்கு வடகிழக்கிலும் நுழைவுவாயில்கள் இருந்துள்ளன. உள்கோட்டை நுழைவுவாயிலும், நெற்களஞ்சியமும் இருந்த இடத்தில் தான் தற்போது கோட்டை முனீஸ்வரர் கோயில் உள்ளது. தற்போது உள்ளது உள்கோட்டை மட்டுமே. வெளிக்கோட்டையில் முழுவதும் ஆங்கிலேயர்களால் அழிக்கப்பட்டது போக எஞ்சி இருப்பது தெற்கில் உள்ள பங்களா மட்டுமே.

சுவரின் இருபக்கமும் பாறைக்கற்களை வைத்து அதன் நடுவில் செங்கல், சுண்ணாம்பு சாந்தை நிரப்பி இக்கோட்டையைக் கட்டியுள்ளனர். ஆனால் செங்கற்களால்




https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

கட்டப்பட்ட கோட்டையின் உள் மற்றும் வெளிப்புறச்சுவர்களில் பாறைக்கற்களைக் கொண்டு ஒட்டியுள்ளது போன்று கோட்டை தோற்றமளிக்கிறது. குண்டாற்றின் கரையில் மேட்டுப்பகுதியில் கட்டப்பட்டுள்ள இக்கோட்டையின் மேற்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் குண்டாற்றின் கரையில் பலவிதமான பாறைகள் உள்ளன. இப்பாறைகள் உடைக்கப்பட்டு கோட்டை கட்ட பயன்படுத்தப்பட்டுள்ளது. வெட்டி எடுக்கப்பட்ட பெரிய அளவிலான பாறைகள் தற்போதும் அப்பகுதியில் கிடப்பது இதை உறுதியாக்குகிறது. மேற்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் உள்ள பாறைகளை வெட்டி எடுத்தபின் அதில் ஏற்பட்ட பள்ளம் இக்கோட்டைக்கு அகழி போன்று அமைந்துள்ளது. கோட்டை கட்டுவதற்கான செங்கற்களை அப்பகுதியிலேயே தயாரித்து சுட்டுப் பயன்படுத்தியுள்ளனர். தூரத்தில், அருகில் உள்ளவர்களைதுப்பாக்கி கொண்டு குறிபார்க்க இக்கோட்டையின் மேல் சுவர்களில் துளைகள் உள்ளன.

கொத்தளமாக இருந்த பகுதிகளில் கொடுமுள் ஆதண்டை, குழல் ஆதண்டை, நாட்டு வீழி ஆகிய அரியவகை மூலிகைத் தாவரங்கள் வளர்ந்து காணப்படுகின்றன. கோட்டையின் வெளிப்பகுதியில் சக்கம்மா, வீரபத்திரசாமி ஆகியோருக்கு கோயில்கள் உள்ளன. இப்பகுதியில் அழகிய மதிலும் கட்டடங்களும் இருந்துள்ளன.

கி.பி.1877 ஆம் ஆண்டு குண்டாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக இக்கோட்டையின் பல பகுதிகள் சேதமடைந்தன. வெள்ளத்தின் காரணமாகவோ, பெயர்த்தெடுத்ததன் காரணமாகவோ இக்கோட்டையில்



கி.பி.1801க்கு முன் கமுதிக் கோட்டையின் வரைபடம்

பொருத்தப்பட்டிருந்த கற்கள் தற்போது பெருமளவில் இல்லை. கற்கள் பெயர்ந்து போன நிலையில் கற்கோட்டையாக இல்லாமல் வெறும் செங்கல் கோட்டையாகவே இப்போது காட்சியளிக்கிறது. ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட கற்கள் குண்டாறு மதகு அணையின் அருகில் சிதறிக் கிடக்கின்றன. கோட்டையில் இருந்த கற்களைப் பெயர்த்து எடுத்து கமுதி குண்டாற்றில் பாலம் கட்ட ஆங்கிலேயர்கள் பயன்படுத்தியதாகச் சொல்லப்படுகிறது.

இராமநாதபுரம் சேதுநாட்டை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனிப் படையினர் கைப்பற்றிய பின்பு, இக்கோட்டையையும் 25.08.1801இல் அவர்கள் கைப்பற்றிக் கொண்டனர். பின்பு ஆங்கிலேயர்களிடமிருந்து மயிலப்பன் சேர்வைக்காரர், மருது சகோதரர்கள், காடல்குடி பாளையக்காரர் ஆகியோர் கொண்ட புரட்சிக்காரர்கள் இக்கோட்டையைக் கைப்பற்ற பலமுறை போர் தொடுத்தனர். சேதுநாட்டின் அனைத்துக் கோட்டைகளையும் இடித்தபோது, இக்கோட்டையையும் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியினர் இடித்துவிட்டனர். அவர்கள் இடித்தது போக எஞ்சிய கோட்டையின் பகுதிகளே தற்போது நாம் காணும் இக்கோட்டை. இக்கோட்டை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் பாதுகாப்பில் பராமரிக்கப்படுகிறது. கோட்டை உள்ள இப்பகுதி கோட்டைமேடு என அழைக்கப்படுகிறது.

**ஆறுமுகக்கோட்டை**

இராமநாதபுரத்தில் இருந்து திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் ஆர்.எஸ். மங்கலத்திலிருந்து மூன்று கி.மீ. தொலைவில் உள்ளது செங்கமடை என்ற ஊர். இராசசிங்கமங்கலம் பெரியகண்மாய் செங்கமடையினால் நீர்ப்பாசனம் பெறும் பகுதி என்பதால் இவ்வூருக்கு செங்கமடை என பெயர் வந்திருக்கலாம். இங்கு கோட்டைக்கரை ஆற்றின் கரையில் ஒரு கோட்டை உள்ளது. அறுகோண வடிவில் அமைந்துள்ளதால் இதை ஆறுமுகக்கோட்டை என்கிறார்கள். 600 மீட்டர் சுற்றளவில் உள்ளது இக்கோட்டை. கி.பி.1713 முதல் கி.பி.1725 வரை இராமநாதபுரம் சேது நாட்டை ஆட்சி செய்த திருவுடையத்தேவர் என்ற முத்து விஜயரெகுநாத சேதுபதி, பிரஞ்சுப் பொறியாளர்களைக் கொண்டு இக்கோட்டையைக் கட்டினார்.

செங்கல், சுண்ணாம்புச் சாந்து போன்றவை கொண்டு இக்கோட்டை உருவாக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்பகுதி 10 அடி அகலத்தில் 10 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் மேல் எழுப்பப்பட்டுள்ள கோட்டைச் சுவர்கள் பத்து அடி வரை உயரம் உள்ளன. கோட்டை கீழிருந்து 20 அடி உயரத்தில் உள்ளது. சுவர்கள் நான்கு அடி அகலம் உள்ளன. கோட்டை ஆறு இதழ்கள் உள்ள ஒரு மலர் போன்ற வடிவில் இருந்துள்ளது. இதன் சுவர்கள் உள்நோக்கி வளைந்தும், வெளிப்புறம் விரிந்தும் உள்ளன.



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

கோட்டைக்குள் அதன் மேற்குப்பகுதியில் இரு பெரிய அறைகள் உள்ளன. இது வீரர்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்டதாக இருக்கலாம். இங்கு விளக்கு வைக்கும் சாளரங்கள் உள்ளன. இதில் கல்நிலையுடன் இரு வாசல்கள் உள்ளன. இதன் மேலும் கீழும் கதவு மாட்டும் கொண்டியின் துளை உள்ளது. கல்நிலையின் அருகில் செம்பாறைக்கல் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இதன் சுவர்களும் கோட்டைச் சுவர்கள் போன்று பாதுகாப்பு அம்சங்கள் நிறைந்ததாக உள்ளன. இதன் மேலேயும் வீரர்கள் நின்று பாதுகாப்புப் பணி புரிந்துள்ளார்கள். இதன் இரண்டாம் அறையின் வடக்குப் பகுதியில் சிறிய வாசல் ஒன்று உள்ளது. இவ்வழியாக கோட்டையின் மேல்பகுதிக்குச் செல்ல படி உள்ளது. இவ்வழியாக கோட்டையின் அனைத்துப் பகுதிகளுக்கும் விரைந்து செல்ல முடியும். இந்த அறையின் கீழ்பகுதியில் சுரங்கப்பாதை இருந்திருக்கலாம். சுரங்கப்பாதையில் இருந்து வெளியேறும் வழி இங்கிருந்து அரை கி.மீ. தூரத்தில் கோட்டைக்கரை ஆற்றின் அருகில் உள்ளது. இது அவசர காலத்தில் முக்கிய நபர்கள் தப்பிச் செல்லப் பயன்படுத்தப்பட்ட ரகசிய வழியாக இருந்திருக்கலாம். தற்போது இது அழிந்த நிலையில் உள்ளது.

இந்த அறை உள்ள பகுதி இரண்டடுக்குப் பாதுகாப்புடன் இருந்துள்ளதால், கோட்டையின் நுழைவுவாயில் அந்தப் பகுதியிலேயே இருந்திருக்கலாம். கோட்டையின் மேலே ஏறிச் செல்ல படியுடன் கூடிய சாய்தளப் பாதை உள்ளது. வீரர்கள் நின்றுகொண்டு கோட்டையின் வெளிப்பகுதிகளைக் கண்காணிக்கும் வசதி இருந்துள்ளது. கோட்டைச் சுவர்களில் மேல், கீழ், நடுப் பகுதிகளில் துப்பாக்கியால் சுடுவதற்கான துளைகள் உள்ளன.

இக்கோட்டைக்குள் முனீஸ்வரர் மற்றும் கருப்பசாமி கோயில், குளம் ஆகியவை உள்ளன.



எஞ்சி நிற்கும் ராமநாதபுரம் கோட்டையின் மூலைக் கொத்தளம்

சிறிய அளவில் இருந்த இக்குளம் கோயில் திருப்பணிகளின் போது தூர்வாரப்பட்டு பெரியதாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இக்குளத்தின் தென்கரையில் கோட்டையின் பொறுப்பாளர் தங்கி இருந்த செவ்வக வடிவிலான சிறிய அரண்மனை இடிந்த நிலையில் உள்ளது. இதேபோன்ற ஒரு கட்டுமானம் கோயிலின் வடக்கில் இருந்து பிறகு இடிந்துவிட்டதாக இவ்வூரிலுள்ள ஆசிரியர் திரு.மலைக்கண்ணன் கூறினார். இக்கோட்டையைச் சுற்றி ஆறு அடிக்கும் மேல் ஆழமான அகழி இருந்துள்ளது. அது இப்போது தூர்ந்துபோன நிலையில் உள்ளது.

தஞ்சை மராட்டிய மன்னன் துல்ஜாஜி கி.பி.1771இல் இராமநாதபுரம் கோட்டையைக் கைப்பற்றச் சென்ற போது இந்த ஆறுமுகக் கோட்டையைக் கைப்பற்றி முன்னேறியுள்ளார். சேதுபதிகள் தஞ்சாவூர் நாயக்க, மராட்டிய மன்னர்களுடன் நடத்திய போர்களின்போது இக்கோட்டை முக்கியப் பங்கு வகித்தது. அவர்களின் படைகளை இராமநாதபுரம் நோக்கி முன்னேறவிடாமல் பல போர்களில் இக்கோட்டையின் படைகள் தடுத்துள்ளன.

முத்துராமலிங்க சேதுபதி காலத்தில் ஆறுமுகக் கோட்டையின் பொறுப்பாளராக இருந்தவர் அவரது மூத்த சகோதரி மங்களேஸ்வரி நாச்சியாரின் கணவர் மாப்பிள்ளைத்தேவர். முத்துராமலிங்க சேதுபதியை திருச்சி சிறையில் அடைத்துவிட்டு, ஆற்காடு நவாப் ஆட்சி இராமநாதபுரத்தில் நடந்து வந்தபோது அதை நீக்க மக்களை ஒன்று திரட்டியவர் இந்த மாப்பிள்ளைத்தேவர்.



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

**சங்ககால வாழ்விடம்**

கோட்டையின் மேற்கு மற்றும் வடக்கில் உள்ள வெளிப்பகுதிகளில் சங்ககாலத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்விடப்பகுதி உள்ளது. இங்கு கருப்பு சிவப்பு, சிவப்பு, கருப்பு நிற பானை ஓடுகள், வண்ணம் பூசப்பட்ட, வழுவழுப்பான, சிறிய மற்றும் பெரிய அளவிலான பானை ஓடுகள், இரும்புத்தாதுக்கள், சங்கு, பானைத்தாங்கிகள், தேய்ப்புக்கற்கள் ஆகியவை ஏராளமாகச் சிதறிக் கிடக்கின்றன. கோட்டையின் கிழக்குப்பகுதியில் முதுமக்கள் தாழிகளின் ஓடுகள் உள்ளன. எனவே இக்கோட்டை மற்றும் அதன் வெளிப்பகுதி பெருங்கற்காலம், சங்ககாலம் முதல் மக்கள் குடியிருப்பாகவும், இடுகாடாகவும் இருந்துள்ளது என்பது தெரிகிறது.

**பழைய கோட்டை**

கோட்டைக்குள் உள்ள குளத்தை தூர்வாரி விரிவுபடுத்தியபோது அதன் கிழக்கு மற்றும் தெற்குப்பகுதிகளில் புதைந்திருந்த செங்கல் கட்டுமானம் வெளியே தெரியத் துவங்கியுள்ளது. இதில் செங்கற்களை இணைக்க களிமண் சாந்து பயன் படுத்தப்பட்டுள்ளது. இச்செங்கற்கள், நீளம் 23 செ.மீ., அகலம் 13.5 செ.மீ., உயரம் 5 செ.மீ. எனும் அளவில் உள்ளன. இவை இடைக்காலத்தைச் சேர்ந்த செங்கல் அளவில் உள்ளன. இக்கட்டுமானம் பிற்காலப் பாண்டியர்களால் 13ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோட்டையின் அடிப்பகுதியாக இருக்கலாம். மேலும் இக்கோட்டையின் பெயரில் இங்கு ஓடும் ஆறு அழைக்கப்படுகிறது. எனவே சங்ககாலம் முதல் இங்கு கோட்டை இருந்திருக்கலாம். இதன் உள்ளே நாட்டு வீழி, சங்கஞ்செடி உள்ளிட்ட அரிய வகை மூலிகைத் தாவரங்கள் அதிகளவில் உள்ளன.



வட்ட வடிவமான கமுதிக் கோட்டை - பறவைப் பார்வை

கி.பி. 1801 இல் ஆங்கிலேயர் சேதுபதிகளின் பல கோட்டைகளை அழித்தபோது இக்கோட்டையும் சிதைக்கப்பட்டது. இதன் கிழக்கு, தெற்குப் பகுதிகள் முழுவதுமாக அழிந்துள்ளன. வடக்குப் பகுதியில் இருந்த கோட்டைச்சுவரும் பெருமளவு இடிந்து விழுந்துவிட்டது.

**ஓரியூர் கோட்டை**

அகநானூறின் 220வது, புறநானூறின் 348வது பாடல்கள் ஊணூரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன் என்பவனின் பாதுகாப்பு நிறைந்த மதில்களாகிய எல்லை யினை உடையதாக ஊணூர் விளங்கியது என்றுதழும்பனை தூங்கல் ஓரியார் என்ற புலவர் பாடியுள்ளார். இவ்வூருக்கு அருகில் மருங்கூர்பட்டினம் இருந்தது. இவ்வாறு அகநானூறின் 220, 227வது பாடல்கள் கூறுகின்றன.

நெல்லறுக்கும் உழவர், தேனை வடித்து உண்ணும் குயவர் சேரி, சிறுசிறு மீன்களைப்பிடித்து உண்டு வாழும் பாண்சேரி என வளம் மிகுந்து விளங்கியது வாய்மொழி தவறாத தழும்பனின் ஊணூர் என புறநானூறின் 348வது பாடல் தெரிவிக்கிறது.

இவ்வூரைப் பற்றி சங்க இலக்கியங்கள் தரும் விவரிப்புகளைக் கொண்டு பின்வருவனவற்றை அறிந்து கொள்ள முடிகிறது. குயவர்சேரி, பாண்சேரி, உழவர் குடியிருப்பு என தொழில்முறையில் மக்கள் தங்கள் குடியிருப்புகளை அமைத்திருந்துள்ளார்கள். நிலம் செம்மண் பூமியாக இருந்துள்ளது. வேங்கை மரம் இருந்துள்ளது. தழும்பன் என்பவனின் பாதுகாப்பு மதில்கள் ஊரைச் சுற்றி இருந்துள்ளன. எல்லையாக மதில்கள் இருந்தன எனப்படுவதால் இதைக் கோட்டை எனலாம். அதிகமாக பழமையான பலவகை நெல் வகைகள் விளைந்துள்ளன. கடலிலிருந்து அலை ஓசை கேட்கும் தொலைவில் இவ்வூர் இருந்துள்ளது.

ஊண்+ஊர் என்பது ஊணூர் ஆகியுள்ளது. இங்கு நெல் அதிகளவில் விளைந்ததை சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. உணவு தரும் நெல் மிகுதியாக



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

விளையும் ஊர் என்பதால் இவ்வூருக்கு ஊணூர் எனப் பெயர் வந்துள்ளது.

சுந்தரபாண்டியன்பட்டினத்தில் இருந்து தேவகோட்டை செல்லும் சாலையில் உள்ளது ஒரியூர். 04.02.1693 இல் போர்ச்சுகீசிய பாதிரியார் ஜான் டி பிரிட்டோ கொல்லப்பட்ட ஊர். ஒரியூரில் கோட்டை மகாலிங்க சுவாமி கோயில் அருகிலேயே சேதுபதி மன்னர்களின் ஓர் அரண்மனை உள்ளது. இப்பகுதி கோட்டை என்று அழைக்கப்படுகிறது. வட்டவடிவில் சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த இடத்தை ஆய்வு செய்தபோது கருப்பு சிவப்பு நிற பானை ஓடுகள், இரும்புத் தாதுக்கள், வட்டச் சில்லுகள், சீனநாட்டுப்போர்சலைன், செலடன் வகைப் பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டன.

கோட்டை மகாலிங்க சுவாமி கோயிலின் தெற்கில் ஒரு செங்கல் கட்டுமானம் உள்ளது. இதில் உள்ள ஒரு முழு செங்கலின் நீளம் 23 செ.மீ., அகலம் 14 செ.மீ., உயரம் 4 செ.மீ. ஆகும். இது கி.பி.13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இடைக்கால செங்கல் அளவில் உள்ளது.

ஆறுமுகக்கோட்டை மற்றும் ஒரியூர் கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள செங்கற்கள் ஓரளவு ஒரே அளவில் உள்ளன. எனவே ஒரியூரில் பிற்காலப் பாண்டியர்களால் கி.பி.13ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட செங்கல் கோட்டையின் எச்சமாக இதைக் கருதலாம். ஒரியூரில்உள்ள கோட்டை சங்ககாலத்தில் மண்ணால் கட்டப்பட்ட கோட்டையாகவும், பிற்காலப்பாண்டியர் காலத்தில் செங்கல் கோட்டையாகவும், சேதுபதி மன்னர்கள் காலத்தில் இக்கோட்டைக்குள் ஒரு அரண்மனை கட்டப்பட்டு இருந்ததையும் அறிய முடிகிறது. கோட்டை இருந்த பகுதி 2000 ஆண்டுகளாக தொடர்ந்து வரலாற்றுச் சிறப்புள்ள இடமாகவே இருந்து வந்திருக்கிறது. சங்க காலத்தில் இவ்வூரில் இருந்த தழும்பனின் மண்கோட்டை அழிக்கப்பட்டு பின் பாண்டியர்கள், சேதுபதிகள் என தொடர்ந்து இந்த இடத்தைக் கோட்டையாகவே பயன்படுத்தி வந்திருக்கிறார்கள்.

சங்க இலக்கியங்களில் ஊணூரின் அடையாளமாக கோட்டை, செம்மண் பூமி, கடல் அலை ஒலிக்கும் தூரம் ஆகிய தடயங்கள் சொல்லப்படுகின்றன. வட்டவடிவமான மண் கோட்டையின் மேடான பகுதிகள், செங்கற்கோட்டையின் கட்டுமானம், சேதுபதி அரண்மனை ஆகிய எச்சங்கள் இன்றும் ஒரியூரில் உள்ளன. இங்குள்ள மகாலிங்கசுவாமி கோயில் பெயரின் முன் உள்ள கோட்டை என்ற சொல்லும் இங்கு கோட்டை இருந்ததை உறுதிப்படுத்துகிறது. சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் ஊணூரின் தடயங்கள் ஒரியூருக்கு அப்படியே பொருந்துகின்றன. எனவே கோட்டை மகாலிங்கசுவாமி கோயில் உள்ள பகுதி தான் சங்க காலத்து ஊணூர் என்பது உறுதியாகிறது. ஒரியூர் சர்ச் சிலிருந்து 1 கி.மீ. தூரத்தில் இக்கோட்டையின் சிதைவுகளை இப்போதும் காணலாம்.

---

**– வே. இராஜகுரு,**
**தலைவர், இராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவனம்**

## பாராட்டுக் கடிதம்

**ஜூலை 2023 இதழை மிகுந்த ஆர்வத்துடன் படித்தேன். விடுதலைப் போராட்ட வீரர் திருமதி.சிவகாமி அம்மையார் பற்றி திரு.இளந்திரையன் எழுதி இருந்த கட்டுரை மிகவும் சிறப்பு. கட்டுரையாசிரியருக்கு பாராட்டுகள்.**

**இந்தியாவில் கூட்டுறவு பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கு ஜூலை மாததிட்டம் இதழ் பெரிதும் பயன்பட்டது.**

**நல்வாழ்த்துகள்!**

**ஜே.ஆர். கிருஷ்ணன்**
**ஆசிரியர் மஞ்சரி**



https://www.tnpscthervuthunaivan.com/

36ஆம் பக்க தொடர்ச்சி

பங்கு வகித்தார். பின்னர் அவர் 1947 முதல் 1952 வரை கோவை நகரத் தொகுதி எம்எல்ஏவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.பின்னர் 1959இல் இராஜாஜியால் தொடங்கப்பட்ட லிபரல் சுதந்திர கட்சியில் சுப்ரி இணைந்தார். 1993ஆம் ஆண்டு சுப்ரமண்யம் அவர்கள் காலமானார்.



**தாகம் தீர்த்த தலைவர்' பி.இரத்தினவேல் தேவர்**

திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்தபழனிவேல் தேவர், வள்ளியம்மாள் ஆகியோரின் மகனாக திரு. இரத்தினவேல்தேவர் 13.6.1888 இல் பிறந்தார். அவரது நினைவைச் சுமந்து பல சாலைகளும், குடிநீர்த் தொட்டிகளும், நூலகங்களும் இன்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ளன. நீதிக்கட்சியில் செல்வாக்கோடு இருந்த பி.ஆர்.தேவர், வெள்ளையரின் சுரண்டலை ஒழிக்க "காந்திஜி அவர்களே சரியான மருந்து" என்று உணர்ந்து காந்திஜியின் வருகைக்காகக் காத்திருக்காமல், உடனடியாக காந்தி அடிகளின் சபர்மதி ஆசிரமத்திற்கே சென்றார். காந்திஜியின் சொல்கேட்டு, 1924 இல் காங்கிரஸில் சேர்ந்தார். அதைத் தொடர்ந்து முதன்முதலாக 1924ஆம்ஆண்டுதிருச்சி நகரசபைத் தலைவரானார். திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயராக பி.ரத்தினவேலு தேவர் அவர்கள் இருந்தபோது, 1927ஆம்ஆண்டு காந்தி அவர்களை கௌரவிக்கும் விதமாகசந்தை விரிவாக்கம் செய்யப்பட்டு, "மகாத்மா காந்தி மார்க்கெட்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1932ஆம்ஆண்டு பெய்த கனமழையால் சேதமடைந்த திருச்சிராப்பள்ளி சோமரசம்பேட்டை நீரேற்று நிலையத்தைதேவர்அவர்கள் அமைத்தார்.

திருச்சிராப்பள்ளி மக்கள் குடிக்கும் தண்ணீரில் இன்றளவும் காவிரியின் கருணை மட்டுமல்லாது தேவர் அவர்களின் சீரிய சிந்தனையும் தலைமைப் பண்பும் கலந்தே இருக்கின்றது. இதனால் அவர்"நம் தாகம் தீர்த்த தலைவர்" என்று அழைக்கப்படுகின்றார்.

கொச்சு குட்டன் என்றழைக்கப்படும் சி.கே. ராஜா ராஜவர்மா 1904ஆம் ஆண்டு ஜூலை 8ஆம் தேதி, தற்போதைய கேரள மாநிலத்தின் முந்தைய திருவிதாங்கூர் இராஜ்ஜியத்தில், கோட்டயத்திற்கு அருகிலுள்ள வைக்கத்தில் உள்ள சியோதி கோவிலகத்தில் நீலகண்டன் நம்பூதிரி மற்றும் அம்பாலிகா தம்பாட்டி ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இளம் வயதிலேயே, அவர் க்ஷேத்ரபிரவேசம் (கோயில் நுழைவு ஊர்வலம்), தீண்டாமை ஒழிப்பு மற்றும் கள்ளுக்கடைகளுக்கு எதிரான போராட்டம் போன்ற பல்வேறு சமூக இயக்கங்களில் பங்கேற்றார். 1923இல், நடைபெற்ற "லெவெலிங் அண்ட் சர்வேயிங்" தேர்வில் தேர்ச்சிப்பெற்றுபிரிட்டிஷ் அரசில் சர்வேயர் ஆக பணியில் சேர்ந்தார். மேலும் திருவிதாங்கூர் சமஸ்தானிலிருந்து மதராஸ் மாகாணத்திற்கு, அரச ராஜ்யத்தால் விரட்டப்பட்டார்.பணியில் இருந்துகொண்டே விடுதலை இயக்கங்களில் மறைமுகமாகவும் இரகசியமாகவும் பங்கெடுத்து கொண்டிருந்ததால், பிரிட்டிஷ் அரசு இவரை சர்வேயர் பணியிலிருந்து 1925இல்நீக்கம் செய்தது. பின்னர் அவர் இந்திய தேசிய காங்கிரஸில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு மதராஸ் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் சுதந்திரப் போராட்ட இயக்கங்களில் பங்கேற்றார்.

1930ஆம்வருடம் இராஜாஜி தலைமையில் திருச்சியில் இருந்து வேதாரண்யம் வரை நடந்த பேரணியில் சி.கே. ராஜா ராஜவர்மாஅவர்கள் சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களுடன் இணைந்து உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டார். அதற்காக அவர் கைது செய்யப்பட்டு திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் ஓராண்டு காலம் அடைக்கப்பட்டார். 1931ஆம்வருடம்மதுரை, ஆண்டிபட்டி மற்றும்உசிலம்பட்டி ஆகிய இடங்களில் நடந்த மதுவிலக்கு எதிர்ப்பு இயக்கங்களில் பங்கேற்றார். 1932இல் அந்நியத் துணிப் புறக்கணிப்பு இயக்கத்தில் பங்கேற்று 62 நாட்கள் மதுரை மற்றும் கண்ணனூர் சிறைகளில் அடைக்கப்பட்டார். பின்னர் 1933 ஆம் வருடம் உப்பு தயாரிப்பு இயக்கத்தில் கலந்து கொண்டதற்காக 162 நாட்கள் மதுரை மற்றும் திருச்சி மத்திய சிறைகளில் அடைக்கப்பட்டார். 1942ஆம்வருடம்வெள்ளையனே வெளியேறு இயக்கத்திற்கு முன், ஆங்கிலேயர்களுக்கு எதிராக வேலூரில் நடந்த எதிர்ப்புப்பிரச்சார இயக்கத்தில் பங்கேற்றார். அதனால்

https://www.tnpscthervuthunaivan.com/

அவர் கைது செய்யப்பட்டு 325 நாட்கள் வேலூர் சென்ட்ரல் அலிபுரம் கேம்ப் பெல்லாரி சென்ட்ரல் ஆகிய இடங்களில் உள்ள பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டார்.

இந்திய அளவில் ஆங்கிலேயர்களுக்கு எதிராகநடைப்பெற்ற போராட்ட இயக்கங்களில் பங்குகொண்டு, அனைவருடனும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதற்காக அவர் இந்திமொழியைக் கற்று, விருப்பமுள்ள மாணவர்களுக்கும், பிறர்க்கும் இந்திமொழியைக் கற்றுக்கொடுத்தார். அதற்காக அவர் பாராட்டையும் பெற்றார். இதன்மூலம் அவருக்கு நாவலாசிரியர் கவிஞர் மைதிலிஷரன் குப்த்தா அவர்களின் நட்பு கிடைத்தது. சிலகாலம் புதுக்கோட்டையில் உள்ள மாவட்ட வாரியப் பள்ளியில் இந்தி பண்டிதராகவும் வர்மா பணிபுரிந்தார்.

காந்திஜியின் அன்பு கட்டளைக்கு இணங்க மணப்பாறையில் ஒருஹரிஜன சிறுவனைத் தத்தெடுத்து, ஹரிஜன நலனுக்காக தனது சேவையை வழங்கினார். அவர் ஆற்றிய சேவைக்காக திருச்சிரப்பள்ளியின் தக்ஷிண பாரத் ஹிந்தி பிரச்சார சபா அவரைக் கௌரவித்தது. "சுதந்திரப் போராட்ட இயக்கங்களில்" அவரது தீவிரப்பங்கிற்கு நன்றி செலுத்தும் வகையில், இந்திய அரசும் தமிழகஅரசும் அவரதுவாழ்நாள்முழுவதும் "சுதந்திரசம்மான் சைனிக் ஓய்வூதியத்தை" வழங்கின. மேலும், "இந்திப்பண்டிதராக" பணியாற்றியதற்காக, தமிழக அரசால் "ஆசிரியர் ஓய்வூதியமும்" அவருக்கு வழங்கப்பட்டது. 1972 ஆகஸ்ட் 15 அன்று தாம்ரபத்ர விருதை வழங்கி இந்திய அரசு அவரை கௌரவித்தது. அவருக்கு கேரள அரசால் "மதிப்புமிக்க திருவிதாங்கூர் அரச ஓய்வூதியமும்" வழங்கப்பட்டது. சி.கே. ராஜாராஜ வர்மா அவர்கள் 1987 ஆகஸ்ட் 20 அன்று திருச்சிராப்பள்ளியில் காலமானார்.

### தியாகி கே.ஆர். செல்லம்

தியாகி கே.ஆர்.செல்லம் அவர்கள் பழனிக்கு அருகே உள்ள கலயம்புத்தூர் என்ற கிராமத்தில் கே.எஸ்.ராமநாத அய்யர் அவர்களின் மகனாக1908இல்பிறந்தார். இவர் மாணவப் பருவத்திலேயே நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் ஆர்வம் கொண்டார். பள்ளிக்கல்வியை முடித்தவுடன் அவர் பழனி நகரத்தின் காங்கிரஸ் இயக்கத்தின் உறுப்பினராகச் சேர்ந்தார். நகர காங்கிரஸ் இயக்கத்தின் தலைவராக இருந்தவர் மணியண்ண செட்டியார். செட்டியாருடன் இணைந்து காங்கிரஸ் இயக்கத்தின் செயலாளராக செல்வம் பணிபுரிந்தார். இவரின் இளமைத் துடிப்பும், தேசபக்தியும் இவரை உத்வேகமாக செயல்படவைத்தது. இவர் ஊர் ஊராகச் சென்று காங்கிரசின் செயல்பாடுகளை பற்றிய செய்திகளை மக்களுக்கு எடுத்துக் கூறினார். காந்திய சிந்தனைகளை மக்கள் மனதில் பதியவைத்தார். நூல்நூற்றல், கதர்ஆடைஅணிதல், அந்நியப் பொருள்களைப் புறக்கணித்தல் போன்றவற்றின் முக்கியத்துவத்தை உணரச்செய்தார். மக்களிடையே சுதந்திர தாகத்தையும், எழுச்சியையும் ஏற்படுத்தினார். தேசபக்தி காரணமாக பொதுச் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாலும் சுயதொழிலிலும் நாட்டம் கொண்டு பழநியிலேயே ஒரு உணவகத்தை ஏற்படுத்தினார். தீண்டாமைக் கொடுமை இருந்த அந்தநாட்களில் இவர் உணவுவிடுதியை சாதிப்பாகுபாடு எதுவும் இல்லாமல் ஒரு சமத்துவ உணவகமாக நடத்திக் காட்டினார். அவருடைய நல்ல அணுகுமுறை யினால் அவரைச்சுற்றி எப்போதும் காங்கிரஸ் தொண்டர்கள் சூழ்ந்துகொண்டே இருப்பர். அவரது வழிகாட்டுதலின் பேரில் ஏராளமான தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுசிறை சென்றார்கள். அவருடைய எளிமை, இனிமையான பேச்சு, பணிவு போன்றவற்றால் மக்கள் அவரை விரும்பிப் பின்பற்றினார்கள்.

அன்னாரது பணி 1930 ஆம் ஆண்டில் தொடங்கியது. 1932 இல் நடந்தசத்தியாகிரகப் போராட்டத்திற்குத் தொண்டர்களைத் தயார் செய்து அனுப்பினார். வெளிநாட்டுத் துணிப்புறக்கணிப்பு மிகவும் தீவிரமாக இருந்த காலத்தில் அவரது பங்கு மிகப்பெரியது. மகாத்மாகாந்தி அவர்கள் 1934 ஆம்ஆண்டு பழனிக்கு விஜயம் செய்தார். ஹரிஜனங்கள் கோ யிலுக்குள் நுழைய தடை இருந்த காரணத்தால் காந்திஜி அவர்களும் கோயிலுக்குச் செல்லவில்லை. 1937இல் இராஜாஜி தலைமையில் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலிலும் பழனி கோயிலிலும் தாழ்த்தப்பட்டோர் அனுமதிக்கப்பட்ட பிறகுதான் காந்திஜி அவர்கள் இவ்விரு கோயில்களையும் பார்வை யிட்டார். ஹரிஜன முன்னேற்ற நிதிக்காகப்பணம்சேகரித்து, அதை காந்தி அவர்கள் பழனிக்கு வந்தபோது அவரிடம் கொடுத்தார். அதற்கு முன்னர் திரளாக வந்திருந்த பெண்களிடம் முடிந்தால் தங்கநகைகளை, ஹரிஜன நிதிக்கு வழங்குமாறு கேட்டுக்கொண்டனர். இவ்வாறு பலவழிகளில் ஹரிஜன மக்களின் முன்னேற்றத்திற்க்காக நிதி வசூலித்தது கொடுத்தார்.



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

1937ஆம் ஆண்டு சென்னை சட்டசபைக்கு நடைபெற்ற தேர்தலில் மட்டப்பாறை வெங்கட்ராமையர் அவர்கள் நின்றார். அவருக்கு ஆதரவாக செல்வம் அவர்கள் ஊர்ஊராகச் சென்று வாக்குகள் சேகரித்தார். மேலும் காங்கிரசின் வெற்றிக்காகவும் இவர் தீரர்சத்ய மூர்த்தியுடன் சேர்ந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இராஜாஜி அவர்களின் ஆணையின் படிமதுரையில் வைத்தியநாத அய்யர் அவர்கள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஆலயப்பிரவேசம் செய்ததுபோல் இவர் பழனி தண்டாயுதபாணி கோவிலுக்கு ஆலயப் பிரவேசம்செய்து அனைவரின் பாராட்டையும் பெற்றார். 1942இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது இராமச்சந்திரன், லக்ஷ்மிபதி ராஜூ ஆகியோருடன் இணைந்து ஊர்வலத்தில் கலந்துகொண்டார். இதனால் பதினைந்து நாட்கள் சிறையில் இருந்தார்.

கே. ஆர். ஜமதக்னி 1903ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் தேதி வட ஆற்காடு மாவட்டம் கடப்பேரியில் ஜமதக்கனி பிறந்தார். இவர் இராஜாஜி மற்றும் காந்திஜியின் சீடர். 1927இல், தனது 24வது வயதில், நீல் சிலை அகற்றும் இயக்கத்தில் பங்கேற்று, 18 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். 1930இல் சத்தியாகிரகத்தில் பங்கேற்று ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தார். 1935இல் வீர சுதந்திரம் பத்திரிகையில் சேர்ந்து கட்டுரைகள் எழுதினார். 1939இல் அவர் போர் எதிர்ப்புப் பிரச்சாரத்தில் பங்கேற்று ஒரு வருடம் சிறையில் இருந்தார். அவர் 1942 வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் ஈடுப்பட்டதற்காக கைது செய்யப்பட்டு ,பின்னர் விடுவிக்கப்பட்டார். சோசலிஸ்ட் மற்றும் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். காரல் மார்க்ஸின் தாஸ் கேபிடல்எனும்நூலைதமிழில் மூலதனம் என்ற பெயரில் மொழிபெயர்த்தார் 1981 மே 27 அன்று இவர் காலமானார்.

பெருமைமிகு இந்த தேசத்தை உருவாக்கிட தமது இன்னுயிரை நீத்த தியாகிகளின் தியாக வரலாறுகளை, இளைய தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்க வேண்டும். நாம் பெற்ற சுதந்திரம் எளிதாக வந்தது இல்லை என்பதை உணர்த்த வேண்டும். இன்றைய சூழலில் நமது. தேசம் எதிர்கொண்டு இருக்கும் பிரச்சினைகளை அவர்களிடத்தில் கொண்டு சேர்க்க வேண்டும். அதை அடைவதற்கு அகிம்சை முறையில் போராடுவதற்கும் அவர்களை பழக்கப்படுத்திட வேண்டும். தேசத்திற்கு எதிராகவும், மக்களுக்கு எதிராகவும். நடைபெறும் செயல்கள் எதுவாக இருந்தாலும் அதை மன உறுதியோடு எதிர்கொள்ள வேண்டும். ஜாதி, மத, மொழி, இனத்தால், நமது தேசம் பிளவுபட நாம்ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது, துணைபோகவும் கூடாது. இந்திய சுதந்திரத்தின் அமுதப் பெருவிழாவில் இதுவே நமது சூளுரையாக அமைய வேண்டும்.

**– ஜெ.சுமதி, உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை, சி.பி. ஆர். இந்தியவியல் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.**

## நலிவடைந்த பிரிவினருக்கு சட்ட சேவைகள்

பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு நீதி கிடைக்க அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. பொருளாதார அல்லது பிற சிக்கல்கள் காரணமாக எந்தவொரு குடிமகனுக்கும் நீதியைப் பெறுவதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, சட்டப் பிரிவு 12 இன் கீழ் வரும் பயனாளிகள் உட்பட சமூகத்தின் நலிந்த பிரிவினருக்கு இலவச மற்றும் திறன் வாய்ந்த சட்ட சேவைகளை வழங்குவதற்காக தேசிய சட்ட சேவைகள் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. சம வாய்ப்புகளின் அடிப்படையில் நீதி வழங்குவதை உறுதி செய்வதற்காக லோக் அதாலத்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

இதற்காக, தாலுகா நீதிமன்றம் முதல் உச்ச நீதிமன்றம் வரை, சட்ட சேவை நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சட்டப்பணிகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களில் சட்ட உதவி மற்றும் ஆலோசனைகள் அடங்கும்.

நீதியை விரைவாகவும், சமமாகவும் அணுகுவதற்காக, தேசிய சட்ட சேவைகள் ஆணையம் சட்ட சேவைகள் தொடர்பான மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# தொழில்துறைக்கான தொலைநோக்குப் பார்வை @75

– அன்ஷுமன் கண்ணா

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா தனது உள்நாட்டு உற்பத்தியில் போட்டித் திறனை வலுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது. குறிப்பாகக் கூற வேண்டுமென்றால் சுயசார்பு பாரதம் மற்றும் இந்தியாவில் உற்பத்தி செய்யுங்கள் போன்ற முன்னெடுப்புகள் வாயிலாக இந்த வளர்ச்சியானது சாத்தியமாகியுள்ளது. அனைத்துப் பிரிவுகளைக் காட்டிலும் அதிகபட்ச அளவில் வேலைவாய்ப்பு வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய துறையாக உற்பத்தித் துறையானது உள்ளது. 2030ஆம் ஆண்டிற்குள் 60 மில்லியன் வேலைவாய்ப்புகள் முதல் 70 மில்லியன் வேலைவாய்ப்புகள் வரை உருவாக்கக் கூடிய ஆற்றல் இந்தத் துறைக்கு உள்ளது. உற்பத்தித் துறையின் எதிர்காலம் என்பது நீடித்த நிலைத்த தன்மையிலேயே உள்ளது. வணிக நிறுவனங்கள் நீடித்த நிலையான உற்பத்தி முறையை ஏற்று நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய அரசு பல்வேறு முன்னெடுப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ”ஜீரோ தவறு – ஜீரோ பாதிப்பு”, டிஜிட்டல் இந்தியா மற்றும் இதுபோன்ற பல திட்டங்கள் இதில் உள்ளடங்கும். கடந்த ஏழு ஆண்டுகளில் தனது கொள்கை மற்றும் நெறிமுறைசார் சூழலில் குறிப்பிடத்தக்க அபிவிருத்திகளை இந்தியா அடைந்துள்ளது. இவை தொழில்நிறுவனங்கள் மிக எளிதில் நிறுவப்பட்டு வளர்ச்சி பெறுவதற்கு உதவியாக இருக்கின்றன.

75 ஆண்டுகளுக்கான பாதை என்பது எளிதானதாக இருந்துவிடவில்லை. எனினும், இந்தியா நீண்ட பயணத்தை மேற்கொண்டு வந்துள்ளது. அதாவது காலனித்துவ அதிகாரம் செல்வத்தை சுரண்டிச் சென்ற நிலையில் இருந்து இந்தியா இன்று உலகளாவிய பொருளாதாரத்தில் மிகப்பெரும் பங்களிப்பை ஆற்றுகின்ற நாடாக உருவாகியுள்ளது. இந்தியா அமிர்த காலத்தில் பயணத்தைத் தொடங்கியுள்ள நிலையில் கோவிட் தொற்றுக்குப் பிறகான புதிய உலக ஒழுங்குமுறையில் உலகத் தலைமையிடத்திற்கு வருவதற்கான தனது ஆற்றலை நாடு உணர்ந்துகொள்ள வேண்டிய தருணமாக இது உள்ளது. அதிலும் குறிப்பாக மக்களையும் பூமிக் கிரகத்தையும் காப்பாற்றுவதற்காக நீடித்த நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்த வேண்டும்




என்பது இன்றியமையாததாக உள்ளது. எஃப்.ஐ.சி.சி.ஐ – மெக்கின்சி அறிக்கையின்படி (FICCI-McKinsey Report) 2047ஆம் ஆண்டிற்குள் வளர்ந்து வருகின்ற இந்தியாவானது உயர் வருவாய் தேசமாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது தற்போதைய தனிநபர் வருமானமானது ஆறு மடங்கு அளவிற்கு அதிகரித்தும் வேலை தேவைப்படுவோர்க்கு 60 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருவதாகவும் இந்த வளர்ச்சி இருக்கும் இந்த நிலையை அடையும்பொழுது 2047க்குள் உண்மையான அர்த்தத்தில் இந்தியா தோராயமாக ரூபாய் 1500 இலட்சம் கோடி (19 டிரில்லியன் டாலர்) வருமானம் ஈட்டும் நாடாக மாறியிருக்கும். உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் 7.7 சதவிகிதம் என்ற அளவில் பொருளாதார வளர்ச்சி இருக்கும்.



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

இந்த இலக்கை நோக்கி பொருளாதாரத்தை உந்திச் செல்வதற்கான முக்கிய நெம்புகோலாகத் தொழில்துறை விளங்கும். அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்கைச் சீர்திருத்தங்கள் தொழில்துறையின் வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கியுள்ளன. சரக்கு மற்றும் சேவைகள் வரி அறிமுகம், தேசிய ஒற்றைச்சாளர அமைப்பு தொடங்கப்படுதல், உற்பத்தியோடு இணைந்த ஊக்க நடவடிக்கைத் திட்டமானது சீராக விரிவுபடுத்தப்படுதல் ஆகியன இதில் உள்ளடங்கும். இவை எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் மூலதனப் பொருள்கள், வேதிப்பொருள்கள் ஜவுளி, வாகனம் மற்றும் வாகன உதிரி பாகங்கள் (மின்சார வாகனங்கள் உள்ளிட்டவை), சூரிய மின் ஆற்றலுக்கான தொகுப்புகள், பேட்டரிகள், மருந்து பொருள்கள் மற்றும் மருத்துவக் கருவிகள் போன்ற முக்கியமான துறைகளில் வளர்ச்சியை இவை முடுக்கிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பிரதமரின் கதி சக்தி (PM Gati Shakti) மற்றும் தேசிய சரக்குப் போக்குவரத்துக் கொள்கை போன்ற மத்திய அரசின் ஏனைய முக்கியமான முன்னெடுப்பு நடவடிக்கைகள் இந்தியாவின் உற்பத்தித் தொழிலுக்கான சூழல்சார் அமைப்பை செழிப்பாக்குவதற்கு உதவிகரமாக அமைந்துள்ளன.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் உற்பத்தித் துறையானது அனைத்துப் பிரிவுகளைக் காட்டிலும் அதிகபட்ச அளவில் வேலைவாய்ப்பு வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய துறையாக உள்ளது. 2030ஆம் ஆண்டிற்குள் 60 மில்லியன் வேலைவாய்ப்புகள் முதல் 70 மில்லியன் வேலைவாய்ப்புகள் வரை உருவாக்கக் கூடிய ஆற்றல் இந்தத் துறைக்கு உள்ளது. இந்தியா உற்பத்தித் துறைக்கான உண்மையான உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதத்தை 9 – 10 சதவிகிதமாக (2022ஆம் ஆண்டின் 78 சதவிகிதம் என்பதில் இருந்து) அதிகரிக்க முனைப்பு கொண்டுள்ளது. அதேநேரம் 2030ஆம் ஆண்டிற்குள் ஒட்டுமொத்த உற்பத்தித் தொழிலின் உற்பத்தித்திறனை ஐந்து மடங்காக உயர்த்துவதையும் இந்தியா நோக்கமாகக் கொண்டுள்ளது (தொழிலாளர் உற்பத்தித்திறனை மும்மடங்காகவும் மூலதன உற்பத்தித்திறனை இரு மடங்காகவும் அதிகரிப்பதன் மூலம் இது சாத்தியமாக்கப்படும்). மேலும் குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் 70 – 80 சதவிகிதம் டிஜிட்டல் மயமாதலை அடைதல், இண்டெர்நெட் ஆஃப் திங்ஸ் மற்றும் தானியங்கிமயமாக்கலை ஏற்றுக்கொண்டு உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக உலகப் பொருளாதார அவையின் உற்பத்தியாளர் கூட்டமைப்புகளின் எண்ணிக்கையை 10 மடங்காக அதிகரித்தல் ஆகியவற்றின் மூலம் இது சாத்தியமாக்கப்படும். குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் பிரிவின் ஒரு மிகச் சிறிய உற்பத்தி அலகானது ஒட்டுமொத்த சங்கிலித் தொடரின் ஓர் அங்கமாக மாறாத வரை இத்தகைய இலக்குகளை நனவாக்க முடியாது.

உற்பத்தித்துறையில் தனது முழு ஆற்றலைச் செயல்படுத்துவதற்கு இந்தியா கீழ்வரும் ஐந்து அம்சங்களில் கவனம் செலுத்தவேண்டும் என்பது இன்றியமையாததாகும்:

உலகின் புதிய தலைமுறைக்கான தொழிற்சாலை: உலகளாவிய விநியோகச் சங்கிலித் தொடரில் மாற்றங்கள் ஏற்பட்டுவரும் நிலையிலும் தனித்து விளங்குவதற்கான இந்தியாவின் வாய்ப்புகள்

கோவிட்–19 பெருந்தொற்றுப் பரவலானது விநியோகச் சங்கிலித் தொடரில் பல்வேறு சவால்களை எடுத்துக்காட்டியுள்ள நிலையில் நிறுவனங்கள் உலக அளவில் தங்களுக்கான முதன்மை விநியோகஸ்தர்களுக்கு மாற்றுவழிகளைத் தேடிக் கொண்டிருக்கின்றன. மிகப்பெரும் அளவில் நிலைமைக்குத் தக்கபடி தகவமைப்பை உறுதிசெய்வதாக இவை இருக்கவேண்டும். உருவாகிவரும் இந்த வாய்ப்பை இந்தியா சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். 2030ஆம் ஆண்டிற்குள் 800 பில்லியன் டாலர் முதல் 1.2 டிரில்லியன் டாலர் வரையில் உலகளாவிய விநியோகச் சங்கிலித் தொடரின் மதிப்பு அதிகரிக்கும். இதனை பெருமளவில் இந்தியா கைப்பற்றிக் கொள்ள வேண்டும்.

உயர்நிலைப் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான உலகளாவிய மதிப்புகூட்டு சங்கிலித் தொடரை மேம்படுத்துவதற்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் ஏற்ற பொருத்தமான இடத்தில் இந்தியா உள்ளது. ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை போன்ற தொழிலாளர்கள் அதிக அளவில் வேலைசெய்யும் தொழில்பிரிவுகளைப் பொறுத்து உலகளாவிய மதிப்புக் கூட்டல் சங்கிலித் தொடரில் இந்தியா சிறப்பான முறையில் ஒருங்கிணைந்துள்ளது. எனினும் பெரும் விரிவாக்கத்திற்கான வாய்ப்புகள் இன்னமும் உள்ளன. எலெக்ட்ரானிக்ஸ் போன்ற மூலதனம் அதிகம் தேவைப்படும் தொழில்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

பிரிவுகள் சிலவற்றில் இந்தியா சிறப்பான அளவில் உலகளவில் மதிப்புக்கூட்டு சங்கிலித் தொடரில் இணைந்துள்ளது.

உற்பத்தியோடு இணைந்த ஊக்க நடவடிக்கைகளுக்காக பல்வகைப்பட்ட தொழில் பிரிவுகள் தொகுப்பை அரசு தேர்ந்தெடுத்துள்ளது. மொபைல் போன்கள், மேம்படுத்தப்பட்ட வேதியியல் செல் பேட்டரிகள், அதிக செயல்திறன் கொண்ட சூரிய பிவி தொகுப்புகள், ட்ரோன்கள், அணியக்கூடிய ஸ்மார்ட் வாட்ச் போன்றவை, செமிகன்டக்டர்கள் மற்றும் குறிப்பாக ஸ்டீல் போன்ற புதிய தலைமுறைக்கான தொழில்பிரிவுகள் பலவற்றை அரசு தேர்ந்தெடுத்துள்ளது. அரசின் ஊக்க நடவடிக்கைகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நடவடிக்கைகள் இத்தகைய புதிய தலைமுறைக்கான தொழில் பிரிவுகளை மையமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய புதிய தலைமுறை தொழில்பிரிவுகள் உலகளவில் ஓர் உற்பத்தி மையமாக இந்தியா மாறுவதற்கு உதவிபுரியும். இதுவரை கிடைத்துள்ள முடிவுகள் சாதகமானதாகவே உள்ளன. 2014இல் இரண்டே மொபைல் போன் தொழிற்சாலைகள் இருந்தன. ஆனால் தற்போது மொபைல் உற்பத்தியில் உலகளவில் இந்தியா இரண்டாவது பெரிய நாடாக உருவாகியுள்ளது. இந்தத் தொழில் பிரிவுக்கென உருவாக்கப்பட்ட கொள்கையின் ஆதரவால் இது சாத்தியமாகியுள்ளது. உண்மையில் இந்தியாவின் ஸ்மார்ட் போன்கள் ஏற்றுமதி மதிப்பு இன்றைக்கு 11 பில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகமாக உள்ளது. இதன் மூலம் உலக மொபைல் போன் சந்தையில் முன்னணி ஏற்றுமதி நாடாக இந்தியா உருவாகியுள்ளது. மேலும் இந்தியாவின் ஏற்றுமதிப் பொருள்களில் அதிக அளவில் ஏற்றுமதி ஆகும் ஐந்தாவது பொருளாக ஸ்மார்ட் போன்கள் உள்ளன.

எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் வேதிப் பொருள்களின் ஏற்றுமதிக்காக மும்பை – தானே – ராய்கட் தொகுப்பு போன்று துறைமுகத்திற்கு அண்மையில் தொகுப்பிடங்களை அபிவிருத்தி செய்வதன் வாயிலாக ஐந்து முதல் ஆறு குறிப்பிட்ட உலகளாவிய மதிப்புக்கூட்டல் சங்கிலித் தொடரில் (எலெக்ட்ரானிக்ஸ், வேதிப்பொருள்கள், மருத்துவ உபகரணங்கள்) இந்தியாவின் செயல்பாட்டை மேலும் அதிகரிக்க வேண்டும் என்பதே குறிக்கோளாக இருக்க வேண்டும். தங்களது உற்பத்தி தொழிலின் சாதகங்களின் அடிப்படையில் மாநில அரசுகள் உடனடியாக அப்படியே பயன்படுத்திக் கொள்ளக்கூடிய தொகுப்பிட மண்டலங்களை அமைப்பதற்கு உதவி செய்ய வேண்டும். பாரத்மாலா என்கின்ற அரசின் சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல்வேறு நகரங்களில் பல வாகனப் போக்குவரத்து முனையப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருவதை உதாரணமாகச் சுட்டிக்காட்டலாம்.இவை உற்பத்தித் தொழிலுக்கான (உதாரணமாக நாக்பூரில் எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் ஏரோநாட்டிக்ஸ்) உலகத்தரத்தில், திறன்மிக்க சரக்குப் போக்குவரத்து மண்டலங்களாக உருவாகும். இதற்கு இடையில் ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகளுக்கான மையமாக சோலாப்பூர் உருவாகும். கொள்ளளவுப் பயன்பாட்டை 80 சதவிகிதத்திற்கும் அதிகமாகப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக ஒப்பந்த அடிப்படையிலான உற்பத்தித்தொழில் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதேபோன்று விநியோகஸ்தர்கள் அபிவிருத்தித் திட்டங்களைத் தொடங்குதல் (எ.டு. புத்தாக்க மானியங்கள்), ஒற்றைச்சாளர அனுமதியை செயல்படுத்துதல் ஆகியன உலக அளவிலான மதிப்புக்கூட்டல் சங்கிலித் தொடரில் இந்தியாவின் இருப்பை குறிப்பிட்ட அளவு அதிகரிக்கும்.

### உற்பத்தித் தொழிலில் டிஜிட்டல் புரட்சியை உள்ளிணைத்தல்

அண்மைக்கால நாஸ்காம் (NASSCOM) அறிக்கையின்படி 2021ஆம் ஆண்டிற்கான நிதி ஆண்டில் தொழிற்சாலை 4.0 தீர்வுகளுக்காக இந்திய உற்பத்தித் தொழிலானது 5.5 பில்லியன் முதல் 6.5 பில்லியன் அமெரிக்க டாலர் வரை செலவழித்துள்ளது. அரசின் நெறிமுறைப்படுத்துதல் விதிகளும் தனியார்துறையின் முதலீடுகளும் இந்திய உற்பத்தித் தொழிலை டிஜிட்டல் தொழில்நுட்பத்தை ஏற்றுப் பயன்படுத்த ஊக்குவித்துள்ளன. பெரிய, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தி சார்ந்த தொழில் நிறுவனங்கள் 4.0 தொழில்நுட்பங்களை (இண்டெர்நெட் ஆஃப் திங்ஸ், செயற்கை நுண்ணறிவு, பெருந்தரவுப் பகுப்பாய்வு மற்றும் ரோபோட்டிக்ஸ்) பயன்படுத்தி வர்த்தகச் செயல்பாடுகளில் ஒரு சில அல்லது அனைத்து நிலைகளிலும் டிஜிட்டல்மயமாக்குவதன் மூலம் உற்பத்தியில் ஒரு புதிய முறையை உருவாக்க முடியும். இதன் மூலம் இந்தப் புதிய தொழில்புரட்சியின் முன்னோடிகளாக இவை மாறக்கூடும்.



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

டிஜிட்டல்மயமாக்குதல் என்பது நம்பகத்தன்மையை அதிகரிப்பதோடு மதிப்பு கூட்டல் சங்கிலித் தொடரின் மாற்றங்களுக்கு ஏற்ப தகவமைத்து நிலைத்து நிற்கவும்உதவும். உதாரணமாக தொலையளவியல் போன்ற அதிநவீன பகுப்பாய்வு முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தியாளர்கள் தங்களது விநியோக வலைப்பின்னல்களை சரியான அளவில் பயன்படுத்த முடிவதோடு பொருள்களை இருப்பு வைக்கும் இடத்திலும் விநியோகஸ்தர் நிலையிலும் தேவையை முன்கூட்டியே சிறப்பாக கணிக்கவும் முடியும். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான மானியங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களோடு கூட்டு சேர்ந்து தொழில் மேற்கொள்ளுதல் ஆகியன தொழில்நுட்ப நிபுணத்துவத்தைப் பெறுவதற்கு உதவியாக அமையும். எதிர்கால டிஜிட்டல் மையமாக ஆவதை உற்பத்தித் தொழில் பிரிவானது ஏற்றுக்கொள்ள உதவும். 5ஜி தொழில்நுட்பம் பயன்பாட்டிற்கு வந்து கொண்டிருக்கும் நிலையில் இந்தத் தொழில்நுட்பமானது உற்பத்தி தொழிலை ''ஸ்மார்ட் உற்பத்தி தொழிலாக'' உருமாற்றம் செய்வதில் முக்கியமான பங்கினை வகிக்கும். இணைக்கப்பட்ட சொத்துக் கண்காணிப்பு, இணைக்கப்பட்ட சேமிப்புக் கிடங்குகள், முன்கூட்டியே கணிக்கக்கூடிய பராமரிப்பு, சரக்குப் போக்குவரத்து, சரக்கு வாகன நிர்வாகம் மற்றும் தரமேலாண்மை போன்றவை தொழில்சாலை 4.0விற்கான 5ஜி முக்கியப் பயன்பாடுகளில் உள்ளடங்கும்.

உற்பத்தி சார்ந்த தொழில்சாலைகளின் வளர்ச்சிக்கு தொழில்நுட்ப அபிவிருத்தியில் கவனம் செலுத்துதல் என்பது வருங்காலத்தில் வலுப்படுத்த வேண்டிய முக்கியமான அம்சமாக உள்ளது. அதுமட்டுமல்லாமல் உற்பத்தித் தொழில் பிரிவில் தொழில்நுட்பம் சார்ந்த மேம்பாடுகளை ஏற்படுத்துவதில் சரியான தொழில்திறன்களும் திறமைகளும் கொண்ட தொழிலாளர்கள் முக்கியமான பங்கினை ஆற்றுகின்றனர். உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள குறு, சிறு, நடுத்தரத் தொழில்சாலைகள் எதிர்காலத்தில் வளர்ச்சி பெறுவதற்கு தொழில்திறன் பெறுதல் மற்றும் இருக்கின்ற தொழில்திறனை தரநிலை உயர்த்துதல் ஆகியவற்றிற்கான முன்னெடுப்பு நடவடிக்கைகள் உடனடித் தேவையாக உள்ளன. தொழிலாளர்களின் தொழில்திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக இந்தியா முதலீடு செய்ய வேண்டிய தேவை உள்ளது. இந்தத் தொழில்திறன் இடைவெளியை நிரப்புவதற்கு கல்வி





https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

நிலையங்களும் தொழிற்சாலை அமைப்புகளும் ஒன்றிணைந்து செயல்படுவது அவசியமானதாகும். உற்பத்தியாளர்கள் தேவையான அளவில் தங்களது ஊழியர்களுக்கு அண்மைக்கால உற்பத்தி சார்ந்த தொழில்நுட்பங்களில் தொழில்திறன் தரநிலை உயர்த்துதல் அல்லது மீண்டும் தொழில்திறன் பயிற்சி அளித்தல் ஆகியவற்றை கல்வி நிலையங்களோடு இணைந்து மற்றும் டிஜிட்டல் பயிற்சிக்கான பிளாட்ஃபாரம்கள் வாயிலாக மேற்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல் அரசானது கூடுதலாக தொழில்நுட்ப முதலீடுகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை வளர்க்க வேண்டும் மற்றும் நிறுவனம் சார்ந்த தகுதிறனை விரிவுபடுத்த வேண்டும். இந்த அம்சங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டால் இந்தியாவின் தொழில் வளர்ச்சி வேகமெடுக்கும்.

**நீடித்த நிலையான உற்பத்தித் தொழிலின் எதிர்காலத்தை நோக்கி முன்னேறிச் செல்லுதல்**

உற்பத்தித் தொழில் என்பது பசுமை இல்ல வாயுக்கள் மற்றும் ஏனைய மாசுக்கள் உருவாவதற்கான முதன்மை ஆதார இடமாக இருப்பதனால் இந்தத் தொழில் சுற்றுச்சூழல் மீது குறிப்பிடத்தக்க பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. உற்பத்தித் தொழிலின் எதிர்காலம் என்பது நீடித்த நிலையான தன்மையோடு இருப்பதுவே ஆகும். சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகள், பசுமைக் கொள்கைகளை ஏற்றுச் செயல்படுத்துதல், நீடித்த நிலைத்தன்மையை அர்ப்பணிப்புடன் நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றை மேற்கொள்கின்ற பங்குதாரர்களையும் உற்பத்தி பொருள்களையுமே வாடிக்கையாளர்கள் விரும்புகின்றனர். நீடித்த நிலைத்தன்மைக்காக முன்னெடுப்பு நடவடிக்கைகள் எடுத்தல், அவற்றை தங்களது செயல்உத்தி மற்றும் இயக்குதல் நடவடிக்கைகளில் முக்கியக் குறிக்கோளாக உள்ளடக்குதல் ஆகியவற்றை உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டிருப்போர் மேற்கொள்வதற்கு முக்கியமானமற்றொரு காரணம் எதுவெனில், அவர்களது குறிப்பிடத்தக்க நிதிசார்ந்த இலாபங்களும் சர்வதேசப் போட்டித் தன்மையுமாகும். உற்பத்தி எவ்வாறு சுற்றுச்சூழலை மோசமாக பாதிக்கிறது என்பதில் இன்னமும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டிய சூழலில் தொழிற்சாலை விரிவாக்கத்தை கவனமுடன் கண்காணிப்பது அவசியமாகின்றது. உற்பத்தியாளர்கள் தங்களது முறைகளைத் தொடர்ச்சியாக மாற்றிக் கொள்வதோடு அபிவிருத்தியும் செய்ய வேண்டும். மேலும் நீடித்த நிலைத்தன்மையை உருவாக்க புதிய தீர்வுகளையும் அவர்கள் தேடி அடைய வேண்டும்.

வணிக நிறுவனங்கள் நீடித்த நிலையான உற்பத்திமுறையை ஏற்று நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய அரசு பல்வேறு முன்னெடுப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ''ஜீரோ தவறு – ஜீரோ பாதிப்பு'', டிஜிட்டல் இந்தியா மற்றும் இதுபோன்ற பல திட்டங்கள் இதில் உள்ளடங்கும். இத்தகைய முன்னெடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தரும் வகையில் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் மதிப்புக்கூட்டல் சங்கிலித் தொடர் முழுவதும் பசுமை மாற்றுகளை உருவாக்குவதற்கு முன்னுரிமை தரவேண்டிய தேவை இப்பொழுது உள்ளது. உயிர்சார்ந்த மூலப்பொருள்கள் மற்றும் நீடித்த நிலையான பேக்கேஜிங், பசுமை கட்டிடப் பொருள்கள், பசுமை லேபிள் பெறுவதற்கான தொழிற்சாலை தர நிர்ணய அளவுகளைக் கடைபிடித்தல் மற்றும் மறுசுழற்சி மையங்களை அமைத்தல் ஆகியன இதில் உள்ளடங்கும். பசுமை லேபிள் என்பதற்கான தரநிர்ணயத்தை வரையறை செய்வதற்கு தொழில்சாலைகள் ஒருங்கிணைந்து உதவி செய்யவேண்டும். மேலும், பசுமை சார்ந்த உற்பத்திப் பொருள்களுக்கு விரிவான தணிக்கை முறைகளையும் நிர்ணயிக்க வேண்டும். டிஜிட்டல் தொழில்நுட்பங்களுடன் ஒருங்கிணைந்த உற்பத்திப் பொருள் அபிவிருத்தி என்பது நீடித்த நிலையான உற்பத்தித் தொழிலின் உண்மையான ஆற்றலைப் பயன்படுத்தவும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு இலக்குகளை அடையவும் உதவியாக இருக்கும். அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் டிஜிட்டல் மயமாவதோடு ஒருங்கிணைவதன் மூலம் தொழிற்சாலை 4.0வானது நீடித்த நிலையான குறிக்கோள்களுடன் இணக்கமான தொழிற்சாலை நடைமுறைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பினையும் வழங்குகின்றது. நீண்டகாலப் பொருளாதாரப் பலன்களை உருவாக்குவதற்கான முக்கியமான அம்சம் எதுவெனில் நீடித்த நிலையான



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



வர்த்தகத்திற்கு உதவி செய்யக்கூடிய, பசுமை சார்ந்த, வீணாவதை அதிகபட்ச அளவில் குறைக்கக் கூடிய புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதே ஆகும்.

**உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்**

ஒரு தொழிற்சாலை மதிப்புக் கூட்டல் சங்கிலித் தொடருக்குள் மிகப்பெரும் அளவில் சரக்குப் பொருள்களை இடைமாற்றம் செய்வதைப் பொறுத்து இந்தியாவில் பற்றாக்குறைகள் உள்ளன. மேலும் இதற்கான அதிகமான செலவு இடைமாற்றத்திற்கு நீண்டநேரம் ஆதல் ஆகியவையும் பிரச்சினைகளாக உள்ளன. தொழிலகத்தொகுப்பிட உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டம், பிஎம் கதி சக்தி, தேசிய மாஸ்டர் திட்டம் மற்றும் தேசிய சரக்குப் போக்குவரத்துக் கொள்கை போன்ற பல்வேறு இடையீட்டு நடவடிக்கைகளின் மூலம் இந்தியா இத்தகைய சவால்களுக்குத் தீர்வு கண்டு வருகின்றது. மேலும் கூடுதலாக மாநில மற்றும் மத்திய அரசுகள் பொதுத்துறை ரூ தனியார் பங்குதாரர் நிலையில் பங்கேற்பு, பல முதலீட்டாளர்கள் ஒரே நிறுவனத்தில் முதலீடு செய்தல் மற்றும் ஸ்மார்ட் சிட்டி திட்டப் பலனை உள்ளடக்குதல் ஆகியவற்றின் மூலம் முக்கியமான உற்பத்தித் தொழில்மையங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தலாம். சூரிய மின்னாற்றலுக்கான உள்கட்டமைப்பு வசதி மூலம் ஆஃப் கிரீட் ஊரகச்சந்தை, மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு அரசுகள் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். உள்ளூர் நிலைமைக்கேற்ற இறக்குமதி (எலெக்ட்ரானிக் உதிரி பாகங்கள் உட்பட) என்பதற்கு ஏற்ப தொழில் பிரிவுகளுக்கு உடனடியாக அப்படியே பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் ஊக்க உதவி அளிக்கப்பட வேண்டும். பௌதீக தொழிற்சாலை உள்கட்டமைப்பு வசதிகளுடன் அரசு நிதி உதவியுடன் கூடிய விரிவான நகர உள்கட்டமைப்பு வசதி மேம்பாடும் இந்தியத் தொழில்துறைக்கு தேவைப்படுகிறது. சீனாவிற்கும் மேற்குலக நாடுகளுக்கும் இடையில் தொழில்உத்தி சார்ந்த பிணைப்பு பிளவுபடுவதால் ஏற்படக்கூடிய வாய்ப்பை சரியான முறையில் இந்தியா பயன்படுத்திக் கொள்வதற்கு இவை தேவைப்படுகின்றன.

**முன்னுள்ள பாதை**

கடந்த ஏழு ஆண்டுகளில் தனது கொள்கை மற்றும் நெறிமுறைசார் சூழலில் குறிப்பிடத்தக்க அபிவிருத்திகளை இந்தியா அடைந்துள்ளது. இவை தொழில்நிறுவனங்கள் மிக எளிதில் நிறுவப்பட்டு வளர்ச்சி பெறுவதற்கு உதவியாக இருக்கின்றன. இந்தியா @100 என்பதை நோக்கிய பாதையில் நாம் முன்னேறிச் செல்கின்ற போது சீர்திருத்தச் செயல்பாடுகள் பயணத்தின் வேகத்தை அதிகரிக்கச் செய்வதோடு அதன் அஸ்திவாரத்தையும் வலுப்படுத்தும். இந்த அஸ்திவாரத்தின் மீதுதான் இந்தியா உலகத்தரத்திலான தொழிற்சாலைப் பிரிவைக் கொண்டிருக்கும். செயல்திறன் மிக்க, உற்பத்தித்திறன் சார்ந்த, நீடித்து நிலையாக இருக்கக்கூடிய தொழில்பிரிவான இது மாபெரும் ஏற்றுமதிக்கான வாய்ப்பையும் உள்ளடக்கி இருக்கும்.

---

**–அன்ஷுமன் கண்ணா, இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் அவைகளின் கூட்டமைப்பில் (FICCI) உதவி தலைமைச் செயலாளர்.**



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# இந்தியத் திரைப்படத்துறையின் பயணம்

– அமிதவ நாக்

**இந்தியத் திரைப்படங்கள் துவக்க காலத்திலிருந்தே பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரத்தின் நாடக வழிமுறையைப் பின்பற்றியே வந்துள்ளன. 1940களில் ஹிந்தி மொழித் திரைப்படங்கள் இந்திய திரைப்படத்துறைக்கு முன்னோடியாக விளங்கின. திரு. பன்னா~லீவின் 'இந்திய திரைப்படத்துறை' (1950) என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளதுபடி, 1945இல் உருவாக்கப்பட்ட 99 திரைப்படங்களில் 73–ம் ஹிந்தித் திரைப்படங்களும் (74%), தமிழில் 12 படங்களும், வங்க மொழியில் ஒன்பதும், தெலுங்கில் நான்கும்,, கன்னடத்தில் ஒரு படமும் உருப்பெற்றன. திரு. சத்யஜித்ரே அவர்களின் வங்க மொழிப்படமான பதர்பாஞ் சலி இன்றுவரை இந்தியத் திரைப்படத்துறையின் மிகப்பெரிய தாக்கமாகப் பார்க்கப்படுகிறது. 1950களில் பல இந்திய மொழிப்படங்கள், பன்னாட்டுத் திரைப்பட விழாக்களில் பங்குபெற்று நாட்டிற்குப் பெருமை சேர்த்தன. 1957இல் மேலும் அதிகரித்தது. 1951இல் அமைக்கப்பட்ட திரு. எஸ்.கே.பாட்டீல் திரைப்பட ஆய்வுக்குழுவின் பரிந்துரையின்படி, கலைநயமிக்க திரைப்படத் தயாரிப்பை ஊக்குவிக்கும் வண்ணம் 1960இல் திரைப்பட நிதி வாரியம் அமைக்கப்பட்டது (பிறகு, தேசியத் திரைப்பட மேம்பாட்டு வாரியமாகப் பெயர் மாற்றப்பட்டது). 75 ஆண்டுகளுக்குப்பிறகு, இந்தியத் திரைப்படத்துறை ஒரு முக்கியமான கட்டத்தில் நவீன தொழில்நுட்பத்தை அனைத்துலக அளவில் ஒரு பெரிய திரைப்படத்துறையாக மேம்பட உள்ளது.**

மார்ச் 22, 1895ஆம் ஆண்டு, மனித வரலாற்றில் முதல்முறையாக பாரிஸ் நகரத்தில் லுமியேர் சகோதரர்களான அகஸ்தே மற்றும் லூயி "லா சாட்டே டி லுசியேன் லுமியே அ லியோன்" (La Sortie de l'usine Lumière à Lyon) என்ற ஒரு திரைப்படத்தை குறைந்த அளவிலான பார்வையாளர்களுக்குத் திரையிட்டனர். அதே ஆண்டு டிசம்பர் 28ஆம் நாள் அவர்கள் 10 குறும்படங்களை வணிக ரீதியாகத் திரையிட்டனர். இப்படங்கள் உலகெங்கிலும் திரையிடப்பட்டு ஆறு மாதங்களில் இந்தியா வந்தடைந்தன. முதலில் மும்பையிலும், பிறகு கல்கத்தாவிலும், சென்னையிலும் திரையிடப்பட்டன. இந்தியத் திரைப்படத்துறை முதலில் பெருநகரங்களில் தழைத்தது. இந்தியாவின் முதல் திரைப்படமான தாதா சாகேப் பால்கேயின் 'ராஜா ஹரிச்சந்திரா' என்ற ஊமைப்படம் 1913இல் திரையிடப்பட்டது.




அன்றிலிருந்து தொடர்ந்து வளர்ந்த இந்தியத் திரைப்படத்துறை, 1931இல் அர்தே~ஜீவ் இரானியின் 'ஆலம் ஆரா' திரையிடப்பட்ட பின் பெருமளவில் முன்னேறியது. இந்தியத் திரைப்படங்கள் துவக்க காலத்திலிருந்தே பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரத்தின் நாடக வழிமுறையைப் பின்பற்றியே வந்துள்ளன. இந்த வகையான இசை மற்றும் நடனங்கள் பெருமளவில் வியாபித்த இந்தியத் திரைப்படங்கள் மேற்கத்திய நாடக வடிவிலிருந்து மாறுபட்டதாகும். இதன் காரணமாக, இந்தியாவின் திரைப்படங்கள் துவக்க முதலே நீண்ட சிறப்பான இசை மற்றும் நடனங்கள் மிகுந்தவையாக இருந்தன – சில சமயங்களில் திகட்டும் வகையிலும் கூட. 1932இல் ஜெ ஜெ மதனின் 'இந்திர சபா' என்ற திரைப்படத்தில் 69 பாடல்கள் இருந்தன. இந்தப்படம் சுமார் நான்கு மணிநேரம் ஓடியது. இக்காலகட்டத்தில் தோன்றிய ஸ்டுடியோக்களால் இந்திய திரைப்பட வானில் நட்சத்திரங்கள் உதித்தன.

இரண்டாவது உலகப் போரின் போது, ஐரோப்பிய நாடுகள் கடும்





https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

தாக்கத்தில் இருந்தபோது, இந்தியச் சந்தையில் பணம் மிகுந்திருந்தது. பணம் படைத்தவர்கள் திரைப்படத்துறையில் ஈடுபட்டு, ஃபார்முலா படங்கள் உருப்பெற்றன. அவற்றில் பெருமளவில் பாடல், ஆடல் மற்றும் சண்டைக் காட்சிகள் இருந்தன. இதுவே, இந்திய மசாலாத் திரைப்படங்களின் காலமாக உதித்தது. 1940களில் ஹிந்தி மொழித் திரைப்படங்கள் இந்தியத் திரைப்படத்துறைக்கு முன்னோடியாக விளங்கின. திரு. பன்னா~லீவின் 'இந்திய திரைப்படத்துறை' (1950) என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளதுபடி, 1945இல் உருவாக்கப்பட்ட 99 திரைப்படங்களில் ஹிந்தியில் 73ம் (74%) தமிழில் 12 படங்களும், வங்க மொழியில் 9ம், தெலுங்கில் 4ம், கன்னடத்தில் ஒரு படமும் உருப்பெற்றன. இதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் 1942இல் மொத்தம் தயாரிக்கப்பட்ட 150 திரைப்படங்களில் ஹிந்தியில் மட்டும் 99 படங்கள் (60 சதவிகிதமும், 1943இல் 149 திரைப்படங்களில் 98ம் (66 சதவிகிதம்) மற்றும் 1944இல்



124 திரைப்படங்களில் 88ம் (71 சதவிகிதம்) ஹிந்தி திரைப்படங்கள் உருவாக்கப்பட்டன. 1947இல் இந்தியா சுதந்திரம் பெற்று, பஞ்சாப் மற்றும் வங்க மாநிலங்களில் பிரிவினை ஏற்பட்டது. பஞ்சாப் மாநிலத்தில் மிகப்பெரிய அளவிலான திரைப்படத்துறை



இருக்கவில்லை. ஆனால், வங்கத்தில் திரைப்படத்துறை பிரபலமாக இருந்தது. பிரிவினைக்குப்பின் வங்க மொழிப் படங்களின் சந்தை அளவு பாதியாகச் சரிந்தது. பிமல்ராய், சலீல் சௌத்ரி மற்றும் ரிஷிகேஷ் முகர்ஜி போன்ற பிரபல இயக்குநர்களும், தொழில்நுட்ப வல்லுநர்களும் தங்களுடைய படங்களுக்கான விரிந்த அளவிலான சந்தையையும், வாய்ப்புக்களையும் தேடி மும்பைக்குப் புலம் பெயர்ந்தனர்.

இந்தியா சுதந்திரமடைவதற்கு முன், இந்தியத் திரைப்படத்துறை முறைப்படுத்தப்படாமல், தான் தோன்றியாக விளங்கியது. தொழில்நுட்பம் மிகுந்த இந்த ஊடகத்தில் வாய்ப்பு பெற ஒரு சில பெரிய மனிதர்களுக்கே வெளிநாடுகளில் பயிற்சி பெறும் வாய்ப்புகள் கிடைத்தன. இதனால், இந்தியத் திரைப்படங்களின் தயாரிப்பு தரமானதாக இல்லாமல் இருந்தாலும் நாட்டில் படிப்பறிவு இல்லாத பெரும் கூட்டத்தினால் இந்தத் துறை பாதிக்கப்படவில்லை. 1948இல் 'தி ஸ்டேட்ஸ்மென்' நாளிதழில் வெளியிட்டுள்ள கட்டுரையில் திரு. சத்யஜித்ரே இப்படி கூறினார்: 'இந்தியத் திரைப்படத்துறைக்கு இன்றைய தேவை கவர்ச்சி அல்ல, நல்ல கற்பனைத்திறன், கட்டுப்பாடு மற்றும் இந்த ஊடகத்தின் எல்லைகளை மதித்து, திரைப்படத்தைத் திறம்படத் தயாரிக்க வேண்டும். இந்தியத் திரைப்படத்திற்கு தேவையானது ஒரு தனித்துவம். கருத்தாக்கம், இந்திய உணர்வைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும்'. இதற்கு முந்தைய ஆண்டுதான் சத்யஜித்ரே தன்னுடைய நண்பர்களான சிதானந்ததாஸ் குப்தா, ஆர்.பி. குப்தா, ஹரிசதன் தாஸ் குப்தா மற்றும் சிலரோடு இணைந்து கல்கத்தா திரைப்படச் சங்கம் ஒன்றைத் துவக்கினார். இதுவே, இந்தியப் புனைவுத் திரைப்படங்களுக்கான முதலாவது திரைப்படச் சங்கமாக அமைந்தது. ஆனால், 1942லேயே ஆவணத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் மும்பையில் ஒரு சங்கத்தை நிறுவினர். அடுத்த 30 ஆண்டுகளில் பல திரைப்படச் சங்கங்கள் நாடெங்கிலும் தோன்றின. சினிமா ஒரு கலைவடிவம் என்பதை உணர்த்தவும், அவற்றின் திறன்களையும், உருவாக்கல் தன்மைகளையும் மக்களுக்கு உணர்த்தவும் அவை முற்பட்டன. ஆனால், இந்தச் சங்கங்கள்,




வெளிநாட்டு மொழிப்படங்களையே அதிகம் விவாதித்து, இந்தியத் திரைப்படங்களைத் தர மதிப்பீடு செய்யாதது ஒரு மிகப்பெரிய இழப்பாகவே கருதப்படுகிறது.

இப்படி கூட்டு அறிவாற்றல் குறைவாகவே இருந்தாலும், புதிதாக எழும் இந்தியாவைப் பிரதிபலிக்கும் தனியார் முயற்சிகளுக்குப் பஞ்சமில்லை. 1946இல் உருவாக்கப்பட்ட



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



சேத்தன் ஆனந்தின் 'நீச்ச நகர்' மற்றும் கே.ஏ.அப்பாசின் 'தர்திகே லால்' இரண்டுமே அதிக கவர்ச்சிகரமாக இல்லாமல், இந்தியாவைப் பிரதிபலிக்கும் தனித்துவமாக அமைந்தது என்று சத்யஜித்ரே கூறுகிறார். 1946இல் கேன்ஸ் பன்னாட்டுத் திரைப்பட விழாவில் மற்ற திரைப்படங்களோடு இணைந்து 'நீச்சா நகர்' திரைப்படத்திற்கு, சிறந்த திரைப்படத்திற்கான விருது கிடைத்தது. 1948இல் திரு. உதயசங்கரின் நளினமான 'கல்பனா' திரைப்படத்தில் மக்களுக்கு கிளுகிளுப்பூட்டும் நடனங்களுக்குப் பதிலாக நளினமான இசை நடனங்கள் இடம்பெற்றன. ஆனால், இந்தியாவின் மிகப்பெரிய திரைப்பட வெற்றி 1955இல் ஏற்பட்டது. அதுவும் சத்யஜித்ரே அவர்களாலேயே. ஆனால் இம்முறை திரைப்படத் தயாரிப்பாளராக.

திரு. சத்யஜித்ரே அவர்களின் வங்க மொழிப்படமான பதர்பாஞ்சலி இன்று வரை இந்திய திரைப்படத்துறையின் மிகப்பெரிய தாக்கமாகப் பார்க்கப்படுகிறது. இதுவே அன்றைய நிலையில் இந்தியத் திரைப்படத்துறையின் மிக உயர்ந்த பன்னாட்டு இலக்காக அமைந்து பிறகு, சிறந்த திரைப்படங்கள் இந்தியாவில் தோன்றின.

1950களில் பல இந்திய மொழிப்படங்கள், பன்னாட்டுத் திரைப்பட விழாக்களில் பங்குபெற்று நாட்டிற்குப் பெருமை சேர்த்தன. திரு. சத்யஜித்ரேயின் இரண்டாவது படமான அபராஜிதோ (பதர்பாஞ்சலியின் தொடர்ச்சியாக) வெனிஸ் பன்னாட்டுத் திரைப்பட விழாவில் தங்க சிங்கம் மற்றும் விமர்சகர்கள் விருது (இரண்டு விருதுகளையும் ஒருங்கே பெற்ற முதல் படம்) உள்ளிட்ட 11 பன்னாட்டு விருதுகளைப் பெற்றது. அதே ஆண்டு திரு. அமித் மைத்ரா



மற்றும் திரு. சோம்பு மித்ரா இருவரும் இணைந்து தயாரித்த வங்கமொழித் திரைப்படமான ஏக்தின் ராத்திரி, கார்லோவி வேரி பன்னாட்டுத் திரைப்பட விழாவில் 'கிரிஸ்டல் குளோப் கிராண்ட் ப்ரி' விருது பெற்றது. மற்றொரு வங்கமொழிப் படமான திரு.தபன் சின்ஹாவின் காபுலிவாலா அதே ஆண்டு திரைப்பட விழா மதிப்பீட்டாளர்களின் இசைக்கான 'சில்வர் பியர் எக்ஸ்ட்ராடினரி' விருதைப் பெற்றது. அடுத்த ஆண்டு பெர்லினில்



நடைபெற்ற திரைப்பட விழாவில் திரு.ஏ.சாந்தாராமின் ஹிந்திப் படமான தோ ஆங்கே பாரா ஹாத் திரைப்படவிழா மதிப்பீட்டாளர்களின் 'சில்வர் பியர் எக்ஸ்ட்ராடினரி' விருதைப் பெற்றது. 1950களில் வங்கமொழிப் படங்களில் காணப்பட்ட ஆழ்ந்த கருத்துக்களும், கலைநயமிக்க படைப்புகளும் இந்தியத் திரைப்படங்களின் துடிப்பான உருவாக்கலை வெளிப்படுத்தின.

இதே சமயத்தில் இந்திய அரசும், சில முக்கிய முடிவுகளை மேற்கொண்டது. 1951இல் அமைக்கப்பட்ட திரு. எஸ்.கே. பாட்டீல் திரைப்பட ஆய்வுக்குழுவின் பரிந்துரையின்படி, கலைநயமிக்க திரைப்படத் தயாரிப்பை ஊக்குவிக்கும் வண்ணம் 1960இல் திரைப்பட நிதி வாரியம் அமைக்கப்பட்டது (பிறகு தேசிய திரைப்பட மேம்பாட்டு வாரியமாக பெயர் மாற்றப்பட்டது). அதே ஆண்டு, புனேயிலுள்ள முந்தைய பிரபாத் ஸ்டுடியோ






https://www.tnpscthervuthunaivan.com/

வளாகத்தில் இந்தியத் திரைப்படக் கல்லூரி துவக்கப்பட்டது. நான்கு ஆண்டுகளுக்குப்பிறகு, இந்தியாவில் பழம்பெரும் திரைப்படங்களைப் பாதுகாத்து, சேமித்து வைக்க தேசியத் திரைப்பட ஆவணக் காப்பகம் ஒன்று அமைக்கப்பட்டது. இந்திய அரசின் இந்த முனைவுகள் பிரமாதமான விளைவுகளை அளித்தன. திரைப்பட நிதி வாரியத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட இரண்டு திரைப்படங்களான திரு. மிர்னால் சென்னின் புவன்ஷோ மற்றும் திரு.மணி கௌலின் உஸ்கி ரோட்டி 1969இல் இந்தியத் திரைப்படத்தில் புதிய மாற்றத்தை வெளிப்படுத்தின. திரு. கௌல் இந்திய திரைப்படக் கல்லூரியின் மாணவராவார். அவர் வழியில் திரு.குமார் சஹானி, திரு.அடூர் கோபாலகிருஷ்ணன், திரு. கிரிஷ் காசரவல்லி ஆகியோர் துணிச்சலான, துடிப்பான திரைப்படங்களைப் படைத்து, இந்தியத் திரைப்படத்தின் எல்லையை விரிவாக்கினர். திரைப்படச் சங்கங்கள் படம் பார்ப்போருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய நிலையில் (மேட்டுக்குடியினர் சிலருக்கு மட்டுமே) திரைப்படக்கல்லூரி முன்பு இல்லாத வகையில் தொழில்நுட்பப் பயிற்சியை வழங்கியது. திரைப்பட நிதி வாரியம், திரைப்படக்கல்லூரியில் பயின்றவர்களுக்கு மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கும் கலைநயமிக்க புதிய படைப்புகளை உருவாக்க வகை செய்தது.



இவை மூன்றும் ஒன்றோடொன்று இணைந்து, அவ்வப்போது வங்க மற்றும் ஹிந்தித் திரைப்படங்களில் ஏற்பட்ட முன்னேற்றங்களை 1969 முதல் பிற மொழித் திரைப்படங்களிலும் வெளிப்படுத்தின. அதுவரை, வணிகரீதியான படங்களையே எடுத்துவந்த மற்ற மொழிப்படங்களும், புதுமையான படங்களை எடுக்க ஆரம்பித்தன. இப்புதிய முனைவுகள் மராத்தி, கன்னடம், மலையாளம், மணிப்புரி, அஸ்ஸாமி மற்றும் ஒடியா மொழிகளில் பிரபலமடைந்தன. 1981இல் திரு. அரிபம் ஷ்யாம் ஷர்மாவால் உருவாக்கப்பட்ட



'இமாகி நிம்தேம்' வடகிழக்கு மாநிலங்களின் திரைப்படங்களை உலக அரங்கில் அரங்கேற்றியது. இப்படிப்பட்ட மேம்பாடுகளுடன் அடுத்த 20 ஆண்டுகளில் இந்தியத் திரைப்படங்களின் வீச்சு விஸ்தரித்தது. சமுதாயத்தில் காணப்பட்ட ஜாதி மற்றும் குறியீட்டு அரசியல் இவைகளில் வெளிப்பட்டன. ஆனால், கலைத்திரைப்படங்கள் என்று கூறப்பட்ட இவைகளுக்கு பார்வையாளர்கள் குறைவாகவே இருந்தனர். 1980களில் வன்முறை மற்றும் காம உணர்வுகளைத் தூண்டும் வணிகப்படங்கள்




மிகுதியாக வெளிவந்தன. 1970களின் மத்தியில் இந்தியத் திரைப்படங்களில் கோபமிக்க இளைஞன் தனக்கும், மற்றவர்களுக்குமான நீதிக்குப் போராடும் படங்கள் வெளிவந்தன. அப்போது இந்தியத் திரைப்பட வழங்கு மொழிகளில் இருட்டு உலகம் மற்றும் கும்பல்கள் என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டன. பிறகு 1987இல் வெளிவந்த மிஸ்டர் இந்தியா திரைப்படத்தில் 'மொஹாம்போ, குஷ் ஹுவா'வில் துவங்கி,, 1998இல் திரு. பிகுமைத்ரேயின் சத்யா திரைப்படத்தின் 'மும்பை கா கிங் கௌன்?' போன்ற வசனங்கள் வரை திரைப் படங்களில் ஒரு மாற்றம் ஏற்பட்டது.

1950களில் பெரும்பான்மையான படங்கள் நகர்ப்புறங்களிலுள்ள நிலைமைகளை மையமாக கொண்டன. அப்போது பெண்களின் நிலைமை பற்றிய படங்களும் வெளிவரத் துவங்கின. 1963இல் திரு. சத்யஜித்ரேயின் மஹாநகர் திரைப்படத்தில் நிச்சயமற்ற சூழ்நிலையில் வேலை செய்யும் பெண்களைப் பற்றியும், 1959இல் வெளிவந்த திரு. விமல்ராயின் சுஜாதா திரைப்படத்தின் தாழ்ந்த ஜாதி பெண்ணான அமைதியான கதாநாயகியும், 1982இல் உம்பரதா உருவகப்படுத்திய சாவித்ரி என்ற தன்னம்பிக்கையுள்ள பெண்ணும்,

https://www.tnpscthervuthunaivan.com/

பிறகு அதைப்போலவே 2014இல் குயின் என்ற திரைப்படத்தில் ராணியும் விளங்கினர்.

கடந்த 75 ஆண்டுகளில் இந்தியத் திரைப்படங்களில் நாட்டுப்பற்று சார்ந்த திரைப்படங்களும் மிகுந்து வெளிவந்தன. நாடு சுதந்திரமடைவதற்கு முன்பும், பின்பும் வெளிவந்த நாட்டுப்பற்று மிகுந்த திரைப்படங்களில் ஒன்றான 1957இல் வெளிவந்த மதர் இண்டியாவில் விடுதலையடைந்த புதிய நாட்டில் மேம்பாட்டுப் பணிகள் உருவகப்படுத்தப்பட்டன. அண்டை நாடுகளுடனான வெளியுறவு மோசமான நிலையில் எல்லை தாண்டிய தீவிரவாதங்களைத் தாங்கிய 1992இல் வெளிவந்த ரோஜா போன்ற திரைப்படங்கள் காணப்பட்டன. இந்த நூற்றாண்டின் துவக்கம் முதல் விளையாட்டுகளின் வழியாக இந்தியாவின் நாட்டுப்பற்று காட்டப்பட்டது. ஹிந்திப் படங்களான அனைத்திந்திய பார்வையாளர்களைப் பெற்ற லகான் (2001) , சக்தே இந்தியா (2007) மற்றும் பிரபல விளையாட்டு வீரர்களின் வாழ்க்கையை சித்தரிக்கும் படங்களும் வெளிவந்தன.


2022இல் வெளிவந்த ‘தி எலிபண்ட் விஸ்பரர்ஸ்’ என்ற இந்திய ஆவணப்படம் முதன்முறையாக 95வது அகாடமி விருதுகள் நிகழ்வில் சிறந்த குறு ஆவணப் படத்திற்கான அகாடமி




விருதைப் பெற்றது. ஆனால், இந்தியாவின் ஆவணப்படங்கள், குறும்படங்கள் மற்றும் அனிமேஷன் படங்கள் இடப் பற்றாக்குறையின் காரணமாக இந்தக் கட்டுரையில் இடம் பெறவில்லை. உலகளவில் மிக அதிக எண்ணிக்கையிலான படங்களை வெளியிட்டுள்ள இந்தியாவில் பல மாநில மொழிப் படங்களின் வரலாற்றைத் தொகுப்பது சிரமமான காரியம். 75 ஆண்டுகளுக்கு முன்பு,



பல்லாண்டுகள் நாடு எதிர்பார்த்த விடுதலை கிடைத்த போது ஏற்பட்ட மகிழ்ச்சி, அடுத்த சில ஆண்டுகளில் மறைந்து வெறுப்பும், வேதனையும்



ஏற்பட்டது. அதுவரை, திரைப்பட தயாரிப்பு, நடுத்தர வர்க்கத்தின் தொழிலாக இருந்தது. ஆனால், ஜாதி, மத, வர்க்க பேதமில்லாமல் நாடெங்கிலும் பார்க்கப்பட்டது. ஆனால், 75 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தியத் திரைப்படத்துறை



ஒரு முக்கியமான கட்டத்தில் நவீன தொழில்நுட்பத்தை அனைத்துலக அளவில் ஒரு பெரிய திரைப்படத்துறையாக மேம்பட உள்ளது.

இந்த நவீன உலகில் திரைப்படத் தயாரிப்பு மத்திய வர்க்கத்தினரின் தொழிலாகவே விளங்குகிறது. ஆனால், 70களில் உருவகப்படுத்தப்பட்ட நடுத்தர வர்க்கத்தின் கோபமும், இந்தியத் திரைப்படங்களில் காணப்பட்ட கோபமிக்க இளைஞன் மாறி இப்போது வெறுப்பு மனப்பான்மையும், நம்பிக்கையின்மையும் மிகுந்து காணப்படுகின்றன. 2010இல் வெளியான பீப்லி லைவ் மற்றும் 2017இல் வெளியான நியூட்டன் திரைப்படம் போன்றவை இந்த மத்திய வர்க்கத் திரைப்படைப்பாளிகளின் நம்பிக்கையின்மையை வெளிப்படுத்துபவையாக இருந்தன.

அடுத்த 25 ஆண்டுகளில் இந்தியத் திரைப்படத் தயாரிப்பில் புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படும் போது, ஒரு புதிய திரை மொழி உருவாக வாய்ப்புள்ளது. அப்போது புனைவுகளிலும் பெருத்த மாற்றம் ஏற்படும்.

---

**– அமிதவ நாக், திரைப்பட விமர்சகர், சில்ஹௌட்டி சினிமா இதழின் ஆசிரியர்.**



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# தமிழகப் பாரம்பரிய விளையாட்டுகள்

– வெ.பாலாம்பாள்

தமிழ்நாட்டில் ஏராளமான விளையாட்டுக்கள் ஆடப்படுகின்றன. முக்கியமான கட்ட விளையாட்டுக்களும், வெட்டு விளையாட்டுக்களும், ஒருவர் மட்டும் ஆடும் நட்சத்திர விளையாட்டும், பரமபதம், பல்லாங்குழி ஆட்டங்களும் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களாகும். இந்த கட்டுரையில் ஒரு சில முக்கியமான பாரம்பரிய அரங்க விளையாட்டுக்களை (போர்டு கேம்ஸ்) பற்றி மட்டும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

**முன்னுரை**

உண்ண உணவு, உடுக்க உடை, தங்குவதற்கு இருப்பிடம் ஆகியவை உலகில் வாழ்வதற்கு அடிப்படை தேவையானவை. காலம் போகப் போக தேவைகள் அதிகமாயின. அவற்றில் முக்கியமானவை விளையாட்டுக்கள். உடல் நலத்தைப் பேணுவதற்கு நல்ல உணவும், விளையாட்டுக்களும் தேவைபடுகின்றன. உடல் நலத்தைப் பாதுகாக்க விளையாட்டுக்களும், உடற்பயிற்சியும் முக்கியம். காலப்போக்கில் பல விளையாட்டுக்கள் பழக்கத்திற்கு வந்தன. இவற்றில் ஆர்வம் கொண்டவர்கள் தங்களுக்கு விருப்பமான விளையாட்டுக்களை ஆதரித்தனர். படிப்பறிவு இல்லாத கிராமப்புற மக்களும் பழக்கம் காரணமாக ஆட்ட விதிகளிலும், ஆட்ட முறைகளிலும் சிறந்து விளங்கினார். ஆரம்ப காலங்களில் பொழுதுபோக்கிற்காக ஆடப்பட்ட இவை , அந்தந்த பகுதிகளின் பாரம்பரிய விளையாட்டுக்களாயின.

விளையாட்டுகளில் பல வகைகள் உண்டு. அவைகளில் சில உடல் திறனுக்காகவும், வேறு சில அறிவுத்திறனை வெளிக்கொண்டு வருவதற்காகவும் ஆடப்படுகின்றன. சில வாய்ப்பு விளையாட்டுகளும் (Chance Games) உண்டு. சிறுவர்கள், பெண்கள், ஆண்களுக்கான தனி வகைப்பட்ட ஆட்டங்களும் ஆடப்படுகின்றன. பொழுது போக்கிற்காக ஆட ஆரம்பித்தவர்கள் பின்னால் போட்டிக்காகவும், விளையாடினர். சில கட்டங்களில் .காசு வைத்து ஆடும் வழக்கமும் ஏற்பட்டது.

தமிழ்நாட்டில் விளையாடப்படும் ஏராளமான விளையாட்டுக்களில் அரங்க விளையாட்டுக்கள் (Board Games ) முக்கியமானவை. அதில் கட்ட விளையாட்டுக்கள், கட்டமில்லாத ஆட்டங்கள், வெட்டும் ஆட்டங்கள், பரமபதம், கோடுகள், புள்ளிகள், கட்டங்கள் ஆகியவை கொண்ட விளையாட்டு அரங்கங்கள் (Game Boards), பல்லாங்குழி ஆகியவை வீட்டிலும், வெளியிலும் சுண்ணாம்பு, கரித்துண்டு ஆகியவற்றால் வரையப்படுகின்றன. ஆடுவதற்காகவும் (Game Pieces), வீசுவதற்காகவும் (Throwing Pieces) எளிதாகக் கிடைக்கக்கூடிய பொருள்களைப் பயன்படுத்துகின்றனர். சிறு கற்கள், ஓடுகள், பழக்கொட்டைகள ஆட்டக் காய்களாகவும், இரண்டாகப் பிளக்கப்பட்ட குச்சிகள் வீசுக்கட்டைகளாகவும் பயன்படும். பிற்காலத்தில் சோழிகள், மரம், மற்றும் உலோகத்தினாலான பகடைகள்(தாயக் கட்டைகள்) பயன்பட்டன. பகடைகளைக் கொண்டும், அவை இல்லாமலும் ஆடக்கூடிய விளையாட்டுக்களும் உள்ளன.



ஒரு சில முக்கியமான பாரம்பரிய அரங்க விளையாட்டுக்களை (போர்டு கேம்ஸ்) பற்றிய விஷயங்கள் மட்டும் இங்கு விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. கோயில் பிரகாரங்களிலும், தூண்களிலும், பொது இடங்களிலும் இவ்விளையாட்டுகள் பற்றிய விஷயங்கள் கிடைக்கின்றன. புறநானூறு, சிலப்பதிகாரம் போன்ற சில தமிழ் இலக்கியங்களிலும் சிறு சிறு குறிப்புகள் உள்ளன. பாரம்பரிய அரங்க மற்றும் அரங்கமில்லாத விளையாட்டுக்களிலும், கிராமிய இசை முக்கிய பங்கு பெறுகிறது. கிராம மக்கள் விளையாடும் போது அந்தந்த ஆட்டத்திற்குத் தகுந்தாற்போல் பாடி ஆட்டத்திற்குக் களையூட்டுகின்றனர், பொழுதைக் கழிக்கவென ஆடப்பட்ட விளையாட்டுக்கலில் காலப்போக்கில் பெரிய உருமாற்றம் ஏற்பட்டு, மக்களுக்கு பல நன்மைகளை உண்டாக்கும் உபகரணமாக அவை



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

மாறின. இந்தக் கட்டுரையில் தமிழ்நாட்டில் ஆடப்படும் எல்லா விளையாட்டுக்களையும் சேர்க்க இயலவில்லை. முக்கியமாக உள்ள கட்டம் சார்ந்த, வெட்டுக்கள் சார்ந்த அரங்க விளையாட்டுகளுக்கு (போர்டு கேம்ஸ்) முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

**கட்டம் அமைத்தல்:**

மிக எளிமையானதும், சுலபமானதும் ஆன விளையாட்டு இதுவாகும். இரண்டு பேர் முதல் நான்கு பேர் வரை விளையாடும் ஆட்டம். ஒரு காகிதத்தில் பென்சிலால் நிறைய புள்ளிகளை கொண்டோ, அல்லது தரையில் சுண்ணாம்பு அல்லது கரித்துண்டு கொண்டோ இந்த ஆட்ட அரங்கம் அமைக்கப்படும். முதலில் ஆடுபவர் புள்ளிகளில் ஏதேனும் இரண்டை ஒரு சிறிய கோட்டின் மூலம் இணைக்க வேண்டும். அடுத்து விளையாடுபவர்களும் தங்கள் ஆட்டம் வரும் போது இரண்டு புள்ளிகளை சிறு கோட்டால் இணைக்க வேண்டும். மாறி மாறி கோடுகள் இணைக்கப்படும் போது ஒரு நிலையில் அதனை ஒற்றைக் கோட்டினால் சதுரங்களாக இணைக்கக்கூடிய நிலை வரும். கோட்டினால் கட்டம் வென்றபின் அது தனது கட்டம் என்று மற்றவர் அறிய செய்ய தனது பெயரின் முதல் எழுத்தை அந்த கட்டத்தின் உள்ளே எழுதி விடுவார்கள். அறிவுத்திறனோடு விளையாடினால் ஒருவரே பல கட்டங்களுக்குச் சொந்தக்காரர் ஆகிவிடுவார். ஒவ்வொரு சுற்றிலும் கட்டங்கள் அமைக்கும் வரை விளையாடுவது அவரவர் திறமையைப் பொறுத்தது. அதற்குப்பின் அடுத்தவர்கள் இதே முறையில் விளையாடலாம். எல்லாப் புள்ளிகளையும் இணைத்து கட்டங்கள் அமைக்கும் வரை ஆட்டம் தொடரும். இறுதியில் அதிகமாகக் கட்டங்களைப் பெற்றவர் வெற்றி பெற்றவராவார். ஓய்வு நேரங்களில் இவ்விளையாட்டை சிறுவர் சிறுமியர் விருப்பத்தோடு விளையாடுவர்.

**வரிசைப்படுத்தும் கட்ட விளையாட்டுகள் :**

கிராமங்களில் இவ்விளையாட்டுகள் ஆடப்படுகின்றன. ஆட்ட அரங்கங்கள் அங்குள்ள கோயில் தரைகளிலும், கற்களிலும் செதுக்கப்பட்டிருக்கும். அவை இல்லாத இடங்களில் ஆட்டங்கள் வரையப்படும். இங்கே மூன்று முக்கியமான ஆட்டங்களை ஆடப்படலாம்.

1. மூன்று கோடுகளைக் கொண்ட இரண்டு கட்ட வரிசைகளை கொண்ட அரங்கம் வரையப்படும். இருவர் விளையாடும் ஆட்டம் இது. ஆட்டம் ஆடுபவர் இருவரும் எதிர் எதிரே அமர்ந்து கொள்வர். ஒவ்வொருவருக்கும் மூன்று காய்கள் உண்டு. எளிதாகக் கிடைக்கக்கூடிய சிறு கற்கள், பானை ஓடுகள்,விதைகள் ஆகியவை ஆட்டக் காய்களாகப் பயன்படும். கட்டத்தில் காய்கள் வைக்க ஒன்பது புள்ளிகள் (இடங்கள்) பயன்படும். ஒருவர் ஒரு புள்ளியில் காய் வைத்தால், அடுத்தவர் வேறொரு புள்ளியில் தனது காய் ஒன்றை வைக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொருவருக்கும் மூன்று சுற்று ஆகும் போது ஆறு புள்ளிகள் போக மூன்று புள்ளிகள் மிஞ்சும். அந்த மிஞ்சிய புள்ளிகளைப் பயன்படுத்தி ஆட்டக்காரர்கள் இருவரும் தங்கள் தங்கள் காய்களை ஒரு வரிசைக்குக் கொண்டு வரவேண்டும். அவ்வாறு முதலில் முடிப்பவர் வெற்றி பெற்றவராவார். சிறு விளையாட்டாக இருந்தாலும், இது ஒரு அறிவுத்திறன் விளையாட்டாகும்.

2. கட்டத்தில் சில வேறுபாடுகளைக்கொண்ட இந்த ஆட்டத்தில் முந்தைய ஆட்ட விதிகளே பின்பற்றப்படுகின்றன. பெரிய கட்டத்தில் இரண்டு மூலைக்கோடுகள் சேர்க்கப்படுகின்றன. நான்கு மூலைகளிலிருந்தும் காய்களை மத்தியப் புள்ளிக்குக் கொண்டு வர இந்த மூலைக்கோடுகள் பயன்படுகின்றன. மூலைக் கோடுகளில் மூன்று புள்ளிகளை இணைத்தாலும் அந்த ஆட்டக்காரர் வெற்றி பெற்றவராவார். முதல் கட்ட ஆட்டத்தில் நீளத்தில் மூன்றும், அகலத்தில் மூன்றுமாக ஆறு வழிகள் உள்ளன. மூலைக்கோடுகளில் இரண்டு சேர்க்கப்பட்டால் எட்டு வழிகள் கிடைக்க வாய்ப்புக்கள் கிடைக்கும்.

3. இருவர் விளையாடக்கூடிய இந்த மூன்றாவது கட்ட விளையாட்டில், நான்கு கோடுகளால் மூன்று கட்ட வரிசைகள் அமையுமாறு அரங்கம் அமைக்கப்பட்டு, ஆடும் ஒவ்வொருவருக்கும் நான்கு காய்கள் தரப்படும். காய்கள் வைப்பதற்கான புள்ளிகள் பதினாறு. முதல் கட்டத்தின் ஆட்ட விதிகள் இங்கும் பின்பற்றப்படுகிறது. ஒருவர் ஒரு புள்ளியில் தனது காயை வைத்தால், அடுத்தவர் தனது காய் ஒன்றை ஏதாவது புள்ளியில் வைக்க வேண்டும். இவ்வாறு இருவரும் முதல் நான்கு சுற்றுகளில் எட்டுப் புள்ளிகளில், இருவரின் காய்களையும் எட்டுப் புள்ளிகளில் வைத்த பின் மீதம் உள்ள எட்டுப் புள்ளிகளையும் இரண்டு ஆட்டக்காரர்களும் நகர்த்தலுக்கு பயன்படுத்தி தங்கள் நான்கு காய்களையும் வரிசைப்படுத்தலாம். முதலில்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/


இவ்வாறு வரிசை படுத்திய ஆட்டக்காரர் ஆட்டத்தில் வெற்றி பெற்றவராவார்.

**சிங்கம் :**

இது இருவர் ஆடும் ஆட்டம். ஒவ்வொருவருக்கும் நான்கு காய்கள். மிக எளிமையாகத் தோன்றினாலும், எதிராளியைச் சமாளிப்பது எவ்வளவு கடினம் என்பது ஆடும்போது புரியும். விளையாடுபவர்களுக்கு ஒரு நேரத்தில் ஒரு நகர்த்துதல் தான் உண்டு. தங்கள் ஆட்டம் வரும் போது தங்கள் காய்களை நகர்த்தி ஒரு வரிசைக்குக் கொண்டு வரவேண்டும். இந்த ஆட்டத்தில் ஆடுபவர்கள் ஒருவரை ஒருவர் வெட்டுவதோ, அல்லது தாண்டுவதோ இல்லை. வரிசை அமைப்பதைத் தடுக்கும் முயற்சியில் இருவருமே ஈடுபடுவர். யார் முதலில் தனது நான்கு காய்களையும் ஒரு வரிசைக்கு கொண்டு வருகிறாரோ,அவரே வெற்றி பெற்றவராவார். இந்த விளையாட்டில் அதிகமாகப் பங்கெடுத்துக் கொள்பவர்கள் ஆண்களே.

**தாயம்:**

தாயத்தில் பல விளையாட்டுகள் உள்ளன. பெண்கள் விரும்பி விளையாடும் இந்த ஆட்டங்கள் தனியாகவும் ஜோடி சேர்ந்தும் விளையாடப்படுகின்றன. இந்த விளையாட்டிற்கு வரையப்படும்




கட்டத்தை தாயக்கட்டம் என கூறுவர். வீட்டிற்கு உள்ளேயோ அல்லது வெளியிலோ சுண்ணாம்பு அல்லது கரித்துண்டினால் தாயகட்டம் வரையபடும். தற்காலத்தில் அட்டையிலோ, மரத்திலோ வரையப்பட்ட கட்டங்களில் ஆட்டங்கள் ஆடப்படுகின்றன. வெட்டு மற்றும் கட்ட விளையாட்டுக்கள் இணைந்த தாயக் கட்டம் போன்ற விளையாட்டுக்களும் ஆடப்படுகின்றன. அவற்றில் முக்கியமான சில ஆட்டங்கள் இங்கு கூறப்படுகின்றன. அவை 4 கட்ட தாயம், 8 கட்ட தாயம், 10 கட்ட தாயம் , தஞ்சாவூர் கட்டம், குரங்காட்டம் என்பவையாகும்.

**நாலு கட்ட தாயம் :**

இது நீளத்தில் 6 கோடுகளும், அகலத்தில் 6 கோடுகளும், பல மலைகளும் (X), கட்டத்தின் நடுவில் பழம் என்ற மலையையும் கொண்ட ஆட்டம். எல்லா கட்ட ஆட்டத்திலும் அநேகமாக விதிகள் ஒரே மாதிரி பின்பற்றப்படுகின்றன.

2 பேர் முதல், 4 பேர் வரை ஓர் ஆட்டத்தில் விளையாடலாம். ஆடுபவர் ஒவ்வொருவருக்கும் 4 காய்கள் உண்டு. சோழி, ஒரு புறம் தேய்த்த புளியங் கொட்டைகள், மரம் அல்லது உலோகத்தால் செய்யப்பட்ட தாயக் கட்டைகளை (பகடை) உருட்டி அதில் வரும் எண்ணிக்கைக்குத் தகுந்தாற் போல் காய்களை நகர்த்தலாம். அதற்கு முன்பாக, விளையாடுபவர் அனைவரும் தாயம் போட்டால் தான் காய்களை நகர்த்த முடியும். பகடையில் வீசப்பட்டு கிடைத்த எண்ணிக்கையின்படி ஒவ்வொருவரும் தங்கள் காய்களை நகர்த்தலாம். மலைகளில் தங்கி தங்கள் காய்களை வெட்டுப்படாமல் காப்பாற்றிக் கொள்ளலாம். வெளிச்சுற்று முடியும் முன் எதிரி காய்களில் ஏதேனும் ஒன்றை வெட்டினால் பழத்திற்கு செல்லும் வாய்ப்பு கிடைக்கும். மலைகளில் தங்கிய எதிரி ஆட்டக்காரர்களை வெட்ட முடியாது. வெட்டுபட்ட காய்கள், தாயம் போட்டு மீண்டும் ஆட்டத்தில் ஆரம்பத்திலிருந்து நுழைய வேண்டும். ஆட்ட விதிகளின் படி தாயம் போட்டு, மலையில் தங்கி, எதிரியை வெட்டி, மற்ற சுற்றுக்களை முடித்து, பழ மலைக்கு 4 காய்களையும் கொண்டு சென்ற ஆட்டக்காரர் முதலில் வென்றவராவார். தொடர்ந்து மற்றவர்கள் விளையாடலாம். கடைசியில் ஒருவர் மட்டும் வெட்டாமலோ,4 காய்களையும் பழ மலைக்கு கொண்டு செல்லாத நிலையில் இருக்க நேர்ந்தால், அவர் தோற்றவர் எனப்படுவார். இரண்டு பேர் விளையாடினால் ஒருவர் தோற்றும், மற்றவர் வெற்றி பெற்றும் ஆட்டம் முடியும். 4 பேர் ஆடினால் ஒருவர் பின் ஒருவராக வெற்றியை அடையலாம்.



**எட்டு கட்ட தாயம்.**

இந்த ஆட்டம் நீளத்தில் 8 கோடுகளையும், அகலத்தில் 8 கோடுகளையும் கொண்ட பல கட்டங்களையும், வரையப் பெற்ற ஒன்று. 4 பேர் ஆடும் இந்த ஆட்டத்தில் ஆட்டக்காரர் ஒவ்வொருவருக்கும் 6 காய்கள் உண்டு. எதிர் எதிரே உள்ளவர்கள் ஜோடி சேர்ந்து விளையாடுவதும்



https://www.tnpscthervuthunaivan.com/

உண்டு. பகடை, சோழி, ஒரு பக்கம் தேய்த்த புளியங்கொட்டை ஆகியவை எண்ணிக்கை தெரிவதற்காக ஆடும் பொழுது உருட்டப்படுகின்றன. தாயம் போட்டால் தான் காய்களை நகர்த்த முடியும். அதுபோல எதிரியின் காயை வெட்டினால் தான் பழமலைக்குச் செல்லமுடியும்.

ஆறு சோழிகளைப் பயன்படுத்தப்படும் முறை வருமாறு :. ஆறு சோழிகள் வெளிப்பக்கம் எண்ணிக்கை 12

சோழிகளையோ, பகடையையோ உருட்டும் போது 12, 1, 5 என்ற எண்ணிக்கைகள் கிடைத்தால் மறு ஆட்டம் உண்டு. எதிரியை வெட்டினாலும் மறு ஆட்டம் உண்டு. ஜோடி கட்டி விளையாடும் போது காய்களை நகர்த்தும் முறை வேறு மாதிரியானது. பகடையை வீசும் போது கிடைக்கும் இரட்டை எண்ணிக்கையால் மட்டுமே ஜோடிக் காய்களை நகர்த்த முடியும். நான்கு கட்ட தாயம் போன்றே தாயம் துவைவதில், மலையில் தங்குவதில், வெட்டுவதில், பழம் எடுப்பதில் ஆட்ட முறை உள்ளது. ஆறு காய்களை முதலில் பழ மலைக்குக் கொண்டு செல்லும் ஆட்டக்காரர் வெற்றி பெற்றவராவார். தேவை என்றால் ஆட்டத்தைத் தொடர்ந்து மேற்கொண்டு மற்றும் இருவர் வெல்லும் வரை விளையாடலாம்.

**பத்து கட்ட தாயம்.**

நீளத்தில் 10 கோடுகளும், அகலத்தில் 10 கோடுகளும், மலைகளும், மத்தியில் பழ மலையும் கொண்ட கட்ட விளையாட்டு இதுவாகும். 4 பேர்கள் ஆடக்கூடிய இதில் ஆளுக்கு 8 காய்கள் உண்டு. வீசுவதற்கு 8 சோழிகள் பயன்படுகின்றன. போடப்படும் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் காய்கள் நகர்த்தப்படும்.. தாயம் போட்டு துவங்குவது முக்கியம். ஜோடி சேர்ந்து விளையாடும் முறையும் பழக்கத்தில் உள்ளது. எதிரியை வெட்டினால் தான் பழமெடுக்க பழமலைக்குப் போக முடியும். ஆட்ட விதிமுறைகள் மற்ற கட்ட விளையாட்டுக்கள் போலவே உள்ளன. ஜோடி கட்டியும் ஆடலாம். ஜோடிக் காய்களை எதிரியின் ஜோடியால் மட்டுமே வெட்ட முடியும். யார் ஒருவர் தனது எல்லாக் காய்களையும் முதலில் பழ மலைக்குக் கொண்டு செல்கிறாரோ அவரே வெற்றி பெற்றவராவார்.

கட்ட விளையாட்டுக்களின் முன்னோடியாக சதுரங்கத்தை கூறலாம். உலகெங்கும் பிரபலமான சதுரங்கம் (செஸ்) எனப்படும் நான்கு கைகளை (4 handed ) கொண்ட இந்தக் கட்ட விளையாட்டு இந்தியாவில் தான் முதலில் ஆடப்பட்டது.

அக்பர் என்ற முகலாய அரசர் கட்ட விளையாட்டைப் பெரிதும் விரும்பினார். தான் புதிதாக டில்லியில் நிர்மாணித்த பதேபூர் சிக்ரி என்ற இடத்தில் கட்டிய அந்தப்புரத்திற்கு அருகில் உள்ள பெரிய திறந்தவெளிக் கூடத்தில் கட்ட விளையாட்டு அரங்கத்தை நிரந்தரமாக வரைந்து, அதில் கட்டங்களில் அவரது அடிமைப் பெண்களைக் காய்களாகப் பயன்படுத்தி இந்த ஆட்டம் ஆடப்பட்டது. பகடை உருட்டி அதில் வரும் எண்ணிக்கைக்கு தகுந்தாற்போல் பெண்களை நகர்த்தி விளையாடினார். அந்தக் கட்ட விளையாட்டு அரங்கத்தை இன்றும் அந்த இடத்தில் காணலாம்.

பல கோயில்களிலும், தூண்களிலும், அரங்குகளிலும் செதுக்கப்பட்டுள்ள பல கட்ட ஆட்டங்களை இன்றும் காணலாம்.

**தஞ்சாவூர் கட்டம்:**

மிக்க ஆர்வத்துடன் விளையாடப்படும் ஒரு விளையாட்டு தஞ்சாவூர் கட்டமாகும்

இந்த விளையாட்டின் கட்டமைப்பு அழகானது. நான்கு கைகள் கொண்ட இந்த விளையாட்டில் ஒவ்வொருவரின் கையிலும் மூன்று வரிசை கட்டங்கள் சில மலைகளோடு அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆட்டத்தின் விதிமுறைகள் மற்ற கட்ட விளையாட்டுக்கள் போன்றே உள்ளன.


இதில் 4 பேர் தனித்தனியாகவும், ஜோடி சேர்ந்தும் ஆடலாம். தனியாக விளையாடுவதற்கு ஆளுக்கு 4 அல்லது 6 காய்கள் உண்டு. ஆட்ட விதிகள் மற்ற கட்ட விளையாட்டு போலவே இருக்கும். இந்த வீசு காய்கள் நகர்த்த வேண்டிய எண்ணிக்கைகளைக் காட்டும். காய்களாகப் பயன்படுகின்றன. ஒவ்வொருவரும் தாயம் போட்டு தான் ஆட்டத்தைத் தொடங்க வேண்டும். தாயமும், அடுத்து ஐந்தும் போட்டால், ஆறு காய்களையும் துவயலாம். அவரவர் கையின் நடு வரிசை ஒவ்வொருவர் பிறந்த வீடாகும். அதற்குள்ளாக மற்ற யாரும் நுழைய முடியாது.அங்கு வெட்டுதலும் நடக்கக்கூடாது. மற்ற மலைகளில் யார் வேண்டுமானாலும் தங்கலாம். வெளிக்கட்டங்களில் மலைகள் தவிர மற்ற கட்டங்களில் வெட்டலாம். நான்கு மூலைகளிலும் நான்கு மலைகள் உள்ளன. அவை மூலை மலைகள் எனப்படும். சில ஆட்டங்களில் இந்த மூலை மலையில் ஒரு காய் இருந்தால், மற்ற யாருடைய காய்களும் தங்கக்கூடாது என்பது ஆட்டத்தின் சட்டம். அப்படி இருந்தால், அந்த மூலைக்காரர் தன் காய்களை

https://www.tnpscthervuthunaivan.com/

வெட்டுப்படாமல் பாதுகாக்க முடியும். வெட்டிலிருந்து காய்களைக் காக்க சிலர் இந்த முறையைப் பின்பற்றுகின்றனர். அறிவுத்திறன் உள்ளவர்கள் தங்கள் காய்களைக் காக்க மூலை மலைகளை அடைய முற்படுவர். எதிரியின் காயை வெட்டாமல் பழத்துக்காக கொம்பேற முடியாது. மலைகளில் இருக்கும் காய்களையும் யாரும், எப்போதும் வெட்ட முடியாது.

தாயம் போட்டு துவைந்து, தனது கையின் நடுவரிசை வழியாக இறங்கிச் செல்லும் போது எதிரியின் காயை வெட்டிவிட்டு பத்திரமாக முழு சுற்றும் வந்த ஆட்டக்காரர் தன் கையின் மூன்றாவது வரிசையின் பக்கவழியாகப் பழம் எடுக்க கொம்பேற வேண்டும். ஒரு சிலர் அவ்வாறு கொம்பேறும் போது டொக்கில் வந்து நிற்கும் நிலை வரலாம். அப்போது தாயம் போட்டால் தான் அந்த பழக்காயை எதிராளி வெட்ட முடியும். ஆனால் அவர் தாயம் போட்டு மீண்டு வரலாம்.ஜோடி சேர்வதன் மூலம் வெட்டுக்களைத் தவிர்க்கலாம். எதிரியும் ஜோடி சேர்ந்தால் தான் எதிரியை வெட்ட முடியும். உற்சாகமாக ஆடப்படும் ஒரு ஆட்டம் இதுவாகும்.

வீட்டு விசேஷங்களின் போது நிறைய பேர் விளையாட விரும்பினால் நான்கு கைகளுக்கு பதிலாக பதினாறு கைகள் வரை வரைந்து 16 பேர் விளையாடலாம். இந்த ஆட்டம் முடிய நிறைய நேரமாகும். விளையாடுபவர்களுக்குத் தேவையான உணவுகளைத் தயாரிக்கும் பொறுப்பு அந்த வீட்டுப் பெண்களைச் சாரும்.



**குரங்காட்டம்:**

இந்த ஆட்டக் கட்டத்தை வரைவது சற்று கடினமானது. ஆயினும் ஆட்டம் இனிதாக இருக்கும். இந்தக் கட்டங்களின் அமைப்பின் நடுவில் தலை உருவமும், தலைக்குக் கீழ் இரண்டு கைகளின் அமைப்பும் உள்ளது. இது குரங்கு போல் இருப்பதால் குரங்காட்டம் எனப்படுகிறது. இரண்டு பேர் பங்கெடுக்கும் இந்த விளையாட்டில், ஆளுக்கு 12 காய்கள் உண்டு, 6 சோழிகள் ஆட்டத்தில் வீசப்பட்டு கிடைக்கும் எண்ணிக்கையைக் கொண்டு காய்கள் நகர்த்தப்படுகின்றன. சோழிகளின் எண்ணிக்கை 8 கட்டத் தாயத்தில் கணக்கிடப்படுவது போல் கணக்கிடப்படுகின்றது.

தாயம் போட்டு தான் ஆட்டம் துவங்கப்படும். துவையும் இடத்தில் உள்ள இரண்டு ஆட்டக்காரர்களுக்கும் தனித்தனியாக ஐந்து கட்டங்களும், ஒரு மலையும் உண்டு. இவை அவர்களின் பிறந்த வீடாகக் கருதப்படுகிறது. எதிர் ஆட்டக்காரர்கள் மற்றவரின் பிறந்த வீட்டிற்குள் நுழைய அனுமதி இல்லை. இரண்டு பகுதிகளாக கட்டங்கள் இருப்பதால் ஒருவர் இடமிருந்து வலமாகவும், மற்றவர் வலத்திலிருந்து இடமாகவும் தங்கள் காய்களை நகர்த்த வேண்டும். இந்த ஆட்டத்தில் மலைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஒருவர் எந்த மலையில் இருந்தாலும், அந்த மலையில் அடுத்தவர் தங்க முடியாது.காய்களை வெட்டுவதிலும், மலைகளைப் பிடிப்பதிலும் ஆட்டக்காரர்கள் கவனம் செலுத்துவர். மலைகளை பிடிப்பதால் எதிரி பற்றிய பயம் குறையும். வெளிச்சுற்றுக் கட்டங்களை இரண்டு ஆட்டக்காரரும் முடித்தபின் ,

கைப் பகுதிக்குச் செல்லலாம். ஆனால் அங்கு வெட்டுதல் நடைபெற முடியாது. ஏனெனில் ஒருவரின் கைப் பகுதிக்குள் மற்றவர் நுழைய அனுமதி இல்லை. யார் ஒருவர் கீழ் சுற்றில் உள்ள அவரது பக்கக் கட்டங்களையும், வெட்டுகளையும் தாண்டி தானும் வெட்டிவிட்டுச் செல்கிறாரோ, அவர் தனது கைப் பகுதியின் உள்ளே நுழையலாம். கைப் பகுதிக்கு வந்த காய்கள் நிம்மதியாக விளையாடலாம். இறுதி வரை வந்து, முதலில் எல்லாக் காய்களையும் பழத்துக்குக் கொண்டு செல்லும் ஆட்டக்காரர் வெற்றி பெற்றவராவார்.

**பரமபதம் (பாம்பும் ஏணியும்)**

பன்னெடுங்காலமாக உலக நாடுகளில் பொழுதுபோக்கிற்காக ஆடப்படும் ஒரு விளையாட்டு இதுவாகும். அதிகமாகப் பெண்களும், சிறுவர், சிறுமியரும் ஆடும் ஆட்டமாகும். இந்த ஆட்டத்தின் வரைபடம் வித்தியாசமானது. பெரும்பாலும் மற்ற நாடுகளில் ஆட்ட அரங்கம் வெள்ளை மற்றும் கருப்புக் கட்டங்களையும், பாம்புகள் ஏணிகளையும் கொண்டதாக இருக்கும். ஆனால், தமிழகப் பரமபத ஆட்ட அரங்கில் பாம்பு ஏணிகள்




https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

தவிர உள்ள ஒவ்வொரு கட்டமும் அர்த்தமுள்ளதாக இருக்கும். இந்த ஆட்டத்தின் சிறப்பு இதுதான். பாம்பு சம்பந்தப்பட்ட கட்டங்களில் உள்ள படங்கள் எதிர்மறை அர்த்தமுள்ள விஷயங்களாக இருக்கும். ஆனால், ஏணி சம்பந்தப்பட்ட கட்டங்களில் உள்ளவை நல்ல விஷயங்களாக மட்டுமே இருக்கும்.

இதில் எவ்வளவு பேர் வேண்டுமானாலும் விளையாடலாம். ஒருவருக்கு ஒரு காய் உண்டு. சோழி அல்லது தாயகட்டை அல்லது சோழியை உருட்டி,




தாயம் விழுந்தால் மட்டுமே தனது காயை ஆட ஆரம்பிக்கலாம். தாயம் விழாவிட்டால் அடுத்த நபர் விளையாடலாம். தாயம் போட்ட ஆட்டக்காரர்கள் தொடர்ந்து மற்ற சுற்றுகளிலும் தங்களின் காயை எண்ணிக்கைக்குத் தகுந்தாற் போல் நகர்த்தலாம். அவ்வாறு செல்லும் வழியில் ஒருவரின் காய் பாம்பின் தலையில் இருக்க நேர்ந்தால் சர சர வென்று அந்த பாம்பின் வால் இருக்கும் கடைசி கட்டத்துக்கு இறங்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். அதற்கு மாறாக ஒருவரின் காய் ஒரு ஏணியின் கீழ் பகுதிக்கு வர நேர்ந்தால் அவரது காய் சர சரவென்று அந்த ஏணியின் மேல் பகுதிக்கு சென்று விடும். எல்லாக் கட்டங்களையும் தாண்டி மேல் வரிசைக்கு வந்த காய்கள் அங்கே உள்ள பத்துப் படங்களையும் தாண்ட வேண்டுமென்றால், ஒவ்வொரு படத்திற்கும் ஒரு தாயம் போட்டால் தான், அடுத்த இடத்திற்கு நகர முடியும். ஒவ்வொரு ஆட்டத்திற்கும் ஒன்றாக பத்து தாயத்தை போட்டு கணக்கை முடிக்கலாம். பத்து தாயங்களைப் போட்டு ஆட்டத்தை முதலில் முடிக்கிறவர் ஆட்டத்தில் முதல் நிலை வெற்றி பெற்றவராவார். விருப்பம் உள்ளவரையிலோ அல்லது மற்ற ஆட்டக்காரர்கள் தங்களது ஆட்டத்தை முடிக்கும் வரையோ இந்த விளையாட்டைத் தொடரலாம்.

பரமபத ஆட்டம் இந்தியக் கலாசாரத்தை விளக்குகிறது. இந்துக்களுக்கு மறுபிறப்பு மீதுள்ள நம்பிக்கையை பாம்பின் இறங்கு நிலை ஆட்டத்தையும் , பிறகு இறங்கிய இடத்திலிருந்து மீண்டும் தொடங்குவதையும் கூறுகிறது. கர்ம வினை தொடரும் என்ற நம்பிக்கை அறியப்படுகிறது. இந்தியக் கலாசாரத்தை நம்புபவர்கள், கர்மவினை, மறுபிறப்பு விதிகளை நம்புகின்றனர். இந்துக்களின் பண்டிகைகளான மஹாசிவரத்திரி, மற்றும் வைகுண்ட ஏகாதசி நாட்களில் விரதம் இருந்து, பூஜை, அபிஷேகம் செய்து முடித்து, இரவு கண் விழித்து கடவுளை வழிபடுகின்றனர். அன்று பகல், இரவு நேரங்களில் வீட்டில் இருப்பவர்கள் பரமபதம் விளையாடும் வழக்கம் உள்ளது. சிறுவர்களும், பெண்களும், முதியோர்களும் விரும்பி ஆடும் ஆட்டமாக பரமபதம் உள்ளது.

**பல்லாங்குழி**

பல்லாங்குழி ஆட்டம் பன்னாங்குழி என்றும் கூறப்படுகிறது. பல வேறு ஆட்டங்கள் இந்த பலகையில் ஆடப்படுகின்றன. கிராமபுறங்களில் இது பாண்டி ஆட்டம் எனப்படுகிறது. அது ஏன் என்று தெரியவில்லை. வயல்களில் வேலை செய்யும் பெண்கள் தங்களின் ஓய்வு நேரத்தில் பல்லாங்குழி பலகையப் போல மரத்தின் கீழ் குழி தோண்டி, கையில் கிடைக்கும் கற்களைப் போட்டு விளையாடுவார்கள். இடையில் மீண்டும் வேலைக்குச் செல்ல வேண்டி இருந்தால் அப்படியே விட்டுவிட்டுச் செல்வார்கள்.

பல்லாங்குழியின் இரண்டு பக்கத்திலும், பக்கத்திற்கு ஏழு குழிகள் உள்ளன. பல்வேறு நாடுகளில் பல்வேறு விதமான பல்லாங்குழிப் பலகைகளும், காய்களும் பயன்படுத்தபடுகின்றன. தமிழகத்தில் ஆடப்படும் பலகைகளில் ஒவ்வொரு குழியிலும் நாலு அல்லது ஐந்து அல்லது ஆறு அல்லது பன்னிரெண்டு காய்கள் போடப்படுகின்றன. இரண்டு பேர் ஆடினால் ஆளுக்கு ஏழு குழிகளும், மூன்று பேர் ஆடினால் ஆளுக்கு நாலு குழிகளும் உண்டு. சாதாரணமாக இரண்டு பேர் விளையாடுகின்றனர். ஆட்டக் காய்களாக கற்கள், குன்றிமணி,



சோழி, புளியங்கொட்டை ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. 4 காய்கள் கொண்டது அரி சிப்பாண்டி என்றும், 5 காய்கள் கொண்டது பசுப்பாண்டி என்றும், 12 காய்கள் கொண்டது காசிப்பாண்டி என்றும் கூறப்படுகிறது. 6 காய்கள் போட்டும் விளயாடலாம். பெரும்பாலும் 5 காய்கள் போட்ட ஆட்டமே ஆடப்படுகிறது.



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

முதலில் ஆடுபவர் தனது வரிசைக் குழி ஒன்றிலிருந்து காய்களை எடுத்துப் பிரித்திட வேண்டும். காய்கள் முடிந்த குழிக்கு அடுத்த குழியில் உள்ள காய்களை எடுத்துப் பிரித்துப் போட வேண்டும். ஒரு குழி வெறுமையாக இருந்தால் அதற்கு அடுத்த குழியில் உள்ள காயை எடுத்துக் கொள்ளலாம். தடவி எடுத்தல் என இதைக் கூறுவர். சில ஆட்டங்களில் தடவி எடுத்த குழிக்கு எதிராக உள்ள குழியிலிருந்து காய்களை எடுத்துக் கொள்ளலாம். பிரித்து போட்ட குழிகளில் புதிதாக காய்கள் சேரலாம். அவ்வாறு 4 காய்கள் சேர்ந்தால் அதை குழிக்காரர் எடுத்துக் கொள்ளலாம். அது பசு என்று கூறப்படும். 12 காய் பூட்டும் ஆட்டம் என்றால் ஆறு காய்கள் சேர்ந்தால் பசு. ஓர் ஆட்டத்தின் முடிவில் இருவரில் ஒருவருக்கு அடுத்த ஆட்டத்திற்கு பூட்டுவதற்குத் தேவையான காய்களுக்கு மேலான காய்கள் கிடைக்கும். அவர் வெற்றி பெற்றவராவார். தங்கள் குழிக்குத் தேவையான காய்கள் இல்லாதவர் தோற்றவராவர். தொடர்ந்து விளையாடி பயிற்சி பெற்ற ஆட்டக்காரர்களுக்கு எந்தக் குழியிலிருந்து காய் எடுத்தால் என்ன கிடைக்கும், லாபமா, நஷ்டமா என்று தெரியவரும். சில ஆப்பிரிக்க நாடுகளில் பல்லாங்குழி தேசிய விளையாட்டாக உள்ளது. பள்ளிகளில் ஆரம்ப வகுப்புகளில் கணக்குப் பாடம் சொல்லித் தர பல்லாங்குழியைப் பயன்படுத்துகிறார்கள். மனவளர்ச்சி குன்றியவர்களின் முன்னேற்றத்திற்கும் இவ்விளையாட்டு துணைபுரிகிறது.

திருநெல்வேலியில் ஷபி இனத்தை சேர்ந்த முஸ்லிம்கள் நாணயங்களை காய்களாகப் போட்டு விளையாடுகின்றனர். இந்துக்களின் திருமணச் சடங்குகளிலும் பல்லாங்குழி இடம் பெற்றுள்ளது. இதில் போடும் காசுகளை பெண் வீட்டார் கொடுக்க வேண்டும். சீர் வரிசையிலும் பல்லாங்குழி இடம் பெறுகிறது. இரவில் விளையாடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று கூறப்படுகிறது. குழிகளைச் சதுரங்க ஆட்டம் போல் துடைத்தால், அது போல வீடும் துடைத்து போகும் என்று நம்பினர்.

சிலப்பதிகார உரையில் அடியார்க்குநல்லார் பல்லாங்குழி பற்றி கூறியுள்ளார். தமிழகத்தில் ஆடப்படும் பல்லாங்குழி ஆட்டம் ஆடுவதற்கு எளிதாகவும், சுவையாகவும் உள்ளன. அவை பசுப்பாண்டி, சரிப்பாண்டி, எதிர்ப்பாண்டி, இராஜபாண்டி, தாய்ச்சிப்பாண்டி, அரிசிப்பாண்டி, காசிப்பாண்டி, கட்டுப்பாண்டி, சீதைப் பாண்டி எனப் பல வகைப்படும்

ஒவ்வொரு ஆட்டத்திற்கும் தனித்தனி ஆட்ட விதிமுறைகள் உள்ளன. ஆட்டங்களின் காய்கள் கிடைக்கும் வசதியை பொறுத்துள்ளது. படிப்பறிவு இல்லாத கிராமப்புற மக்கள் கூட விதிமுறைகளை நன்கு அறிந்து, அவற்றைப் பின்பற்றி ஆடுகின்றனர். நம் நாட்டில் பாரம்பரிய விளையாட்டுகள் பற்றிய கண்ணோட்டம் தற்போது தான் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. மக்கள் கொடுக்கும் உற்சாகத்தைப் பொருத்து நாம் முன்னேற வாய்ப்புண்டு.

**வெட்டு விளையாட்டுக்கள் :**

கட்ட விளையாட்டுக்கள் போன்றே பல வெட்டு விளையாட்டுகளும் தமிழ் நாட்டில் ஆடப்படுகின்றன. ஒருவர், இருவர், நால்வர் விளையாடக்கூடிய வெட்டு விளையாட்டுக்கள் உள்ளன. அவை நட்சத்திர விளையாட்டு, பலவகையான போர் விளையாட்டுகள் (படைவெட்டு), ஆடுபுலி ஆட்டம் ஆகியவை. அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்,

**நட்சத்திர விளையாட்டு**

இது ஒருவர் மட்டும் பங்கு கொண்டு ஆடும் ஆட்டமாகும். நட்சத்திர வடிவான கோடுகள் அமைக்கப்பட்டிருக்கும். காய்கள் வைக்கும் இடங்கள் 10 இருக்கும். விளையாடுபவரின் காய்கள் 9 ஆகும். காய் வைக்க 10 இடங்களில் (புள்ளிகள்) 9 இடங்களுக்கு காய்கள் வைக்கப்பட்டிருக்கும். மீதமுள்ள ஒரு இடம் நகர்த்துவதற்கு உதவியாக இருக்கும். இந்த ஆட்டத்தின் முக்கிய விதி என்னவென்றால் ஆட்டத்தை ஆடுபவர் (ஒருவர் மட்டுமே) வரையறுக்கப்பட்ட நேரத்திற்குள் காய்களை நகர்த்தும் விதத்தில் நகர்த்தி 8 காய்களை வெட்டி எடுத்து விட வேண்டும். இறுதியில் மிச்சம் ஒரு காய் இருக்குமாறு செய்ய வேண்டும். அப்பொழுது தான் அவர் வென்றவர் ஆவார். விளையாடுபவரைச் சுற்றியுள்ளவர்கள், யார் வெற்றி அடைவார் என்று தங்களுக்குள் பந்தயம் கட்க்டி கொள்வர். இது மாசி கட்டுதல் எனப்படும். குறித்த நேரத்திற்குள் ஆட்டத்தை முடிப்பது தான் முக்கியம். எளிதான, ஆனால் சுவாரஸ்யமான ஒரு விளையாட்டு நட்சத்திர விளையாட்டு.

**பதினைந்தாம் புலி அல்லது ஆடு-புலி ஆட்டம்**

இந்த விளையாட்டில் 2 பேர் பங்கு பெறுவர். ஒருவர் புலி, மற்றொருவர் ஆடு என அழைக்கப்படுபவர். 3




https://www.tnpscthervuthunaivan.com/


https://www.tnpscthervuthunaivan.com/

புலிகளும் 15 ஆடுகள் கொண்ட இந்த விளையாட்டில் காய்களை நகர்த்துவதன் மூலம் புலியால் வெட்டுப்பட வேண்டும். வெட்டும் அதிகாரம் ஆடுகளுக்குக் கிடையாது. அடிக்கோட்டில் இருக்கும் ஆடுகளையும் புலிகளால் வெட்ட முடியாது. அவை எவ்வாறாவது புலிகளை நகர விடாமல் அடைத்து விட்டால் அவைகளின் வெற்றி நிச்சயம். புலிகள் ஆட்டப் பலகையின் மேல் பகுதியிலும், ஆடுகள் கீழ்ப்பகுதியிலும் இருப்பது அவர்களுக்குப் பாதுகாப்பைத் தரும்.

முக்கியமாக ஆடவர் மிகுந்த ஆர்வத்துடன் போட்டியில் கலந்து கொள்வர். ஓய்வு நேரங்களில் வீட்டிலும், வெளியிலும் ஆடும் ஒரு விளையாட்டாக இது உள்ளது. இரண்டு பேர் விளையாடினாலும் ஆட்டத்தின் சுவாரசியத்தால், பலர் சுற்றி நின்று விளையாட்டைப் பார்வையிடுவர். கிராமங்களிலும் மக்கள் கூடும் இடங்களிலும், கோயில்களிலும் இவ்விளையாட்டுக்கான கட்டம்




அமைக்கப்பட்டு விருப்பம் உள்ளோர் எப்பொழுது வேண்டுமானாலும் விளையாடலாம் என்ற வழக்கம் பழங்காலத்திலிருந்து உண்டு. இன்றும் இவ்விளையாட்டுக்களின் வரைபடங்களை கோயில்களில் காணலாம். இந்த விளையாட்டை ஆடுபவர்கள் சதுரங்கத்தை விட (செஸ்), ஆடுபுலி ஆட்டம் சுவாரஸ்யமானது என்று கூறுவர்.



ஆடாக விளையாடுபவர் 15 காய்களையும் புலியானவர் 3 காய்களையும் வைத்திருப்பர். எந்த மாதிரியான காய்கள் கிடைக்குமோ, அதை விளையாட உபயோகிக்கலாம். இவ்விளையாட்டில் காய்களை நகர்த்தும் புள்ளிகள் இருபத்து மூன்று இருக்கும். ஆடாக இருப்பவர் கட்டத்தில் ஏதாவது ஒரு புள்ளியில் ஒரு காய் வைக்க வேண்டும். பதிலுக்கு புலியாக இருப்பவர் தன் ஒரு காயை ஏதேனும் ஒரு புள்ளியில் வைக்க வேண்டும். பதினைந்து ஆடுகளும் களத்தில் இறங்கிய பின், தனது காய்கள் வெட்டுப்படுவதிலிருந்து காப்பாற்றிக் கொள்ள முயல வேண்டும். அதோடு மட்டுமின்றி புலிகள் நகர முடியாதபடி அவற்றை அடைக்க முயல வேண்டும். இவ்வாறு தொடர்ந்து வைத்து வந்தால் புலியாக ஆடுபவர் தனது மூன்று காய்களையும் வைத்த பின், நாலாவது சுற்றில் ஆடு மட்டும் புள்ளியில் இறங்கும். புலி தன் மூன்று காய்களில் ஒன்றை ஏதேனும் புள்ளிக்கு மாற்றலாம் . முடிந்தால் ஆட்டை வெட்ட முயற்சி செய்யலாம். ஆட்ட விதிப்படி 15 சுற்றுகளுக்குப் பிறகு, தனது 15 காய்களை தனக்கு வேண்டிய வகையில் புலிகளை அடைக்க என்ன ஆட்டம் ஆட வேண்டுமோ அவ்வாறு ஆடலாம். ஒரு காய் வைக்கும் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் காய்களை இடம் மாற்றி வைப்பது நகர்த்துதல் எனப்படும்.

ஒரு காய் வைக்கும் இடத்திலிருந்து ஒரு இடம் தள்ளி எதிரியின் காய் இருந்தால் அந்த இடத்தை நோக்கி காயைத் தூக்கி வைக்கலாம். இடைப்பட்ட இடத்தில் உள்ள காயை வெட்டி எடுத்து விட வேண்டும். இது வெட்டுதல் என கூறப்படும். இவ்வாறு தான் வெட்டுப்படாமலும், எதிரியின் காய்களை அடைப்பதிலும் குறியாய் இருந்து காய்களை நகர்த்தி வர வேண்டும்.

புலியின் காய்கள் மேற்பகுதியில் இருந்தால் பாதுகாப்பாக இருக்கும். மேல் பகுதியிலும் கீழ்ப்பகுதியிலும் பாதுகாப்பாக காய்களை நகர்த்தி சமயம் பார்த்து ஆடுகளை வெட்ட வேண்டும். கீழ் கட்டங்களில் புலியின் காய்கள் இருக்குமேயானால் ஆடாக இருப்பவர் அதை மேல் பகுதியில் நகர்த்த முடியாதவாறு அடைக்க முற்பட வேண்டும். மற்ற சுற்றுகளிலும் புலியை நகர்த்த முடியாதவாறு தங்கள் காய்களை அடைப்பாக்கிவிட வேண்டும். புலிகள் அடைக்கப்பட்டதால் ஆடாக இருப்பவர் வெற்றி பெற்றவர் ஆவார். புலி சுற்றி வரும் காய்களின் இயக்கத்தை கவனமாகக் கண்காணித்து தனது காய்களை அடைபட விடாமலும், எதிரியின் காய்களை வெட்டியும் முடித்து விட்டால் புலியாக ஆடுபவர் வென்றவராவார்.

### படைவெட்டு


இரண்டு பேர் விளையாடும் வெட்டு விளையாட்டு படைவெட்டாகும். தாயம், ஆடு புலி



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

ஆட்டம், நட்சத்திர விளையாட்டு, பல்லாங்குழி ஆகியவை பல கோவில்களின் பிரகாரங்களில் வரையப்பட்டு எப்பொழுது வேண்டுமானாலும் அங்கு வரும் மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் இருக்கும். இரண்டு பேர் ஆடக்கூடிய இந்த விளையாட்டுப் பலகையில் (அரங்கத்தில் ) 48 புள்ளிகள் இருக்கும். ஒவ்வொருவருக்கும் 24 காய்கள் உண்டு. முதலில் ஆடுபவர் தனது காயை வெட்டுக் கொடுக்க வேண்டும். மாறி மாறி விளையாடும் போது தங்களது காய்களை வெட்டுக் கொடுக்காமல் எதிர் காயை வெட்டுவதில் மிக கவனமாக இருக்க வேண்டும். ஒரு காயினை எடுத்து ஒரு புள்ளி தள்ளி காய் இல்லாத அடுத்தப் புள்ளியில் வைக்கும் போது நடுவில் உள்ள புள்ளியில் இருக்கும் காய் வெட்டப்படும். காய்களை வெட்டிய பின் அவற்றை தங்களது பக்கத்தில் வைத்துக் கொள்வர். உள்ளே இறங்கி வெட்டியும் தப்பித்தும் எதிரியின்



காய்களை எதிர்த்துச் செல்வதன் மூலமும் பல வெட்டுகள் சாத்தியம் ஆகும். எதிரியுடன் குறைந்த காய்கள் இருக்கும். ஆனால் அவற்றை மூலைகளில் அடைத்து, அவை வெளியே வர முயலும் போது அவற்றை வெட்டுவது எளிதாகும். அடைக்கப்பட்ட காய்களில் ஒன்றிரண்டை வெட்டுக் கொடுத்தாவது வெளியே வர செய்யலாம். மூலைப் பக்கம் வெட்டுவது சுலபமாக இருக்கும். திறம்பட காய்களை நகர்த்திச் சென்றால் வெற்றி பெற வாய்ப்புண்டு. யார் முதலில் மற்றவரின் காய்களை வெட்டி முடிக்கிறாரோ, அவர் ஆட்டத்தில் வெற்றி பெற்றவர் ஆவார்.

**கல்லாங்காய் / தட்டாங்கல்:**



இது பெண்கள் விளையாடும் ஒரு விளையாட்டாகும். எவ்வளவு பேர் வேண்டுமானாலும் சேர்ந்து கொள்ளலாம். சோழி, கல், கழற்சிக்காய், சிறிய கூழாங்கல் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை ஆட்டக் காய்களாக, பலகால் வைத்து ஆடும் ஆட்டம். இதில் பல வகைகள் உண்டு. அவை ஒண்ணாங்கல் , மூன்றாங்கல், ஐந்தாங்கல் , ஏழாங்கல், பத்தாங்கல், பலகல் ஆகியவை. ஏழு கற்களைக் கொண்டு ஆடப்படும் ஆட்டத்தில்: ஒண்ணான், இரண்டான், மூன்றான், நான்கான் ஐந்தான், ஆறான், ஏழான், எட்டான், ஒன்பதான், பத்தான் என பத்துப் பிரிவுகள் ஆட வேண்டும். ஒவ்வொன்றுக்கும் எடுக்க வேண்டிய கற்களின் எண்ணிக்கைக்கும் எடுக்க வேண்டிய விதத்திற்கும் விதிமுறைகள் உண்டு. ஒவ்வொன்றும் ஆரம்பிக்கும் போது ஏழு கற்களையும் கீழே விரித்தவாறு போட்டு விட்டு அதில் ஒரு கல்லை தாய்ச்சிக்கல் என கையில் எடுத்துக்கொள்ள வேண்டும். இக்கல்லை மேலே வீசி போட்டுவிட்டு, அது கீழே வரும்போது கீழே உள்ள காய்களையும், மேலே போட்ட காயையும் கீழே விழாமல் பிடிக்கவேண்டும். தொடர்ந்து பத்தையும் தாய்ச்சிக் கல்லை கீழே விட்டுவிடாமல் ஆடிவிட்டால் ஜெயித்ததாகக் கொள்ளப்படும்.

இந்த ஆட்டத்தின் பெயர் ஒவ்வொரு இடத்திலும் மாறுபடுகிறது. இது சுலபமான விளையாட்டு இல்லை. இதில் வெற்றி காண்பது ஒரு சவாலில் வெல்வது போன்றது. ஒவ்வொரு ஆட்டத்திலும் ஒரு காயை மேலே போட்டு அது கீழே வருமுன் கீழே உள்ள காய்களையும் வரும் காயோடு சேர்த்து அள்ளி எடுக்க வேண்டும். அதில் தவறினால், அடுத்தவர் ஆடவேண்டும். இந்த ஆட்டங்களில் ஒவ்வொரு படியிலும் (ஸ்டெப்) வென்று, அடுத்தடுத்த படிகளுக்குச் செல்லலாம். ஆனால் கடினமான பல படிகளைக் கடக்க வேண்டும். இறுதியான படிக்கு வந்த ஆட்டக்காரர் வெற்றி பெற்றவராவார். அறிவுத்திறனும், ஆட்டத்திறனும் கொண்டவர்கள் எளிதில் ஆட்டத்தில் வெல்ல முடியும். இந்த ஆட்டத்தை ஆடும் கிராமப்புறப் பெண்கள் ஒவ்வொரு படிக்கும் பாடிக் கொண்டே ஆடுவார்கள். விளையாட்டின் பொருளையும், முறையையும் இந்தப் பாடல்கள் விளக்குகின்றன. சிறுமிகளுக்கு எளிதான விளையாட்டும், பெண்களுக்கு திறமைக்கு ஏற்ற விளையாட்டுகளும் கொடுக்கப்படுகின்றன. இது ஆட்டத் திறமையை வெளிக்கொண்டு வரும் கடினமான ஒரு ஆட்டம்..

**ஊதுமுத்து :**

புளியங்கொட்டைகளை (முத்துக்கள்) வைத்து நான்கு பேர் ஆடும் ஆட்டம். ஊதுமுத்து என்று



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

கூறப்படும். தமிழக நாட்டுப்புறச் சிறுவர் சிறுமியர் ஆடும் ஓர் விளையாட்டு. (சிறுவயதில் நான் பலமுறை விளையாடியிருக்கிறேன்) இக்காலக் குழந்தைகளுக்கு இப்படி ஓர் ஆட்டம் இருக்கிறது என்பதே தெரியாது.

ஒரு வட்டத்திற்குள் குவியலாக புளி முத்துக்களை வைக்க வேண்டும். முதலாவதாக ஆடுபவர் அந்தக் காய்களை நன்றாக மூச்சை இழுத்து ஊத வேண்டும். அப்பொழுது புளி முத்தின் மீது ஊதுபவரின் வாய் படக்கூடாது.



ஊதுவதால் குவியலிலிருந்து வெளிப்பட்ட முத்துக்களை வேறு எந்த காயின் மீதும் படாமல் அவர் எடுத்துக்கொள்ளலாம். அவ்வாறு எடுக்கும் போது வேறு காய்கள் மீது பட்டு விட்டால் அவருடைய ஆட்டம் முடிந்து அடுத்தவர் ஆடவேண்டும். எல்லா முத்துக்களும் எடுக்கப்படும் வரை இந்தச் சுற்றுக்கள் தொடரும். அதற்குப் பின் யாரிடம் குறைந்த எண்ணிக்கையில் காய்கள் உள்ளதோ அது போல மற்ற ஆட்டக்காரர்களும் போட்டு, அடுத்த ஆட்டத்தை ஆரம்பிக்கலாம். அதிகமான காய்களை ஊதி எடுத்த ஆட்டக்காரர் வெற்றி பெற்றவராவார். இந்த விளையாட்டு நெடுங்காலமாக விளையாடப்படாமல் மறைந்து வருகிறது. இது ஒரு மூச்சுப் பயிற்சி யோகாசன விளையாட்டு. நுரையீரலுக்குப் பயிற்சி தரும் சிறந்த விளையாட்டு.

**முடிவுரை :**

முன்னுரையில் கூறியபடி கிராமங்களில் ஏராளமான பாரம்பரிய விளையாட்டுக்களை, ஆண், பெண், சிறுவர், சிறுமியர் தங்கள் ஓய்வு நேரங்களில் வீட்டின் உள்ளேயும், வெளியேயும் விளையாடுகின்றனர். ஆனால் தற்காலத்தில் கணினி ஆட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் பாரம்பரிய விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் குறைந்துள்ளது. இதற்கு மாறாக ஒரு சில நாடுகளில் உள்ள சில அமைப்புக்கள் பல்லாங்குழி, பரமபதம், தாயம், கட்டம் மற்றும் வெட்டு விளையாட்டுகளுக்குப் புத்துயிர் அளித்துள்ளன. கட்டமில்லாத பல்வேறு பாரம்பரிய ஆட்டங்களை பற்றி சுருக்கம் கருதி கூற முடியாமல் போயிற்று. இங்கு விளக்கிக் கூறப்பட்டுள்ள அரங்க விளையாட்டுக்கள், வெட்டு விளையாட்டுக்கள் பல்லாங்குழி ஆகியவை புத்துயிர் பெற்று வருகின்றன .

எல்லா நாடுகளிலும் பாரம்பரிய விளையாட்டுக்கள் உண்டு. அவரவர் தங்கள் நாட்டு ஆட்டங்களை ஆதரிப்பதன் மூலம் அந்தந்த நாட்டு மக்கள், தங்கள் கலாச்சாரத்தைப் பற்றி அறிவதோடு மட்டுமல்லாமல், அவற்றைப் பாதுகாக்கவும் முடியும். பாரம்பரியத்தை பாதுகாப்பவர்களாகவும் ஆக முடியும். எல்லா நாடுகளிலும் எழுதப் படிக்கத் தெரியாத மக்கள் கூட எளிய பயிற்சியின் மூலம் விளையாட்டுக்களை அறிந்து கொண்டு, முடிந்தால் அடுத்த தலைமுறைக்கும் கற்றுத் தர முடியும். நமது சில விளையாட்டுக்கள் விசேஷ காலங்களிலும், விழாக்களின் போதும் ஆடப்படுகின்றன. சதுரங்க ஆட்டம் நான்கு கைகள் கொண்ட ஆட்டம் என்று பொருள்படும். நான்கு பேர் மட்டும் ஆடக்கூடிய இந்த ஆட்டத்தை வீட்டில் விசேஷ காலத்தில் மேலும் பலர் ஆடக்கூடிய வகையில் கைகளையும், கட்டங்களையும் அதிகரிக்கலாம். இதனால் ஆட்ட நேரம் அதிகரிக்கக்கூடும். குடும்பத்தினரும் மகிழ்ச்சியாக தங்கள் நேரத்தை உறவினரோடு செலவழிக்கலாம். பகடைகள் நெடுங்காலமாக இந்தியாவில் உள்ளது என்பதற்கு, சிந்து சமவெளியில் கிடைத்த பகடைகளிலிருந்தும், கட்ட விளையாட்டுக்கள் பற்றி பர்ஹுத் ஸ்தூபியில் செதுக்கப்பட்ட நான்கு பேர் விளையாடும் கட்ட விளையாட்டும், காய்களும் இந்த ஆட்டங்களின் தொன்மையைக் காட்டுகின்றன. தமிழகத்தில் பழமையான கோயில்களின் கோபுரங்களிலும் கட்டம் மற்றும் வெட்டும் ஆட்ட அரங்கங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

சோணாலு, சோணைக்கட்டம், தாயகரம் போன்ற மிகப் பழைய ஆட்டங்கள் தற்போது அதிகம் ஆடப்படுவது இல்லை. மரம், உலோகத்தால் ஆன தாயக்கட்டைகள் இப்போது கிடைப்பதால் பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட பாய்ச்சிகள் (உடைந்த நான்கு குச்சிகள், ஒரு புறம் தேய்க்கப்பட்ட புளி முத்துக்கள்) தற்போது உபயோகப்படுத்தப்படவில்லை. சோழிகளும், பகடைகளுமே பயன்படுத்தப்படுகின்றன

ஓய்வு நேரங்களில் விளையாடப்பட்டு வந்த இந்த அரங்க ஆட்டங்கள் (போர்டு



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

கேம்ஸ்), பெரிய பரிணாம வளர்ச்சி பெற்று வருகின்றன உலகப் பிரசித்தி பெற்ற சதுரங்க ஆட்டம் இந்தியாவில் தோன்றியது என்பதே பெருமைக்குரிய விஷயமாகும். தமிழகத்தில் ஏராளமான பாரம்பரிய அரங்க விளையாட்டுக்கள் மட்டுமின்றி, அரங்கமில்லாத பல விளையாட்டுகள் வீடுகளிலும், வெளியிலும் ஆடப்படுகின்றன. நம்முடைய சதுரங்க விளையாட்டும், கபடி (சடுகுடு) ஆட்டமும் உலக அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது பெருமைக்குரிய விஷயமாகும். சிறு வயதில் உறவினர்களுடனும், தோழிகளுடனும், பள்ளியிலும் வீட்டிலும், வெளியிலும் அரங்க விளையாட்டுக்களையும், வெளி விளையாட்டுக்களையும் நானும் ஆடியிருக்கிறேன். சில புது விளையாட்டுக்களையும் கற்றுக்கொண்டுள்ளேன். பல இடங்களில் மாணவ மாணவியர்களுக்கு ஆட்டங்களைக் கற்பித்ததோடு மட்டுமல்லாமல் அவர்களையும், பல பெண்களையும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு விளையாடச் செய்துள்ளேன். பல நாடுகளில் நடந்த சர்வதேச அரங்க விளையாட்டு (போர்டு கேம்ஸ்) கருத்தரங்குகளிலும் பங்கு கொண்டு, நமது ஆட்டங்களை பற்றிய ஆராய்ச்சி சொற்பொழிவுகளும் ஆற்றியுள்ளேன். வேறு சில நாடுகளிலும் கருத்தரங்குகளிலும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அளித்துள்ளேன். கனடாவில் இந்திய வம்சாவளி மாணவர், பெண்கள் ஆகியோருக்கு நம் ஆட்டங்களைச் சொல்லிக் கொடுத்ததோடு, போட்டிகளும் நடத்தி இருக்கிறேன். அங்குள்ள பாட்டிமார்கள் இவற்றில் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர்.

நம் பாரம்பரிய விளையாட்டுகளுக்கு புத்துயிர் வந்துகொண்டு இருக்கிறது என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது. இக்கட்டுரையைப் படிக்கும் அனைவரும், தங்கள் அனுபவத்தை திரும்பிப் பார்த்து பல விஷயங்களை அறியலாம். நமது கலாசாரத்தைப் புரிந்து கொண்டு, நமது பாரம்பரிய விளையாட்டுக்களைக் காப்பாற்றுவதற்கும், பரப்புவதற்கும் தமிழகத்தின் பங்கு என்ன என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

---

**– முனைவர் வெ.பாலாம்பாள், முன்னாள் துறைத்தலைவர், வரலாற்றுத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.**

## ஜெனரிக் மருந்துகளை பரிந்துரைக்க மருத்துவர்களுக்கு அறிவுறுத்தல்

பொதுவான மருந்துப் பெயர்களைக் கொண்ட மருந்துகளை சட்டப்பூர்வமாகவும், பெரிய எழுத்துக்களிலும் ஒவ்வொரு மருத்துவரும் பரிந்துரைக்க வேண்டும் என்று இந்திய மருத்துவ கவுன்சிலின் ஒழுங்குமுறை விதிகள் கூறுகின்றன. இது தொடர்பாக இந்திய மருத்துவ கவுன்சில் சுற்றறிக்கைகளையும் வெளியிட்டது.

ஜெனரிக் மருந்துகளின் பரிந்துரையை உறுதி செய்யவும், பொது சுகாதார மையங்களில் வழக்கமான பரிந்துரை தணிக்கைகளை நடத்தவும் மாநிலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அனைவருக்கும் மலிவு விலையில் ஜெனரிக் மருந்துகளை விற்பனை செய்வதற்காக, நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் 9600 க்கும் மேற்பட்ட பிரதமரின் ஜன் அவுஷாதி எனப்படும் பிரதமரின் மக்கள் மருந்தக மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மக்கள் மருந்தகங்கள் தொடர்பாக சுகம் என்ற மொபைல் செயலியும் உள்ளது. மேலும் இத்திட்டம் குறித்த விழிப்புணர்வை மேலும் ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 7 ஆம் தேதி ஜன் அவுஷாதி தினம் கொண்டாடப்படுகிறது.

தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ், பொது சுகாதார மையங்களில் அத்தியாவசிய ஜெனரிக் மருந்துகளை இலவசமாக வழங்க ஆதரவு வழங்கப்படுகிறது.






https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்

–அனில் சகஸ்ரபுத்தே

இந்தியாவில் உள்ள அனைவருக்கும் சமத்துவமான, உயர்தரமான கல்வி எளிதில் கிடைக்கக் கூடிய சூழலை உருவாக்குவதற்காக கல்வித்துறையில் பல தலைகீழ் மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று 2020ஆம் ஆண்டின் தேசியக்கல்விக்கொள்கை வலியுறுத்துகிறது. மேம்படுத்தப்பட்ட மெய்மை, தோற்ற மெய்மை, நீட்டிக்கப்பட்ட மெய்மை, அசை கலை, காட்சி விளைவுகள், விளையாட்டுகள், காமிக்குகள் போன்ற புதிய கற்றல் கருவிகள், செயற்கை அறிவுத் திறன் மற்றும் எந்திரவழிக் கற்றல் ஆகியவற்றின் சக்தியுடன் இணைந்து, கற்றலின் தரம் மேம்படுத்தப்பட்டிருப்பது மட்டுமின்றி, கற்போரின் அனுபவத்தையும் அது அதிகரிக்கச் செய்திருக்கிறது.

17வது நூற்றாண்டில் தொடங்கி, தொழில்நுட்பங்கள் நமது வாழ்க்கை முறையில் பல புரட்சிகளை ஏற்படுத்தி வருகின்றன. தொழில்துறை 1.0 வில் தொடங்கி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் தொழில்துறை 4.0 புரட்சி வரையிலும், பல நூற்றாண்டுகளுக்கு முன் நீராவி எஞ்சின் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து தொடங்கி, இப்போது விண்கலங்கள் தயாரிக்கப்பட்டிருப்பது வரையிலும், தொலைபேசியில் தொடங்கி திறன் பேசி வரையிலும், சாதாரண இணையதளங்கள் மற்றும் 2ஜி இணையத் தொழில்நுட்பத்தில் தொடங்கி, இப்போது நடைமுறைக்கு வந்துள்ள 5ஜி தொழில்நுட்பம் வரையிலும், சாதாரண தனிநபர் கணினியில் தொடங்கி இப்போது பயன்பாட்டில் உள்ள சூப்பர் கணினிகள் வரையிலும் பல புரட்சிகளை தொழில்நுட்பம் செய்திருக்கிறது. தொழில்நுட்ப மாற்றத்தின் வேகம் மனதை வியக்க வைக்கிறது. தொழில்நுட்ப வேகத்திற்கு இணையாக பயணிப்பது மிகவும் கடினமாக உள்ளது. தொழில்நுட்பங்களில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் வீட்டு வசதி, குடிநீர், துப்புரவு, எரிசக்தி ஆதாரங்கள், தொலைத்தொடர்பு, போக்குவரத்து போன்ற நமது அன்றாட வாழ்வின் பல்வேறு அம்சங்களில் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்துவது இல்லை. இன்னும் முக்கியமாக கல்வி, சுகாதாரம், வேளாண்மை ஆகியவற்றிலும் தொழில்நுட்பப் புரட்சிகள் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. ஒரு காலத்தில் கரும்பலகைகளில் சாக்பீஸ்களைக் கொண்டு எழுதுதல், காகிதத்தில் பேனா மற்றும் பென்சில்களைக் கொண்டு எழுதுவதன் மூலம் வழங்கப்பட்டு வந்த கல்வி, இப்போது புரஜெக்டர்கள், எல்சிடி திரைகள், தனிநபர் கணினிகள், மடிக்கணினிகள், சி.டி.க்கள், டிவிடிக்கள், தொலைக்காட்சிகள், ஸ்மார்ட் பலகைகள், இணையதளம், ஆன்லைன் வழிககல்வி, திறந்தநிலை வெளிப்புற ஆதாரத்தளங்கள் ஆகியவற்றின் மூலம் வழங்கப்படுவதன் மூலம், கல்வியை வீட்டு வாசலுக்கே கொண்டுவந்து வழங்குவது சாத்தியமாகியிருக்கிறது. இன்றைய நிலையில், கல்வி எங்கும், எப்போதும், எந்த நபரிடமிருந்தும், எந்தக் கருவிகள் வழியாகவும் கற்கக்கூடிய ஒன்றாகிவிட்டது. படிப்புகள் மற்றும் பாடத் திட்டங்களில் ஏராளமான வாய்ப்புகள் இருப்பதால், அவற்றில் இருந்து நமக்குத் தேவையானவற்றைத் தேர்ந்தெடுப்பது பல்வேறு தருணங்களில் கடினமானவையாக மாறியிருக்கின்றன.

மேம்படுத்தப்பட்ட மெய்மை (Augmented Reality - AR), தோற்ற மெய்மை (Virtual reality - VR), நீட்டிக்கப்பட்ட மெய்மை (Extended Reality XR), அசை கலை (Animation), காட்சி விளைவுகள் (Visual Effects), விளையாட்டுகள் (Gaming), காமிக்குகள் (Comics) போன்ற புதிய கற்றல் கருவிகள், செயற்கை அறிவுத் திறன் மற்றும் எந்திரவழிக் கற்றல் ஆகியவற்றின்ஆற்றலுடன் இணைந்து, கற்றலின் தரத்தை மேம்படுத்தியிருப்பது மட்டுமின்றி, கற்போரின் அனுபவத்தையும் அதிகரிக்கச் செய்திருக்கிறது.

இந்தியாவில் கடந்த 2020ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் தேதி ஏற்றுக்கொள்ளப்பட்ட 2020ஆம் ஆண்டின் தேசியக்கல்விக் கொள்கை, நாட்டில் உள்ள அனைவருக்கும் சமத்துவமான, உயர்தரமான கல்வி எளிதில் கிடைக்கக்கூடிய சூழலை உருவாக்குவதற்காக கல்வித் துறையில் பல தலைகீழ் மாற்றங்களை



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறது. அனைவருக்கும் தரமான கல்வி என்பது பள்ளிக் கல்வியில் 100சதவீத மாணவர் சேர்க்கையை உறுதிசெய்வது, உயர் கல்வித்துறையில் 50சதவீத மாணவர் சேர்க்கையை உறுதிசெய்வது ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். செங்கற்களாலும், சிமெண்டாலும் கட்டப்பட்ட பள்ளிக்கட்டடங்கள், கல்லூரிக் கட்டடங்கள், பல்கலைக்கழகக் கட்டடங்கள் ஆகியவற்றின் மூலமாக மட்டும் இந்த இலக்கை அடைவது மிகவும் கடினமானதாகும். பள்ளிக்கல்வியும், உயர்கல்வியும் பெறுவதில் உள்ள இடைவெளிகளைக் குறைத்து, அனைவருக்கும் கல்வி பெறும் வாய்ப்புகள், கல்வியில் சமத்துவம், தரமான கல்வி, குறைந்த செலவில் கிடைக்கக்கூடிய கல்வி, பொறுப்புடைமை ஆகியவற்றை உறுதிசெய்வதற்கு தொழில்நுட்பத்தாலும், அதன் பயன்பாடுகளாலும் தான் முடியும். அதுமட்டுமின்றி, அரசின் பார்வையில் இருந்து பார்க்கும்போது, இதுதான் செய்யப்படும் முதலீடுகளுக்கு அதிக பயன் கிடைக்கக் கூடிய, குறைந்த செலவுமிக்க முறையாகும்.

இந்தக் கட்டுரையில் இதுவரை குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பங்கள் அனைத்தும் முற்றிலும் புதிதானவை அல்ல; இவை அனைத்துமே கடந்த இரு பத்தாண்டுகளில் ஏதோ ஒரு வடிவத்தில் செயல்பாட்டில் இருந்தவை தான். அப்போது அந்த தொழில்நுட்பங்களின் பயன்பாடு ஒரு குறிப்பிட்ட அளவிலேயே இருந்தது. 2019–20ஆம் ஆண்டுகளில் உலகம் முழுவதும் பரவத் தொடங்கிய கொரோனா பெருந்தொற்று, பிற துறைகளை எவ்வாறு பாதித்ததோ, அதே போல் கல்வித்துறையையும் கடுமையாக பாதித்து, 2020ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒரே நாளில் கல்வி சார்ந்த செயல்பாடுகளை முற்றிலுமாக முடிவுக்குக் கொண்டு வந்தது. அத்தகைய தருணத்தில் டிஜிட்டல் முறைக்கு மாறி, தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, அனைத்து மாணவர்களுக்கும் ஆன்லைன் முறையில் கல்வி கற்பிப்பதைத் தவிர, வேறு மாற்றுவழி எதுவும் இருக்கவில்லை. கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் என அனைத்துத் துறைகளிலும் உலகில் சிறப்பாகச் செயல்படும் நாடுகளில் ஒன்றாக இருந்தாலும் கூட, கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் ஆன்லைன் கல்விமுறைக்கு மாறுவதைத் தவிர, இந்தியாவுக்கும் வேறு வழி இல்லை. கொரோனா காலத்தில் மாணவர் சேர்க்கை, தேர்வுகள், தேர்வு முடிவுகளை அறிவித்தல் போன்றவை ஒரு சில மாதங்கள் தாமதமானாலும் கூட, இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டிருந்த வலிமையான தொழில்நுட்பக் கட்டமைப்பு, செயற்கை இழைத் தொடர்பு வசதி, இணையதளம், செயற்கைக்கோள் வழியாக கல்வி சார்ந்த உள்ளடக்கங்களை வீடுகளுக்கே அனுப்புவதற்கான வசதி ஆகியவற்றின் காரணமாக, இந்தியாவில் மாணவர்களுக்கு கல்வி வழங்குதல் சிறிதளவில் கூட பாதிப்பு இல்லாமல் தொடர்ந்தது. அப்போது தாமதப்பட்ட மாணவர் சேர்க்கை, தேர்வு, தேர்வு முடிவுகளை அறிவித்தல் ஆகியவை கூட இப்போது இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டன. உலகின் பெரும்பான்மையான நாடுகள் ஒரு முழுக் கல்வி ஆண்டையும் இழந்திருந்த போதிலும், இந்தியாவுக்கு அத்தகைய பாதிப்புகள் ஏற்படவில்லை. அதேபோல் இந்தியாவில் உள்ள அனைத்துக் குடிமக்களுக்கும் தடுப்பூசிகள் போடப்பட்டது, கோவின் இணையதளம் வாயிலாக அவர்களுக்கு ஆன்லைன் முறையில் தடுப்பூசி போட்டுக் கொள்ளப்பட்டதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, அவற்றை செல்பேசி வழியாக தரவிறக்கம் செய்ய வசதி செய்யப்பட்டது போன்றவை இந்தியாவின் இன்னொரு சிறந்த சாதனையாகும். இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள தேசிய டிஜிட்டல் கட்டமைப்புகளின் மூலமாகவே இது சாத்தியமானது. இந்தியப் பொருளாதாரத்திலும் கிட்டத்தட்ட இதே நிலைதான் தொடர்ந்தது. உலக அளவில் டிஜிட்டல் முறையில் நடைபெறும் நிதிப்பரிமாற்றங்களில் சுமார் 40சதவீதம் இந்தியாவில் தான் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படியெல்லாம் நடந்ததால் அனைத்துமே திருப்திகரமாகவும், மகிழ்ச்சியாகவும் நடைபெறுகிறது; எந்தச் சவாலுமே இல்லை என்று பொருளா? என கேள்வி எழுப்பினால், நிச்சயமாக இல்லை என்பது தான் பதிலாகும். ஆன்லைன் கற்பித்தல் முறை தொடர்பாக நடத்தப்பட்ட சில ஆய்வுகளின் மூலம் கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் கற்றல் முடிவுகள் மிகவும் மோசமாக இருப்பது தெரிய வந்திருக்கிறது. நகர்ப்புறப் பகுதிகளுக்கும், கிராமப்புறப் பகுதிகளுக்கும் இடையே டிஜிட்டல் இடைவெளி உள்ளது, சிறிய குடியிருப்புகளில் குழந்தைகள் பிணைத்து வைக்கப்பட்டிருந்ததால் உளவியல் சார்ந்த பிரச்சினைகளும், உடல்நலச் சிக்கல்களும் இருந்தன என்பதும் ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது. பல குழந்தைகள் இருக்கும்போது, அவர்களுக்கு இணையதளம் மற்றும்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

செல்பேசிகளைப் பயன்படுத்தும் வசதியும், பயன்படுத்தும் நேரமும் சமமாகக் கிடைக்கவில்லை என்றும் தெரியவந்துள்ளது. ஆனாலும் கூட, இந்தியாவில் செயற்கைக்கோள்கள் மூலம் வீடுகளுக்கே தொலைத்தொடர்புச் சேவைகளைக் கொண்டு செல்வதற்கான வசதி வலிமையாகக் கட்டமைக்கப்பட்டிருப்பதாலும், செல்பேசிகளில் பயன்படுத்துவதற்கான இணையதளத் தரவுக் கட்டணம் மிகவும் குறைவாக இருப்பதாலும், உலகின் பெரும்பான்மையான நாடுகளைவிட இந்தியாவில் நிலைமை சற்று மேம்பட்டிருந்தது என்பது மனநிறைவளிக்கும் செய்தியாகும்.

அனைவருக்கும் தரமான கல்வி, எளிதாகக் கிடைப்பதை உறுதிசெய்ய தொழில்நுட்பம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது? என்பதை நாம் பார்ப்போம். இந்தியாவில் செயல்பாட்டில் இருந்த தொழில்நுட்பம் மூலம் மேம்படுத்தப்பட்ட கற்றலுக்கான தேசியத் திட்டத்தின் ஓர் அங்கமாக 2005ஆம் ஆண்டிலேயே ஐஐடிக்களின் படப்பிடிப்புத் தளங்கள் மற்றும் வகுப்பறைகளில் பொறியியல் பாடங்களை காணொலியில் பதிவுசெய்து, குறுந்தகடுகளாக வெளியிடுவது, சென்னை ஐஐடியின் இணையதளம் மூலம் அவற்றை பதிவிறக்கம் செய்வது போன்ற வழக்கம் நடைமுறைக்கு வந்துவிட்டது. அதன் மூலம் ஐஐடிக்கள் எனப்படும் இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களில் சிறந்த பேராசிரியர்களின் உயர்தரமான விரிவுரைகளை இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் பார்க்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. மாணவர்களுக்கு கல்வி சார்ந்த அதிகாரம் அளித்தலின் முதல் கட்டம் இதுவாகும். அதன் தொடர்ச்சியாக 2008ஆம் ஆண்டில், உயர்தரக் கருவிகள் இல்லாத அனைத்துக் கல்லூரிகளிலும் உருவகப்படுத்துதல் சார்ந்த அனுபவங்களை மாணவர்கள் பெறுவதற்காக மெய்நிகர் ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டன. மெய்நிகர் ஆய்வகங்கள் மூலம் கற்றல் என்பது, அடுத்த நிலை அதிகாரம் அளித்தல் ஆகும். மெய்நிகர் ஆய்வகங்கள் உள்ளிட்டவற்றின் வழியான கல்வி உள்ளடக்கங்களைப் பெறுவதற்காக இந்தியாவின் பெரிய கல்வி நிறுவனங்களுக்கு, 1Gbpsவேகம் கொண்ட இணையதளத் தொடர்பு வசதி ஏற்படுத்தப்பட்டது இன்னொரு முக்கிய மைல் கல்லாகும்.

மாணவர்களுக்கு கல்வி அதிகாரம் வழங்குவதற்கான மேற்குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் தேசிய அளவில், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்வி நிறுவனங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டன என்றால், மாநில அளவில், பல்கலைக்கழக அளவில், சில இடங்களில் கல்லூரிகள் அளவில் கூட ஆன்லைன் கற்றல் தளத்தை உருவாக்குவதற்கும், அதன் வழியாக மாணவர்களுக்குக் கல்வி வழங்குவதற்கும், தனிப்பட்ட காரணங்கள் அல்லது உடல் நலம் சார்ந்த காரணங்களால் வகுப்புகளில் பங்கேற்க முடியாத மாணவர்கள் அந்தப் பாடங்களை அறிந்துகொள்வதைச் சாத்தியமாக்கும் வகையிலும் பல்வேறு வகையான டிஜிட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. திறந்தநிலைக் கல்வி ஆதாரங்கள் அனைவரும் அணுகும் வகையில் இணையதளங்களில் வெளியிடப்பட்டதும், அவற்றை உலகம் முழுவதும் உள்ளவர்கள் இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டதும், கல்வி வழங்குவதில் அடுத்தக்கட்ட அதிகாரம் அளித்தல் ஆகும்.

தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், கற்றல் மற்றும் கற்பித்தல் சூழலை உருவாக்க ஆசிரியர் பயிற்சி என்பது மிகவும் முக்கியமானதாகும். மாநில அளவிலான இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம்நிலைக் கல்லூரிகளில் நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாதது. மிகப்பெரிய குறைபாடாகும். ஆசிரியர்களுக்கான கற்றல் பயிற்சித் திட்டங்கள் அனைத்தும் நேரடியாக நடத்தப்பட்டதால், அவற்றில் பங்கேற்க ஆசிரியர்கள், அவர்கள் பணியாற்றும் கல்வி நிறுவனங்களில் இருந்து விடுப்பு எடுத்துக் கொண்டு வருவது, நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியது, தங்குவதற்கு பெரும் செலவு செய்ய வேண்டியிருந்தது போன்ற பல சிக்கல்கள் உள்ளன. சில பெண் ஆசிரியர்கள் தங்களது குடும்பத்தை விட்டுவிட்டும், குழந்தைகளை விட்டுவிட்டும் பயிற்சிக்காகச் செல்லமுடியாத சூழல் இருந்தது கூடுதல் பிரச்சினைகளை ஏற்படுத்தியது. இதைக் கருத்தில் கொண்டு ஆன்லைன் பயிற்சி வழங்குவதற்காக மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகத்தின் உதவியுடன் அம்ரிதா பல்கலைக்கழகம் எளிமையான தளம் ஒன்றை உருவாக்கியது. அது மிகப்பெரிய அளவில் வெற்றி பெற்றது. அதேபோல், மும்பையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனமும், கரக்பூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமும் இணைந்து ஏற்படுத்திய T10KT ஆன்லைன் பயிற்சித் திட்டமும் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றன.



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

இவற்றின் மூலம் பெருமளவிலான ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்களில் பெரும்பான்மையினர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தொழில்நுட்பம், இணையதள வசதி ஆகியவற்றின் உதவியுடன் தான் இது சாத்தியமானது என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல், அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக்குழுவால் உருவாக்கப்பட்ட அடல் அகாடெமி பயிற்சித் திட்டங்களின் மூலம் செயற்கை அறிவுத்திறன், எந்திர வழிக்கற்றல், ரோபோடிக்ஸ், டிரோன்கள், சைபர் செக்யூரிட்டி, மேகக்கணினி, தரவுப் பகுப்பாய்வு, குவாண்டம் கம்ப்யூட்டிங் ஆகியவற்றில் ஒன்றரை இலட்சத்திற்கும் கூடுதலான பேராசிரியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் உயர்தரத் தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்பட்டு வருவது இன்னொரு வெற்றிக் கதையாகும். அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக, பொறியியல், கற்பித்தல் வழிமுறைகள், பாடத்திட்ட உருவாக்கம், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், தேர்வு வினாத்தாள்களைத் தயாரித்தல், ஆராய்ச்சி, புதுமை உருவாக்கம், கல்வி நிறுவன உருவாக்கம், புதிதாகப் பணியில் சேர்க்கப்பட்ட இளம் ஆசிரியர்களுக்கு அதிகாரம் அளித்தல் ஆகிய எட்டுப் பிரிவுகளில் பயிற்சித் தொகுப்புகளை உருவாக்கியிருக்கிறது.

தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கல்வி வழங்குவதில் மேற்குறிப்பிடப்பட்ட முன்னேற்றங்கள் நடைபெற்று வந்த நிலையில், பெருமளவிலான மக்கள் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய திறந்தநிலை ஆன்லைன் வகுப்பு முறை (Massive Online Open Course - MOOC) 2011ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது. ஸ்டேன்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தின் Coursera, எம்ஐடி எனப்படும் மாசாசூசட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தின் EdX போன்றவை இந்த முறையில் புகழ்மிக்கப் பாடத்திட்டங்களில் சிலவாகும். இந்த வகைக் கல்வியை வழங்குவதில் இந்தியா பின்தங்கிவிடவில்லை. இந்தியாவும், மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறையின் நிதியுதவியுடன் அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக்குழு வழியாக SWAYAM என்ற முழுக்க முழுக்க இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்தை MOOC தளத்தில் வெளியிட்டது. அடுத்தக்கட்டமாக சென்னையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு, MOOC தளத்தில் வெளியிடப்பட்டுள்ள SWAYAM 2.0 பாடத்திட்டத்தில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடங்கள் உள்ளன. இந்தியாவின் மூலை முடுக்குகளில் இருந்து மட்டுமின்றி, உலகில் பல்வேறு வளரும் நாடுகளில் இருந்தும், 3 கோடிக்கும் அதிகமான பயனாளர்கள் இந்தப் பாடங்களை கற்பதற்காக பதிவுசெய்து கொண்டிருக்கின்றனர். இந்தப் பாடத்திட்டத்தில் கலை, அறிவியல், வணிகவியல், பொறியியல், மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு வகையான பாடங்கள் இலவசமாகக் கிடைக்கின்றன. இது மாணவர்களுக்கு கூடுதல் அதிகாரம் அளித்துள்ளது.

மாணவர்களுக்குக் கல்வி அளிப்பது ஒருபுறம் இருந்தாலும், அவர்களின் வேலைபெறும் திறன் மிகவும் குறைவாகவே இருப்பதாக தொழில்துறை அமைப்புகள் அடிக்கடி கூறிவருகின்றன. படிப்பதை அனுபவமாகப் பெறுதல், அனுபவத்தின் வழியாகக் கற்றல், செயல்முறைப் பயிற்சி ஆகியவை மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனை அதிகரிப்பதற்கு மிகவும் அவசியம் என்று கூறப்படுகிறது. எனவே மாணவர்களுக்கு தொழில்துறையுடன் தொடர்பை ஏற்படுத்தி வழங்குவதற்காக தொழில்பழகுநர் பயிற்சிக்கான இணையதளம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த இணைதளத்தில் சிறு, குறு, நடுத்தரத் தொழில்நிறுவனங்கள், சிறிய தொழிற்சாலைகள், பெரிய தொழிற்சாலைகள், புத்தொழில் நிறுவனங்கள் ஆகியவை தங்களிடம் உள்ள தொழில் பழகுநர்கள் வாய்ப்புக்கான அறிவிக்கைகளை வெளியிடும். அந்த வாய்ப்புகளைப் பெற விரும்பும் மாணவர்கள் தங்களின் தன்விவரக் குறிப்பு, திறன்கள், ஆர்வங்கள் உள்ளிட்ட விவரங்களைப் பதிவேற்றம் செய்யவேண்டும். செயற்கை அறிவுத் திறன், தொழில்நுட்ப வழிப் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் மாணவர்களுக்கு இரண்டுமாதங்கள் முதல் ஆறு மாதங்கள் வரையிலான தொழில்பழகுநர் பயிற்சியை பல்வேறு தொழிற்சாலைகளில் இருந்து அந்த இணையதளம் பெற்றுத்தரும். அப்பயிற்சியின் மூலம், மாணவர்கள் தங்களின் திறன்கள், அறிவு ஆகியவற்றை வளர்த்துக் கொண்டு, வேலைவாய்ப்பு பெறும் திறனையும் பெருக்கிக் கொள்வார்கள். தொழில்நுட்பங்களுக்கான தேசியக் கல்விக் கூட்டணி என்ற மற்றொரு தளமும் உருவாக்கப்பட்டுள்ளது. அதில், சிறு மற்றும் பெரு நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்கள் மூலமாக மாணவர்களின் கணினி நிரல்களை எழுதும் திறனை மேம்படுத்துதல், உயர்தர தொழில்நுட்பப் பயிற்சி



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

வகுப்புகள், மொழித்திறன் மற்றும் தொலைத்தொடர்புத் திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்காக செயற்கை நுண்ணறிவுத் திறன் அடிப்படையிலான பயிற்சி வழங்கப்படுகிறது. மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனை அதிகரிக்கவும், தொழில்முனையும் உணர்வைக் கட்டி எழுப்பவும் இதுவும் பெருமளவில் உதவி செய்திருக்கிறது.

இந்தியாவின் ஊரகப்பகுதிகள் மற்றும் தொலைதூரப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் தங்களின் பள்ளிக்கல்வியைத் தாய்மொழியிலேயே கற்றிருப்பார்கள் என்பதாலும், அவர்களின் பெற்றோர் வருமானம் மிகவும் குறைவாக இருக்கும் என்பதாலும், சிறப்பாகப் பயிலும் தங்களின் மகன் மற்றும் மகள்களை உயர்கல்விக்காக நகரங்களுக்கோ, மாநகரங்களுக்கோ அனுப்ப இயலாது என்பதாலும், மொழியும் கல்விக்கட்டணமும் மாணவர்களின் உயர்கல்விக்கு பெரும் தடையாக உள்ளன. உயர்கல்வி வகுப்புகள் இந்திய மொழிகளில் நடத்தப்படுவதை அனுமதிப்பது, உயர்தரமான பாடநூல்களை அனுவாதி என்ற பெயரிலான செயற்கை நுண்ணறிவு கொண்ட திறன் மொழி பெயர்க்கும் கருவி மூலம் மொழி பெயர்ப்பதன் மூலம், கிராமப்பகுதிகளிலும், தொலைதூரப்பகுதிகளிலும் இருக்கும் மாணவர்களுக்கு அவர்களது தாய் மொழியிலேயே உயர்கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரலாம். மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கான பல புதிய தொழில்நுட்பங்களையும் அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மெய்மை (Augmented Reality - AR), தோற்ற மெய்மை (Virtual reality - VR), நீட்டிக்கப்பட்ட மெய்மை (Extended Reality - XR), மெட்டாவர்ஸ் போன்ற தொழில்நுட்பங்கள் உயர்தரமான கல்வி உள்ளடக்கத்தை உருவாக்க உதவுகின்றன. பாடத்தை மாணவர்கள் புரிந்துகொள்வது அதன் மூலம் மிகவும் எளிதானதாக மாறுகிறது.

மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் நிதியுதவியுடன் கரக்பூர் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள தேசிய டிஜிட்டல் நூலகத்திட்டம் கோடிக்கணக்கான நூல்களையும், ஆவணங்களையும் இலவசமாக அணுகும் வாய்ப்பை மாணவர்களுக்கு வழங்குகிறது. அதேபோல், ஆராய்ச்சி இதழ்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், ஆராய்ச்சி அறிக்கைகள் ஆகியவற்றை இலவசமாக அணுகுவதற்கான வாய்ப்பை பல்கலைக்கழக மானியக் குழுவால் உருவாக்கப்பட்டுள்ள தகவல் மற்றும் நூலக வலைப்பின்னல் அமைப்பான INFLIBNETவழங்குகிறது.

மாணவர்கள் தங்கள் படிப்பின் மூலம் பெற்ற அனைத்துப் பட்டங்கள் மற்றும் சான்றிதழ்களை டிஜிலாக்கர் / எஜு லாக்கரில் சேமித்து வைப்பதற்காக அகாடெமிக் பாங்க்ஆப் கிரெடிட் என்ற திட்டம் உள்ளிட்ட சில புதிய டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோல், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பதிவேட்டுத் திட்டம் என்ற புதிய திட்டமும் அறிமுகம் செய்யப்பட உள்ளது. அதில் ஒவ்வொரு ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு தனித்துவமான அடையாளக் குறியீடு வழங்கப்படும். அது ஒவ்வொரு மாணவரின் அகாடெமிக் பாங்க் ஆப் கிரெடிட் ஆவணங்களுடன் இணைக்கப்படும். அதன்படி, மாணவர்களின் சாதனைகள் மற்றும் சான்றுகளை மிகவும் எளிதாகச் சரிபார்த்து சான்றிதழ் வழங்க முடியும். அதேபோல், ஒன் நேஷன், ஒன் டேட்டா போர்ட்டல் என்ற தளத்தில் அனைத்து கல்வி நிறுவனங்களைப் பற்றிய தகவல்களும் சேமித்து வைக்கப்பட்டு இருக்கும். அதன் மூலம், மாணவர்களும், பெற்றோரும் சிறந்த கல்வி நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்க முடியும். இவை தவிர, வெளிநாட்டு மாணவர்களை ஈர்ப்பதற்காக உயர்கல்வித் துறையில் இந்தியாவின் வலிமைகளைத் தெரிவிப்பதற்கான Study in India தளமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

தொழில்நுட்பம் மிக வேகமாக மாறி வருகிறது. அதிநவீன தொழில்நுட்ப மாற்றங்களுடன் இணைந்து பயணிக்கும் நாம், தேசியக் கல்வித் தொழில்நுட்பப் பேரமைப்பின் வழியாக கல்வித்துறையில் தொடர்புடைய மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வி நிறுவனங்கள், மாநில அரசுகள் உள்ளிட்ட பங்குதாரர்களுக்கு புதிய மாற்றங்கள் குறித்த தகவல்களை வழங்கி வருகிறது. அதன் வழியாக, அனைவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய, சமமான, கட்டுப்படியாகும் கட்டணத்தில் ஆன, தரமான கல்வி வழங்கப்படுவதற்கும் 21ஆம் நூற்றாண்டின் அதிகாரம் பெற்ற புதிய இந்தியாவை உருவாக்குவதற்கும் தொழில்நுட்பத்தை நாம் பயன்படுத்துகிறோம்.

---

**–அனில் சகஸ்ரபுத்தே, தலைவர், தேசியக் கல்வித் தொழில்நுட்பப் பேரமைப்பு, புதுதில்லி.**



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

# எமது புத்தகங்கள்

## 75 ஆண்டுகள் 75 திரைப்படங்கள்

இந்திய சினிமாவின் பயணம்

ஆசிரியர்: அமிதவ நாக்

விலை: ரூ 820

ஆங்கில நூல்




எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, பாரம்பரியம், நவீனத்துவம் ஆகிய இரண்டுக்கும் இடையேயான வாயிற்சந்தில் நாடு இருந்த போது, படைப்பு நாட்டத்தின் வாயிலாக வாழ்க்கையிலிருந்து புதிய அர்த்தங்களை உருவாக்குவதற்கு எல்லைகளைத் தள்ளிக் கொண்டு முன்னேறியது இந்திய சினிமா. எழுபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, வாழ்க்கையின் பின் நவீனத்துவப் பார்வையைக் கடந்து செல்லும் நிலையில் இந்திய சினிமா உள்ளது. கடந்த ஏழு தசாப்தங்களில் வெளிவந்திருக்கும் படங்களிலிருந்து எழுபத்தைந்து திரைப்படங்களை எடுத்துக் கொண்டு ஆராய்வதன் மூலம் இந்தப் புத்தகம், திரைப்படங்கள் பிரதிபலிப்பதைப் போன்று இந்தியாவின் சமூக அரசியல் சூழ்நிலையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை எதிரொலிக்க விரும்புகிறது.

குடியரசுத் தலைவர்களின் உரைகள், பிரதமர்களின் உரைகள், இந்தியாவின் வளமான கலாச்சாரம், பாரம்பரியம், நிலமும் மக்களும், கலைகளும் கலாச்சாரமும், தாவரங்களும் விலங்கினங்களும், காந்திய இலக்கியம், சுயசரிதைகள், பேச்சுகள், அறிவியல், குழந்தைகள் இலக்கியம் ஆகியன உள்ளிட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பலவற்றைப் பற்றியும் புத்தக வெளியீட்டுப் பிரிவு நூல்களை வெளியிட்டுள்ளது. புத்தக வெளியீட்டுப் பிரிவிலிருந்து நூல்களை வாங்குவதற்கு www.publicationsdivision.nic.in என்ற இணைய தளத்தை அணுகவும்.

https://www.tnpscthervuthunaivan.com/

ISSN 0971 - 8362
THITTAM (YOJANA - TAMIL)

Published on: 1st Week of Every Month
Posted on : 7th Aug 2023
Posted at Egmore RMS / 1 Patrika Channel

Registrar of Newspapers for India No.24495/74
"Registration" No.TN/CC(S)DN//566/2021-2023
WPP No.: TN/PMG (CCR) WPP No. 150/2021-2023




Published by Shri Sanjay Ghosh, Senior Editor/ Deputy Director on the behalf of DG, Publications Division, Ministry of information and Broadcasting, Govt. of India.
and Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., No. 142, Jani Jan Khan Road, Royapettah, Chennai - 14. Ph: 044-28482441.
Published at 'A' Wing, Ground Floor, Rajaji Bhavan, Chennai - 600 090. Ph: 24465382/24917673.